வெளியீடு 12-3-2007

Issued 12-3-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஆகஸ்ட் 2, 2006—தொகுதி 6—எண் 2**

**Wednesday the 2nd August, 2006 —Volume 6—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**[Legisla]tive Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

**2–8–2006**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1. தகவல் கோரல்—** | | |
| (அ) | உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 223-224, 225-231 |
| (ஆ) | இலங்கை ஆயுதப் படை அதிகாரிகளுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதைத் தடுத்தல் | 224-225 |
| (இ) | குவைத்தில் உயிரிழந்தவர் உடலை கொண்டு வருதல் | 232-233 |
| (ஈ) | மாங்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக வந்துள்ள செய்தி | 233-234 |
| (உ) | சிக்-குன்-குன்யா நோயினால் ஒருவர் தற்கொலை செய்துகொண்டதாக வந்துள்ள செய்தி | 234-235, 237-239 |
| **2. உரிமை மீறல் பிரச்சினை—** | | |
| | அவைக் காவலர்கள் செயல் பற்றி தீர்ப்பு | 236-237 |

| | பக்கங்கள் |
|---|---|
| 3. **மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் , நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு<br>(ஆ) கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 239-408 |
| * மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 239,277, 367-384,386, 392,393 |
| * மாண்புமிகு திரு. எ.வ. வேலு | 256,278, 345-367,388 |
| திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் | 247,260, 278-293 |
| * திரு. டி. செங்குட்டுவன் | 293-307 |
| டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி | 249, 307-315 |
| * திரு. வீ.ஏ.டி. கலியவரதன் | 242,258, 315-323 |
| * திரு. ப. டில்லி பாபு | 240,269-270, 323-331 |
| * திரு. எஸ். இராசசேகரன் | 331-338 |
| திரு. வீர. இளவரசன் | 254, 260, 338-345 |
| 4. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 408-409 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 17, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 2, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்"

ஆணவமின்றி அடக்கமாக இருப்பது பெருமை எனப்படும். ஆணவத்தின் எல்லைக்கே சென்றுவிடுவது சிறுமை எனப்படும்.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் . . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

***Tmt. BADER SAYEED:** Hon. Speaker, during eviction I was badly treated and manhandled . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I will give you my rulings later. Please sit down. Please sit down. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 2

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

*2006-2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12 கூட்டுறவு* (குறுக்கீடுகள்) உட்காருங்கள். I say, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்-குன்-குன்யா நோயால் எனது தொகுதியில் நூர்ஜஹான் என்ற ஒரு பெண் . . .

## (ஆ) இலங்கை ஆயுதப் படை அதிகாரிகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள்மீது சிங்கள இராணுவம் போர் விமானங்கள் மூலமும், தரைவழிப் படைகள் மூலமும் தாக்குதலைத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்த நிலையில் இலங்கை ஆயுதப் படையைச் சேர்ந்த 54 அதிகாரிகளுக்கு கோவையில் உள்ள மத்திய பாதுகாப்புப் படை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் சிங்களப் படைக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதை எப்படி மத்திய அரசு அனுமதித்திருக்கின்றது? இந்தச் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் உள்ளது. உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, நாங்கள் எல்லாம் தெரிவிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

227417
சென்னை-600 009



2006 ஆகஸ்ட் 2]

**• மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களுடைய அந்தக் கேள்வியிலே ஒரு திருத்தம். தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதை எப்படி மத்திய அரசு அனுமதித்துக்கொண்டிருக்கிறது என்று கேட்டார். பயிற்சி கொடுப்பதற்கு அனுமதித்ததே மத்திய அரசுதான். தமிழ்நாட்டிலே பயிற்சி கொடுக்க நாங்கள் யாரும் அவர்களை அழைக்கவில்லை, அனுமதிக்கவும் இல்லை. இந்தப் பிரச்சினை இங்கே எழுந்ததை வைத்து மத்திய அரசு இதில் கவனம் செலுத்தும் என்று நான் நம்புகின்றேன்.

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**•திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து கவன ஈர்ப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு கடிதங்கள் மூலமாகத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். காலதாமதமானதையொட்டி, அவர்கள் சபையில் கேள்வி எழுப்பினால், அவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் தெரிந்துகொண்டு அதற்குரிய பதிலைச் சொன்னால் பரவாயில்லை. அவர்கள் எழுந்தவுடனே "உட்காருங்கள், உட்காருங்கள்" என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினருடைய உரிமை முழுவதுமாகப் பறிக்கப்படுகிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, துறைகளுக்கு அனுப்பப்பட்டு பதில்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றிச் சொல்வது (குறுக்கீடுகள்)—என்னுடைய right-ஐப்பற்றி claim பண்ணுவதற்கு you have no right. Sit down. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) - You have no right.

D
V2,31 A6 P06.62

உட்காருங்கள் முதலில். I say sit down. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என் அனுமதியில்லாமல் யாரும் பேசமுடியாது. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். முதலில் உட்காருங்கள். ஜெயக்குமார் உட்காருங்கள் முதலில். உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) யாருக்கு? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

முற்பகல் 9–35

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள் முதலிலே. உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு தீர்ப்பை வழங்குகிறீர்கள். உட்காருங்கள் என்று சொன்னால், உட்கார வேண்டும், உறுப்பினர்கள். அது கடமை. சபாநாயகருடைய தீர்ப்பை, அது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, உட்காருங்கள் என்றால், உட்கார வேண்டும். அனுமதித்தால்தான் பேசவேண்டுமே தவிர, எல்லோரும் எழுந்துகொண்டு, எல்லோரும் பேசினால், யார் என்ன சொல்கிறார்கள் என்பதும் தெரியாது. எதிர்க்கட்சி தரப்பிலேயிருந்து பேசுவதைப்போல, ஆளுங்கட்சியிலே இருப்பவர்களும் எழுந்து நின்றால், இந்த அவையை எப்படி நடத்த் முடியும்? இதற்கு ஒரு சரியான தீர்ப்பை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில், பொறுப்பாக, உங்களுக்குரிய மரியாதையையும் தந்து நான் பேசிக் கொண்டிருக்கின்றேன். ஆனால், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எங்களை மிரட்டுகின்ற தொனியில், உட்காருங்கள்



என்று, கையை நீட்டிக்கொண்டு பேசுவது, எந்த அளவிற்கு சபை மரபாகும் என்பதனைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சபாநாயகர் அல்லது அவைத் தலைவர், வேகமாகச் சொல்கிற வார்த்தைகளை, மிரட்டுவது போன்ற வார்த்தைகள் என்று சொல்கிறார்கள். மிரட்டுவது என்பது வேறு. அது வெளியிடத்திலே நடைபெறுவது. இங்கே, கூட்டமாக எழுந்து சொல்கிறபோது, தன்னுடைய குரல் கேட்க வேண்டும் என்பதற்காக, உயர்த்தி, வேகப்படுத்திச் சொன்னதைத்தான், அப்படி அவர் கருதுகிறார். இன்னும் சொல்லப்போனால், மிரட்டுவது என்பது, “உட்காருங்கள், உட்காருங்கள்” என்று ஐந்து தடவை சொல்கிறபோது, அதில் தானாகவே வேகம் வந்துவிடும். அப்படிச் சொல்லவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, ஒத்திவைப்புத் தீர்மானமோ அல்லது கவன ஈர்ப்போ இந்த அவையில், துறை அதிகாரிகளுடைய கருத்துகளைத் தெரிந்து சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அமைச்சர்களாகச் சொல்லக்கூடிய செய்திகள் சில உண்டு. இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு உடனடியாகச் சொல்லவேண்டிய ஒரு கடமை. அதை உணரக்கூடிய வாய்ப்பும் அவருக்கு உண்டு. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது, அதிகாரிகளிடமிருந்து பதில் கிடைத்த பின்னர் எங்கள்மூலமாக அவைத் தலைவருக்குக் கிடைத்து, அன்றுதான் எடுக்கப்படும். இதுவரையில் வரவில்லை. ஆகவே, வரும்வரையில் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புகளைப் பற்றியோ, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பற்றியோ, உடனடியாக பதில் வராத நிலையில், உடனடியாக பதில் தாருங்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள், அவர்கள் சொல்கின்ற கருத்துகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டு, ஆய்வில் இருக்கின்றது என்று

ஒரு வார்த்தை சொன்னாலே போதும், பதில் வரவில்லை என்றால். அதற்குக்கூட மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், மறுக்கின்ற தொனியில், உடனடியாக, உறுப்பினர்கள் எழுந்த உடனே, என்ன சொல்லப் போகிறார்கள் என்று அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே, 'உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள்' என்று சொன்னால், இது எந்தவிதத்தில் நியாயம்? சொல்ல வேண்டிய கருத்தை, மக்களுடைய பிரதிநிதிகள், கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் வாக்காளர்களிலிருந்து, பத்து இலட்சம் வாக்காளர்கள் வரை, அவர்களுடைய ஓட்டுரிமையைப் பெற்று, இங்கே அவர்களுடைய பிரதிநிதிகளாக வந்திருக்கின்ற, மக்களின் பிரதிநிதிகள் சொல்லவேண்டிய கருத்துகளைச் சொல்வதற்கு முன்பாகவே, அந்த உரிமை மறுக்கப்படுகின்றபோது, இது எந்தவிதத்தில் நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ அல்லது ஒரு கட்சித் தலைவரோ எழுந்து நிற்கிறபோது, அவைத் தலைவர் அவர்கள், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டுவிட்டு, பதில் சொல்வது ஒரு முறையாக இருக்கலாம். உறுப்பினர்கள் 4 பேர், 5 பேர், ஒன்று சேர்ந்து ஒரு பக்கத்தில் எழுகிறபோதும், இரண்டு பக்கத்திலும் எழுகிறபோதும், அப்படி ஒரு நிலைமை ஏற்படுகிறபோது, ஒவ்வொருவராகச் சொல்லச்சொல்லி, கேட்டுக்கொண்டிருப்பதன்மூலம் அவையை நடத்த முடியாது. நடைமுறைச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு அனைவரையும் உட்காரும்படி அவர் சொல்கிறார்.

*முற்பகல் 9–40*

இரண்டாவது, அவர் அனுமதிக்காமல் பேசுவதற்கு, யாராக இருந்தாலும் அவரிடம் கேட்டுவிட்டுப் பேசுவது என்றால் அனுமதிக்கவேண்டும். அனுமதிக்கப்பட்டு அவர் சொல்லவேண்டும். சொல்ல அனுமதித்துவிட்டு, அவர் பதில் சொல்லவேண்டும். ஆகவே, பொறுமையாக இருந்து, ஓர் உறுப்பினர் மட்டும் எழுந்து அல்லது கட்சித் தலைவர் மட்டும் எழுந்து கேட்கிறபோது, அவைத் தலைவர் அதை அனுமதித்து இந்த முறையைப் பின்பற்றவேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.





**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலுள்ள அனைவருடைய கவனத்திற்கும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டுகாலத்தில் நாங்கள் எத்தனையோ ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள் கொடுத்தோம். அவற்றைப்பற்றியெல்லாம் கேட்கும்பொழுது அன்றைய அவைத் தலைவர், அறையில் வந்து பேசுங்கள் என்று சொல்வார், அல்லது ஆய்வில் இருக்கிறது என்று சொல்வார். 5 ஆண்டுகாலம் ஆய்வில் இருக்கிறது, ஆய்வில் இருக்கிறது என்று சொன்னாரே தவிர, ஒருமுறைகூட எங்களை அனுமதித்ததில்லை. உண்மை என்னவென்றால், அன்றைக்கு நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள், ஆய்வு என்ற பெயரில் ஓய்வில் இருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக்காலத்தில் பேரவைத் தலைவர் நடந்துகொண்டதும், இப்பொழுது பேரவைத் தலைவர் நடந்துகொள்கிற விதத்தையும் கேசட் போட்டு எல்லோருக்கும் காட்ட முடியுமா என்பதை மட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

• **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. செங்கோட்டையன் அவர்களுடைய கேள்விக்கு என்னுடைய பதில், கேசட் போட்டு அல்ல, file–களையே கொண்டுவந்து காட்டுகிறேன். முன்பிருந்த அவைத் தலைவர் எப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு அவருடைய கையெழுத்துபூர்வமான file–களையே கொண்டுவந்து இங்கே காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். அதன் மேல், தீர்ப்பை என்னுடைய அருமை நண்பர் செங்கோட்டையன் அவர்கள் அளிப்பார் என்று நம்புகின்றேன். அந்தத் தீர்ப்பை அவரிடமிருந்து நான் எதிர்பார்க்கின்றேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் பிரதான எதிர்க் கட்சியில் ஒருவர் எழுந்து நின்று பேசுகின்றபொழுது, 'உட்காருங்கள், நடவடிக்கை எடுப்பேன்', 'உட்காருங்கள் நடவடிக்கை எடுப்பேன்' என்று சொல்வது

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2006 ஆகஸ்ட் 2

இதுவரையிலும் மரபிலே இருந்தது இல்லை. எந்த விதியிலே நீங்கள் நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள், எந்த விதி இருக்கிறது என்பதைமட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தினுடைய நடைமுறை விதிகள் மிகத் தெளிவாக, ஒவ்வோர் உறுப்பினரும் இந்த அவைக்குள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை – மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. விதி எண் 87–ல் ஒரு முக்கியமான பிரிவு, "பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர் எவரும் பேசக்கூடாது; உரையாற்றிக் கொண்டிருந்தால், உரையைத் தொடராது உடனடியாகத் தமது இருக்கையில் அமர்ந்துவிட வேண்டும்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த நாட்களில் அநேகமுறை பார்த்திருக்கிறோம். எத்தனைமுறை நீங்கள் எழுந்து நின்றாலும்கூட பேசுகின்றவர்களோ அல்லது கருத்து தெரிவிக்கின்றவர்களோ அமருவதில்லை. அது மட்டுமல்லாமல், எங்களைப்போன்ற முன்வரிசை உறுப்பினர்கள், ஏதாவது முக்கியமான பிரச்சினையைப்பற்றி கருத்துச் சொல்வதற்காக எழுந்து உங்கள் அனுமதியைக் கோரினால்கூட பின்னாலிருந்து வாயில் பேசக்கூடாத வார்த்தைகளையெல்லாம் இங்கே பேசுவதை, நாங்கள் காதில் கேட்கக்கூடாத வார்த்தைகளையெல்லாம் பேசுவதைக் கேட்கிறோம். மூன்று நாட்களுக்கு முன்னால் நானும், எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர்களும்கூட பேசிக்கொண்டு இருந்தோம். இந்தப் பக்கம் உட்கார்ந்திருக்கின்ற உறுப்பினர்களுக்குப் பின்னாலிருந்து வருகின்ற வார்த்தைகளை கேட்கமுடியாது. எனவே, (குறுக்கீடுகள்) இதுதான், இதுதான், இதுதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. எல்லா உறுப்பினர்களும் முதலில் அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் முறை, அதை விட்டுவிட்டு எல்லோரும் ஒட்டுமொத்தமாக எழுந்து நிற்பது என்ன பழக்கம்? அதை முதலில் தவிர்க்க வேண்டும். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எல்லோருக்கும் முதலில் அந்த instruction–ஐக் கொடுங்கள்.



2006 ஆகஸ்ட் 2]

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** எனவே, ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புகளைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே நாம் முடிவு செய்யலாம். அதற்கான பதில் வந்தபிறகு, ஒவ்வொரு வாரத்திற்கு ஒருமுறை கூடுகிறோம் அல்லது இரண்டு நாளுக்கு ஒருமுறை கூடுகிறோம். அதிலே மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் இருக்கிறார். கொறடா இருக்கிறார். அவர்கள் வந்து எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்கலாம் என்று உங்களிடம் கேட்கலாம். மற்ற கட்சி நண்பர்களும், நாங்களும் கொடுத்திருக்கிறோம், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். முதன்முதலில் சிக்–குன்–குன்யா காய்ச்சலைப் பற்றி நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு இந்தச் சட்டமன்றம் துவங்குகின்ற அன்று கொடுத்தேன். ஆனால், பல்வேறு உறுப்பினர்கள் பேசிவிட்டதால், நீங்களும் தேவையில்லையென்று சொல்லிவிட்டீர்கள், ஏற்றுக்கொண்டோம். ஆகவே, இப்படிப்பட்ட நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் மட்டும்தான் இந்த அவை ஓர் ஒழுங்குமுறையில் நடக்கமுடியுமேயொழிய, யாரோ ஒருசிலர் இதை நிர்ப்பந்திப்பது சரியல்ல. அதிலும் குறிப்பாக உங்களைப் பார்த்துச் சொன்ன 'மிரட்டுகிறீர்கள்' என்கிற வார்த்தை அவைக் குறிப்பில் இருக்கவேண்டுமா என்பதை நீங்கள் பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள், பேரவைத் தலைவர், உறுப்பினரைப் பார்த்து, உங்கள்மீது நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள் என்று சொல்வதே தவறு என்ற அடிப்படையிலே இங்கே சொல்லியிருக்கிறார். பேரவைத் தலைவர்மீது இப்படி உறுப்பினர்கள் நேரடியாக குற்றச்சாட்டுச் சொல்லக்கூடாது என்று மரபு இருக்கிறது. ஆனாலும்கூட, இந்த மாமன்றம் என்றைக்குக் கூடியதோ, அன்றிலிருந்து—சென்ற 5 ஆண்டு காலத்திலே, நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னது மட்டுமல்ல, நடவடிக்கை எடுத்து எங்களையெல்லாம் தூக்கிப் போட்டதுதான் வரலாறு என்பது, இந்த நாடே அறிந்த ஒன்று என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 2

## (இ) குவைத்தில் விபத்தில் உயிரிழந்தவர் உடலைக் கொண்டுவருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மூன்று மாவட்டங்களிலிருந்து தங்களுடைய வயிற்றைக் கழுவுவதற்காக வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்ற 16 தமிழர்கள் அங்கே விபத்தில் உயிரிழந்து, உயிரிழந்த அந்த 16 தமிழர்களுடைய உடல்களை இந்தியாவிற்கு, தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்கின்ற அடிப்படையில் தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் அவர்கள், தமிழகத்தினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்கு நான்காவது தினமான இன்று இன்னும் சில மணி நேரங்களிலே, அந்த உடல்கள் தாய் மண்ணிற்கு வருவதற்கான ஏற்பாடு செய்த முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுக்கு, எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல என்னுடைய தொகுதியைச் சேர்ந்த, திரு. எழில் அரசன் என்பவர் ரியாத் என்ற பகுதிக்கு வேலைக்குச் சென்றார். அங்கே அவர் இறந்திருக்கிறார். இறந்தவர் உடலை கொண்டு வந்து தமிழகத்திலே அவர்களுடைய பெற்றோர்களிடத்திலே ஒப்படையுங்கள் என்று இந்திய தூதரகத்திற்கும், அந்த நாட்டினுடைய தூதரகத்திற்கும் நம்முடைய மத்திய அரசுக்கும் தெரிவித்து இத்தனை நாட்கள் ஆகியும், கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் ஆகியும், அந்த உடலைக்கூட அந்தப் பெற்றோர்கள் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, புலம்பெயர்ந்து போய் வேலைக்குச் செல்கின்ற அந்தத் தமிழர்கள் அப்படி இறக்கின்ற நேரத்தில் அவர்களின் உடலை திருப்பி நம்முடைய தாயகத்திற்கு அனுப்புவதற்கான நடைமுறைச் சிக்கல்கள், அந்த அரபு நாடுகளில் இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், இந்தச் செய்திகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று வெளிநாடுகளில் தமிழர்கள் உயிரிழக்கின்றபோது, அவர்களது உடலை உடனடியாக இங்கு கொண்டு வருவதற்கான ஒரு நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2006 ஆகஸ்ட் 2] [திரு. தி. வேல்முருகன்]

அதேபோல, லெபனான் நாட்டிலே போர் ஏற்பட்டபோது, தமிழ்நாட்டிலிருந்து, ஆயிரக்கணக்கான தமிழர்கள், அந்தப் போரினால், குண்டுமழைக்குப் பலியாகிவிடுவார்களோ என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு முன்பாக தமிழகத்தினுடைய நிதியினைச் செலவிட்டு, தாய்த் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து இருக்கிற அந்த நல்ல உள்ளம் படைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டி, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த எழில் அரசனுடைய உடல், விரைவாக தாய் மண்ணிற்குத் திரும்புவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கக்கூடியதுதான். வெளிநாடுகளுக்குச் சென்று வேலை தேடுகின்ற வேதனை, இன்னமும் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்ற வரையில் இந்த நிலை தொடரத்தான் செய்யும். இருந்தாலும், அவ்வப்போது ஏற்படுகின்ற, இந்தத் துன்ப துயரங்களை அகற்றுகின்ற வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அவர் குறிப்பிட்ட எழில் அரசனுடைய உடலை இங்கே கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஈ) மாங்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள் துறைக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னால், இன்று படிப்படியாக அந்தத் துறை சீர்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆனால், நேற்று மாங்காடு காவல் நிலையத்தில் இரண்டு தலைமைக் காவலர்கள் மாமூலை பிரித்துக்கொள்வதிலே அவர்கள், ஒருவருக்கொருவர் கட்டிப்புரண்டு, காவல் நிலையத்திலேயே சண்டையிட்டு, இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் எல்லா காவல் துறை உயர் அதிகாரிகள் மூலமும், அதேபோல உள் துறை செயலாளர் மூலமும், கடுமையான ஓர் எச்சரிக்கை விடுத்து, காவல் நிலையங்களில் இதுபோன்று நடக்கக்கூடிய நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும் இது மாமூலாக நடைபெறுகின்ற காரியம்தான். ஏற்ற நடவடிக்கை உரிய நேரத்திலே எடுக்கப்படும்.

### (உ) சிக்–குன்–குன்யா நோயினால் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குமுன் தினம்கூட, என்னுடைய தொகுதியிலே சோட்டாபாய் என்றவருடைய 14 வயது நிரம்பிய ஓர் இளம்பெண், நூர்ஜஹான் என்ற பெண், சிக்–குன்–குன்யா நோயினால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்திருக்கிறார். இந்த அரசாங்கம் இந்த சிக்–குன்–குன்யா நோயைத் தீர்ப்பதற்கு போதிய மருத்துவ வசதியை ஏற்படுத்தாததால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் தொடர்ந்து தமிழகத்தைத் தாக்கிக்கொண்டு இருப்பதால், என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே மாத்திரம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இன்றைக்கு இந்த சிக்–குன்–குன்யா நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த 2, 3 தினங்களுக்குமுன் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் யாருக்குமே சிக்–குன்–குன்யா நோய் தாக்கப்படவில்லை என்றார். அப்படி என்றால், இந்த நூர்ஜஹான் என்ற பெண்மணி நேற்றைக்கு முன்தினம் சிக்–குன்–குன்யா நோயால் தாக்கப்பட்டு போதிய மருத்துவ வசதி தர இயலாததால் தற்கொலைக்கு உள்ளானார்கள்...

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெடிய விளக்கம் தேவையில்லை. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)





**திரு. பி.கே. சேகர்பாபு:** அது குறித்து மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Short ஆக முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) Reply–யிலே கொடுத்திருக்கிறோம் நிறைய. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எல்லாவற்றையும் சேர்த்துதான் அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) எல்லாவற்றையும் சேர்த்துதான் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தக் கூற்றை காலையிலே பத்திரிகையிலே நான் பார்த்தேன். அப்படி தூக்குப் போட்டுச் சாகவேண்டிய அவசியம் இல்லை. இந்த நோய்க்கு 3 நாளிலே—தூக்குப்போட்டு இறந்ததாகவும், அதற்குக் காரணம் என்ன சொல்கிறார் என்று சொன்னால் வைத்திய வசதிக்குப் பணம் இல்லை. ஆகவே, நான் இறந்துவிட்டேன் என்று சொல்லி இருக்கிறார்கள் இந்தக் காய்ச்சல் வந்தால் அவ்வளவு பெரிய வைத்தியமே இல்லை. பொதுவாக 30 ஆம் தேதி நடந்த நான்கு மாநில சுகாதார அமைச்சர்கள் மாநாட்டிலே பேசுகிற நேரத்திலே, நான்கு மாநிலங்களினுடைய சுகாதார அமைச்சர்களுடைய கணக்குப்படி எங்கேயுமே இந்த சிக்–குன்–குன்யா நோயால் யாரும் இறக்கவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமானால், மஹாராஷ்டிராவிலே எல்லாம் 3 இலட்சம், 4 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். நமக்குதான் குறைவான பாதிப்பு இருக்கிறது. தகுந்த நடவடிக்கை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் நம்முடைய உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டு, சிக்–குன்–குன்யா அவருடைய தொகுதியில் இருப்பதாக அவர் சொல்வது அவருக்கு இருக்கிற பயம். (குறுக்கீடு)

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெடுஞ்செழியன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

[2006 ஆகஸ்ட் 2

## 2. உரிமை மீறல் பிரச்சினை

### அவைக் காவலர்கள் செயல் பற்றி தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.*

*Tmt. BADER SAYEED: Hon. Speaker Sir, Yesterday, I had given a motion of breach of privilege against the Home Minister, who also happens to be the Chief Minister. As I said, on 31st of July, when we were supposed to be evicted, which I did not even know about, some men in white uniform came inside and they pushed me around and manhandled me, stamped my feet very badly and even today my toes are swollen. Let me remind you, Sir, Hon. Speaker, that this involves the dignity of the House. My dignity means the dignity of the House. I speak here not on behalf of myself alone, but on behalf of all women, cutting across all party lines. I think that the Hon. Chief Minister, I request him to see that *இந்த சட்டசபையிலே நீங்கள் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்.* I request you please Sir, to see that the honour, the dignity of this House is maintained. I have been watching for the last few days. Some Members — *சில உறுப்பினர்கள்*—they have been— *கிண்டல் பண்ணுகிறார்கள், கேலி பண்ணுகிறார்கள்.* We, women are...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சம்பந்தமாக நான் ஓர் அறிவிப்புக் கொடுக்கிறேன். *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் ஓர் அறிவிப்புக் கொடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். நான் அது சம்பந்தமாக ஓர் தீர்ப்பு கொடுக்கப்போகிறேன்.*

*'1-8-2006 அன்று சட்டமன்ற உறுப்பினர் திருமதி பதர் சயீத் அவர்கள், உரிமை மீறல் பிரச்சினை குறித்து முன்னறிவிப்பு ஒன்றினைக் கொடுத்திருந்தார்கள். 31-7-2006 அன்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டுக் கொண்டிருந்ததால் அவர்களைப் பலமுறை அவையைவிட்டு வெளியேறும்படி நான் கேட்டுக்கொண்ட பிறகும், எனது ஆணைக்குக் கட்டுப்பட மறுத்து, தொடர்ந்து அவையைவிட்டு வெளியேறாமல், அவையிலேயே உட்கார்ந்துகொண்டு, அவை நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் செயல்பட்டுக் கொண்டிருந்ததால், எனது ஆணைப்படி காவலர்கள் அவர்களை அவையிலிருந்து*



2006 ஆகஸ்ட் 2] [பேரவைத் தலைவர்]

*வெளியேற்ற முற்பட்டனர். ஆனால், உறுப்பினர்கள் அவைக் காவலர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்து அவையில் உட்கார்ந்துகொண்டிருந்ததால், அவர்களைக் கட்டாயமாக அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, இது எந்த விதத்திலும் உறுப்பினர் தனது கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கும் வகையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை எனத் தெரிவதால், இந்த அறிவிப்பிற்கு நான் அனுமதி மறுக்கிறேன். இதற்குமேல் இதில் விவாதம் இல்லை.'*

*முற்பகல் 9-55*

## 1. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (உ) சிக்-குன்-குன்யா நோயினால் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்த அலுவல். 2006-2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீதுவிவாதம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அனுமதி கொடுத்ததற்கு மிக்க நன்றி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சிக்-குன்-குன்யா, அந்த நோயைப் பற்றி, நான்கு மாநிலங்களினுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் சந்தித்துப் பேசினோம், மாநாட்டை நடத்தினோம், அந்த நோயே இல்லை என்ற தகவலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதாவது, அவர் ஏற்கெனவே...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *இல்லை, இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது தவறு. காய்ச்சல் இல்லை என்று சொல்லவில்லை, இறப்பு இல்லை என்று சொன்னோமேயொழிய காய்ச்சல் இல்லை என்று சொல்லவில்லை.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சில புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது*

என்னவென்றால், தமிழகம் முழுவதும் இந்தக் காய்ச்சலால் மிகப் பெரிய அளவில் மக்கள் பாதிப்படைந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன புள்ளிவிவரம் அரசுப் பொது மருத்துவமனைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலாக இருக்கலாம். ஆனால், தனியார் மருத்துவமனைகளில்தான் அதைக்காட்டிலும் 10 மடங்கு, 20 மடங்கு, 30 மடங்கு அந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அரசின் சார்பாக உளவுத் துறை இருக்கிறது. அதன்மூலமாகக்கூட தனியார் மருத்துவமனைகளில் அந்த நோயாளிகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டு, அந்த நோயினுடைய பாதிப்பு இன்றைக்கு மக்களை, தமிழகத்தினுடைய மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது என்பதை மிகப் பெரிய புள்ளிவிவரங்களை எடுத்து, அதனைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை இந்த அரசு செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பகுதியிலே இந்தக் காய்ச்சல் வருகிறது என்று சொல்கிற நேரத்தில், அரசுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு சேர்ந்திருந்து ஒரு யூனிட்டாக உள்ளாட்சித் துறை அதிகாரிகளையும் சேர்த்து வைத்து, இந்தப் பணிகளை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியதைப்போல, தனியார் மருத்துவமனைகளுக்குப் போன செய்திகூட எங்களுக்கு வந்தவுடனே அதையும் நாங்கள் சரிபார்க்கிறோம். இந்தக் காய்ச்சல் உங்கள் தொகுதியில் மட்டுமல்ல, எல்லாத் தொகுதிகளிலும் வருகிறது. வருகிற இடங்களுக்கு எல்லாம் போய் நாங்கள் சரியான முறையிலே இன்றைக்கு அதற்கு ஒரு தீர்வு செய்துகொண்டிருக்கிறோம்.

நான்கு மாநிலங்களின் சுகாதார அமைச்சர்களுடைய கூட்டத்திலே, ஒவ்வொரு மாநிலம் வாரியாக ஆய்வு செய்த நேரத்திலே, இந்தக் காய்ச்சலால் யாருமே இறக்கவில்லை என்று சொல்லி, எல்லா மாநிலங்களிலுமே, நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலுமே இன்னும் துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு வேண்டிய பணிகளைச் செய்கிறோம். இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக மத்திய சுகாதார அமைச்சரை



நாங்கள் பார்த்து, அதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கு இன்னும் கொஞ்சம் பணம் வேண்டும் என்று சொல்ல இருக்கிறோம்; அந்தப் பணிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அவ்வப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனத்தோடு எங்களுக்கு அறிவுரை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

## 3. மானியக் கோரிக்கைகள் 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

– – –

### (அ) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த அலுவல். 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் (குறுக்கீடு) நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.278,72,44,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 81, திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்களை சேர்த்தால் கடும் தண்டனை என்று அறிவித்து, நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1165, திரு. ப. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 94, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள அர்பன் கூட்டுறவு வங்கிமூலம் கல்விக்கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 246, திரு. விடியல் எஸ். சேகர்.



**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து முறைப்படி தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 397, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 550, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள கூட்டுறவுத் துறையில் படித்த இளைஞர்களுக்கு காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்பி பணி நியமனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 568, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள நியாய விலைக் கடையில் சர்க்கரை, அரிசி போன்றவற்றை பாக்கெட்டுகளில் அடைத்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில்

[திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்] [2006 ஆகஸ்ட் 2

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 700, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 815, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் கூட்டுறவுத் துறைமூலம் கூட்டுறவுப் பால்பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 991, திரு. வீ.ஏ.டி. கலியவாதன்.

***திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், ஜம்பை கிராமத்திலுள்ள கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1048, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர்



2006 ஆகஸ்ட் 2] [திரு. கோ. எதிரொலி மணியன்]

தொகுதிக்குட்பட்ட நெடுங்குளம், வடவணக்கம்பாடி கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் உள்ளதால் அதனை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1140, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதியில் மகளிருக்கு சிறு வணிகக் கடன் அதிகமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1490, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1323, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1372, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1092, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி, செங்கல்பட்டு வட்டம், மறைமலை நகர் பகுதியில் உள்ள தென்மேல்பாக்கம் கூட்டுறவு வங்கிக்கு சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1366, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நுகர்வோர் வாணிபக் கிடங்கிற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1352, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் உள்ள கரும்பு விவசாயிகளின் நலனைக் கருதி லாரி வாடகை, வெட்டுக்கூலி ஆகியவற்றை சர்க்கரை ஆலையே ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1334, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் உள்ள கூட்டுறவு வங்கியில் சிறு விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் அதிகமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 202, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள பழங்குடியினர் ஆதிதிராவிடர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *57*, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை உடனே நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *151*, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் விவசாயக் கடன்கள் பெறுவதற்கு நிதி ஒதுக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *31*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயலாளர்களை தேவைக்கேற்றவாறு இடமாற்றம் செய்து சிறந்த



நிருவாகத்தை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1*, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவப் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய பஞ்சகால நிவாரண நிதியை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை- கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *658*, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு வங்கியில் 'டெபாசிட்' செய்த பொதுமக்களின் பணம் திரும்பக் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை- கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *645*, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டையில் உள்ள கூட்டுறவு ஐ.டி.ஐ.-க்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 360, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய கடல் மீனளத் திட்டத்தின்கீழ் NCDL மூலமாக, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மீனவர்கள் தொழில் செய்ய வேண்டி வலை, கட்டுமரம், FRP கட்டுமரம், வள்ளம் (உட்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்ட FRP கட்டுமரங்கள், வள்ளங்கள்), போன்றவைகளை TAFCOFED மூலமாக மீனவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டு நிலுவையில் உள்ள கடன்கள் (வட்டி உட்பட) தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 372, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதி, கூட்டுறவு கடன் பெரிய விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்தது போல, விவசாயத்திற்கு நகைக்கடன் 12 சதவிகிதம் பெற்றவர்களுக்கு நகைக்கடன் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,42,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.756,68,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,72,44,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 373, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,546,44,34,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 300,00,00,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1021, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரேஷன் கடைகளில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்கவும் கோடவுன்களிலிருந்து ரேஷன் கடைகளுக்கு சரியான எடையுடன் அரிசி மூட்டைகள் வழங்குவதைக் கண்காணிக்கவும், ஒவ்வொரு கடைக்கும் அனைத்துக் கட்சிக் குழுக்களை அமைக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாபபுத் துறை-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,546,44,34,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 300,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1090, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள பல இடங்களில் நியாய விலைக் கடைகளுக்கு நிரந்தர கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,546,44,34,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 300,00,00,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 411 முதல் 440 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்தப் பேரவையிலே படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையிலே அவற்றிற்கு விளக்கமாகவும், தெளிவாகவும் பதில் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இதிலே நிறையப் பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. இரண்டு மானியக் கோரிக்கைகளும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேலாகாமல் உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதலாவதாக திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களைப் பேச அழைக்கின்றேன். திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியினுடைய அங்கத்தினர் என்கின்ற முறையில் தமிழகத்தின் முக்கியமான உணவு மற்றும் கூட்டுறவுத் துறை, நாட்டு மக்களுடைய ஜீவநாடியாக கோடிக்கணக்கான மக்களோடு தொடர்புடைய இந்த உணவு மற்றும் கூட்டுறவுத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீது 13-வது சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த இரண்டாவது மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியினைக்கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) நீதி வழுவாத நெடுஞ்செழியப் பாண்டியனாக நின்று, ஆளுங்கட்சிக்கு ஒரு காதாகவும், எதிர்க்கட்சிக்கு ஒரு காதாகவும், நாட்டு மக்களை உங்களுடைய இதயமாகவும் கருதி நீங்கள் சம நீதி வழங்குவீர்கள் என்கின்ற

@@ 441 முதல் 469 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நம்பிக்கையோடு உங்களை ஒரு மிகப்பெரிய நீதிப் பேரரசராக எண்ணிக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

தமிழகத்திலே வரலாறு காணாத வகையிலே 5 ஆண்டுகாலம் பொற்கால ஆட்சி செய்து, தமிழ்நாட்டு மக்களுக்கு வரலாற்றிலே முதல் முறையாக 38 இலட்சம் புதிய குடும்ப அட்டைகளை விநியோகித்து வரலாறு படைத்தவர் எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டு காலம் இல்லாத அளவிற்கு 2001, 2002, 2003, 2004 வரை கடுமையான வறட்சி தமிழகத்தை வாட்டியபொழுது மேட்டூர் அணையோடு, தமிழகத்திலே இருக்கிற குளம், குட்டைகள் எல்லாம் காய்ந்து போனபொழுது தமிழ்நாட்டு மக்களுடைய வயிறு காயாமல், ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையிலே, விலைவாசி ஏற்றமில்லாத வகையிலே, உணவுப்பொருள்கள் கிடைக்கத்தக்க வகையிலே, புதிய உணவுக் கொள்கையைப் படைத்து, வரலாறு படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு ஒரு புதிய உணவுக் கொள்கையை தமிழகத்திலே அறிமுகப்படுத்தினார்கள். நம்முடைய மாநிலத்தினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசினுடைய agent-ஆக இருந்து பணியாற்றும் என்று அந்த நேரத்திலே சொன்னபோது, நம்முடைய எதிர்க்கட்சிகள் எல்லாம் மிகக் கடுமையாக ஆட்சேபனை செய்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அன்றைக்கு இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் கட்சி எல்லாம் மத்திய அரசினுடைய agent-ஆக நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்படக்கூடாது; தமிழ்நாட்டினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் தனியாக உணவுப் பொருட்களை கொள்முதல் செய்யவேண்டுமென்று வலியுறுத்திப் பேசினார்கள்.

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேகூட, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை அ.தி.மு.க ஆட்சி இந்திய உணவுக் கழகத்தினுடைய முகவராக மாற்றி, நேரடிக் கொள்முதல் நிலையங்களை மூடிவிட்டு, விவசாயிகளின் வயிற்றில் அடித்த நிலைமை மாற்றப்பட்டு மீண்டும் நுகர்பொருள் வாணிபக் கழகமே நேரடிக் கொள்முதல் நிலையங்களில் ஈடுபட வழிவகை காண்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று சொல்லுகின்ற

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உணவு மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, "தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்கிறது. இக்கொள்முதல், இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக மேற்கொள்ளப்படுவதால் 'பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம்' என்று இது அழைக்கப்படுகிறது" என்று மீண்டும் எங்களுடைய அம்மா அவர்கள் கொண்டு வந்த முறையைத்தான் நீங்கள் கையாண்டு இருக்கிறீர்களே தவிர, நீங்கள் உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னதை, விவசாயிகளுக்கு நீங்கள் செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது, நாட்டு மக்களுக்கு நீங்கள் கொடுத்திருக்கிற மிகப்பெரிய ஏமாற்றம் என்று சொல்லிக்கொள்கிற நேரத்தில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்கள்கூட மத்திய அரசினுடைய நேரடிக் கொள்முதல் நிலையங்களை மூடிவிட்டு, தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகம் தனியாக நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னார்கள். இன்றைக்கும் அதை அவர்கள் வலியுறுத்திச் சொல்வார் என்று கருதுகிறேன். மாநிலத்தினுடைய விவசாயிகளுடைய சார்பாக, அனைத்திந்திய அண்ணா திமுக. ஆளுகின்ற நேரத்திலே இருந்தபொழுது அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னென்ன சொன்னார்களோ அவை அனைத்திற்குமான ஆதாரங்களை, புத்தகங்களாக நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். இன்றைக்கும் அதே நிலையிலே நீங்கள் இருக்கவேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குவதாக வர்ணித்துச் சொன்னீர்கள். நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம். அதே நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகம் முழுவதும் வழங்கப்படுகின்ற அந்த அரிசியினுடைய தரம் மிகச் சிறப்பாக இருக்கும் என்று சொன்னீர்கள். தரமான அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்று சொன்னீர்கள். அரசியலாக்க நான்



விரும்பவில்லை. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற 28 ஆயிரம் நியாய விலைக் கடைகளிலே வழங்கப்படுகின்ற அரிசி மக்கள் சாப்பிடுகிற தரத்திலே இல்லை என்பதற்கு அத்தாட்சியாக, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் கோவை தங்கம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் அண்ணன் பொங்கலூர் பழனிசாமி அவர்களும் பேசிய பத்திரிகைக் குறிப்புகளை உங்கள் மூலமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் அனுப்பிவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 10–20

அதேபோல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று தமிழகத்தினுடைய மக்களுக்குப் புதிதாக வழங்கப்பட்ட 38 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு, மண்ணெண்ணெயைப் பெற்றுத் தருவதற்காக கோரிக்கை வைத்ததாகவும், 16 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கிவிட்டதாகவும் சொன்னார்கள். ஆனால், இன்று வரையிலே அந்த 16 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் பெறப்பட்டு உள்ளதா? நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு உள்ளதா என்பதனைத் தயவுசெய்து இங்கே இந்த அவையிலே மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகம் முழுவதும் புரட்சித் தலைவி (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். அப்புறம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொங்கலூர் பழனிசாமி.

***திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தருகிறார்கள். எந்தக் கூட்டத்திலும் நாங்கள் அப்படி பேசவில்லை. நாங்கள் பாராட்டிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். உண்மையிலேயே நல்ல அரிசி கோவை மாவட்டத்திலே வழங்கப்படுகிறது.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைக் குறிப்பு உங்களிடத்திலே இருககிறது. அந்தக் கூட்டத்திலே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள் கோவைக்கு வந்து ஆய்வு நடத்தியபோது, அந்தக் கூட்டத்திலே நான் கலந்துகொண்டேன். அந்தக் கூட்டத்தில் இதற்கு முன்பு நடைபெற்ற 5 ஆண்டுகால ஆட்சியில், இது மாதிரியான ஓர் ஆய்வு நடைபெறவில்லை என்பதை நான் மனதாரப் பாராட்டி உள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்களும் இதுமாதிரியான சிறப்பான ஆய்வினை நடத்தினார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பாக, மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய தலைமையில், கோவை மாவட்டத்தில் அடிக்கடி இப்படிப்பட்ட ஆய்வுகள் நடைபெறுகின்றன என்பதை மிக மனதார நான் பாராட்டியதோடு, வால்பாறையைப் பொறுத்தமட்டில் எல்லா ரேஷன் கடைகளிலும் நல்ல அரிசியை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்று அந்தக் கூட்டத்திலே நான் எடுத்துரைத்து, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் மனதார பாராட்டி உள்ளேன். அதுவும் பத்திரிகையிலே வந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், (குறுக்கீடு) ஜெயக்குமார், உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டு இருக்கிறார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டிய கருத்தை அவர் சொல்வார். நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு). உங்கள் உறுப்பினர்தானே பேசிக்கொண்டு இருக்கிறார். சொல்ல வேண்டிய கருத்தை அவரைச் சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த ஒரு பத்திரிகை மட்டும் உங்களுக்குக் கொடுத்து இருக்கிறேன். ஆங்கிலப் பத்திரிகை உள்பட அனைத்துப் பத்திரிகைகளும் என்னிடத்திலே இருக்கின்றன. கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே Minutes புத்தகம் இருக்கிறது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் சட்டமன்றத்தினுடைய விதி முறைகளிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளிலே எந்தச் செய்திகள் வந்தாலும் இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும், அவர்கள் எழுந்து அதை மறுத்துவிட்டால், அதைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது விதி. எனவே, பத்திரிகைகளிலே என்ன வந்தது என்பது முக்கியம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கம் அளித்தால் அதை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு கூட்டத்தில் நடந்த குறிப்புகள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரினுடைய அலுவலகத்தில் இருக்கிறது. அங்கே நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மக்களுக்கு உண்ணும் தரத்திலே நல்ல அரிசியைக் கொடுக்க வேண்டும். 2 ரூபாய்க்கு அரிசி என்று சொல்லி, அதை மக்கள் உண்ணமுடியாத நிலையிலே அரிசியைத் தரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது நான் நுழைய விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே விவசாயிகளுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்ட அலுவலகத்திலே இந்த சட்டப் பேரவை உறுப்பினர்களையும், அரசு அலுவலர்களையும் அழைத்துக்கொண்டு ஆய்வு செய்தபோது, எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் வந்தார்கள். அப்போது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் வந்து தங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். சொல்கிறபோது இந்த அரிசிப் பிரச்சினை வந்தது. அந்த அரிசிப் பிரச்சினையிலே நான் ஏற்கெனவேகூட இந்த மாமன்றத்தில் சொல்லி இருக்கிறேன். நமக்குத் தேவையான அரிசியை நாம் மத்திய உணவுக் கழகத்திலிருந்து வாங்குகிறபோது

ஆந்திராவிலிருந்து அரிசியை அனுப்புகிறார்கள், சதீஷ்கர் மாநிலத்திலே இருந்து அரிசியை அனுப்புகிறார்கள். அப்படி ஆந்திர அரிசியைப் பார்க்கிறபோது கொஞ்சம் வெண்மையாக இருக்கும். சதீஷ்கர் மாநிலத்தில் இருந்து வரும் அரிசியைப் பொறுத்தளவுக்குக் கொஞ்சம் மங்கலாக இருக்கும். கொஞ்சம் பழுப்பு நிறமாக இருக்கும்.

*முற்பகல் 10–25*

அவையெல்லாம் புதிய அரிசி தான், சுவையான அரிசிதான் என்று அங்கே நான் சொல்லுகிறபொழுது முன்னாள் கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சரும் இந்நாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஜெயராமன் அவர்கள், உண்மைதான் சதீஷ்கர் மாநில அரிசி நல்ல சுவையாகத்தான் இருக்கும் அது புதிய அரிசிதான் என்று எனக்கே support–ஆகத்தான் அங்கேகூட பேசிக் கொண்டிருந்தார், ஆய்வுக் கூட்டத்திலே. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், ஏற்கெனவே அவர் அமைச்சராக இருந்தார் அந்த சதீஷ்கர் மாநில அரிசியைப் பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே, அவர்கூட சதீஷ்கர் அரிசி புதிய அரிசிதான் நன்றாகத்தான் இருக்குமென்று சொல்லி விட்டு, இருந்தாலும் ஒருசில கடைகளிலே கொஞ்சம் பழைய அரிசி இருக்கிறது அதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப்போது நான் திரும்பச் சொன்னேன் 3 ஆம் தேதி தான் ஜூன் மாதம் இந்தத் திட்டம் முதன்முதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தாலே துவக்கப்பட்டது. 2 ஆம் தேதி அதிகாரிகளுக்கு எல்லாம் நாங்கள் ஆணைப் பிறப்பித்திருக்கிறோம். மாவட்ட நிருவாகத்திற்கு ஆணைப் பிறப்பித்திருக்கிறோம். பழைய அரிசி அந்த அரசாங்கத்தின் மூலமாக ஏதாவது வாங்கி வைத்திருந்தால், அந்த அரிசியை எடுத்து விட்டு புதிய அரிசியை, தரமான அரிசியை வாங்கி வைக்க வேண்டுமென்று நாங்கள் அறிவுறுத்தியிருக்கிறோம், அதற்கான கடிதத்தையும் அனுப்பியிருக்கிறோம் என்பதையும் அன்றைக்கு நான் சொன்னேன். அதையெல்லாம் கேட்டுவிட்டு, பாராட்டியவர் பத்திரிகையில் செய்தி வந்தால் தங்களுடைய தலைமை ஏதாவது சொல்லி விடுமோ என்கின்ற பயத்தின் காரணத்தால் அப்படி பத்திரிகைக்கு இவர் செய்தி கொடுத்திருக்க வேண்டுமேயொழிய, அங்கே பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தரமான அரிசி இருப்பதாகத்தான் ஒத்துக்கொண்டார்கள்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய நீண்ட விளக்கத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். நான் கேட்பது, இதற்கு முன்பு நான் ஒரு கேள்வி கேட்டேன். நெல் கொள்முதல் பற்றிய கேள்விக்கு நீங்கள் இதேபோன்ற ஒரு விளக்கம் கொடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்கள், இரண்டு அமைச்சர்கள் பதிலுரையிலே சொல்ல வேண்டுமென்று பணித்திருக்கிற காரணத்தினால், அதற்கெல்லாம் இறுதியாக என்னுடைய பதிலைத் தருகிறேன் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக கூட்டுறவு மானியத்தின் மீது ரூ. 6,866 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாக கருத்துகள் பத்திரிகைகளில் சொல்லப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 6,866 கோடி என்பது புள்ளிவிவரப்படி சரியாக எடுக்கப்பட்ட கணக்குதானா அந்தத் துறையினுடைய அமைச்சராக நான் இருந்தவன் என்கின்ற வகையில் எனக்கு வந்த குறிப்புகளின் அடிப்படையிலே, 2004 டிசம்பர் முதல் 2006 ஏப்ரல் மாதம் வரை வாங்கிய கடனைத் திருப்பி கட்டியவர்களும் சேர்த்து, வட்டியோடு வாங்கிய கடனைத் திருப்பி கட்டியவர்களும் சேர்த்து, குறுகிய கால பயிர்க் கடனாக மற்றும் நீண்டகால பயிர்க் கடனாக, மத்திய கால பயிர்க் கடனாக வழங்கப்பட்ட கடன் தொகையினுடைய தொகை, கடனை திருப்பிச் செலுத்தியவர்களோடு சேர்த்து, 6,465 கோடியே 51 இலட்சம் ரூபாய் என்பதுதான் என்னுடைய குறிப்பு. இதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னிடத்திலே இருக்கிற கோப்புகளை திரும்பப் பெற்று இந்த ரூ. 6,866 கோடி என்பது தவறாக இருக்கலாம். கடனைத் திருப்பிக் கட்டியவர்களோடு சேர்த்து ரூ. 6,465.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, அது தவறாக இருந்தால்தான் பைலை வாங்கி திருத்த வேண்டும். தவறு அல்ல.

உண்மைக்குப் புறம்பாக அவர் பேசிக் கொண்டிருக்கிறார் அதுதான் உண்மை. அறிக்கையிலே வந்திருப்பதுதான் உண்மை.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுகூட சரியாக இருக்கலாம். இதைப்பற்றி நீங்கள் ஒரு வெள்ளை அறிக்கையாகக்கூட இந்த அவையிலே வைக்கலாம். எவ்வளவு கடன் நிலுவையிலே நாட்டு மக்களிடத்திலே இருக்கிறது, எவ்வளவு கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது, எவ்வளவு பேர் பயன்பட்டார்கள், அதில் சிறு குறு விவசாயிகள் எத்தனைபேர் என்கின்ற அந்த விவரமான அறிக்கைளை ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிவித்தது, உறுப்பினர்கள் எல்லோரும் பேசியதற்கு பிறகு என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளிக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதை நான் விளக்கமாக தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது தன்னுடைய பதிலுரையிலே விவரத்தைத் தெரிவிக்கலாம். எங்களைப் பொறுத்தவரையிலே நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தக் கடன் தொகையானது ரூ. 6,866 கோடி என்பது தவறு என்றும் ரூ. 6,465 கோடி என்பதுதான் மொத்தமாக கடனை திருப்பிக் கட்டியவர்கள் தொகையும் சேர்த்து என்பதுதான் என்னுடைய குறிப்பு என்பதையும் சொல்லிக் கொண்டு, அடுத்தபடியாக நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அனைத்து விவசாயிகளுக்கும் கடன் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அதிலே பல கண்டிஷன்களை போட்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு) அந்த கண்டிஷன்களை எல்லாம், நிபந்தனைகளை எல்லாம் நீக்கி விட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** உட்காருங்கள். நீங்கள் அப்புறம் சொல்லுங்கள். (குறுக்கீடு)



**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு) எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. பேசுவதற்கு. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 94-ன்கீழ் நான் ஒரு கேள்வியை உங்கள் மூலமாக கேட்க ஆசைப்படுகிறேன். விதி எண் 94-ன்கீழ் 'அவையில் ஆய்வில் இருக்கும் பொருள் பற்றி ஏதேனும் விளக்கம் பெறுவதற்கோ அல்லது வேறு தகுந்த காரணத்திற்காக எந்த ஓர் உறுப்பினரும் வேறு உறுப்பினரிடம் பேரவைத் தலைவர் மூலமாக வினாவினைக் கேட்கலாம்.' இந்த விதியின்கீழ்தான் நான் எழுந்து நிற்கிறேன்.

*முற்பகல் 10-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ததைப் பற்றி இரண்டு, மூன்று நாட்களாக இந்த அவையிலே விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இங்கே சட்டமன்றத்திலே பேசிய முன்னாள் முதலமைச்சரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் நேற்றைய முன்தினம் பேசினார்கள். நம்முடைய நிதியமைச்சரும் பேசினார்கள். இன்று முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சரும் பேசுகிறார். இதிலே எங்களுக்கு ஒரு சந்தேகம். இந்த அரசு மிகத் தெளிவாக 6,866 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பட்டவர்த்தனமாக, தெளிவாக புள்ளிவிவரங்களோடு விளக்கியிருக்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு முன்தினம் இந்த அவையிலே பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அதிலே தாங்கள் தள்ளுபடி செய்தது 1,435 கோடி ரூபாய் என்ற ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மறுத்து, இல்லை, உங்களுடைய ஆட்சியின்போது தள்ளுபடி செய்யப்பட்டது (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கீடு இருக்கக்கூடாது (குறுக்கீடு) உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார் அல்லவா ? உட்காருங்கள். (குறுக்கீடு) ஜெயக்குமார், உட்காருங்கள. அவருக்கு பேசுவதற்கு அனுமதி கொடுத்துதான் அவர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு)

[2006 ஆகஸ்ட் 2

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு நிதி அமைச்சர் பேசுகின்றபோது அப்படியாக தள்ளுபடி செய்யப்பட்டது வெறும் ரூ.310 கோடிதான் என்று அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்தால் நாளை உரிமை மீறல் பிரச்சினை வருவதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இன்று பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏற்கெனவே கட்டப்பட்ட கடனையும் சேர்த்துதான் இந்த 6,465 கோடி ரூபாய் என்று சொல்கிறார். நான் கேட்கிறேன், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது உண்மையா அல்லது அவரது கட்சியைச் சார்ந்த இந்த உறுப்பினர் சொல்வது உண்மையா? அதை இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்த அவைக்குத் தவறான தகவல் தந்தால் அதை உரிமை மீறல் குழுவிற்கு நீங்கள் அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது, யார் சொல்வது உண்மை என்று தெரிய வேண்டுமென்று கேட்டார்கள். உண்மை தெரியாத காரணத்தால்தான் இந்த வாதங்களே நடைபெறுகின்றன. நாங்கள் தந்திருக்கிற புள்ளிவிவரம் அரசாங்கத்தில் உள்ள திட்டவட்டமான புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறோம். அவர்கள், மாறாக அவர்களுடைய கருத்துப்படி சற்று வேறுபட்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார்கள். இறுதியாக தொடர்புடைய அமைச்சரும் பதில் சொல்லவிருக்கிறார். கடந்த 5 ஆண்டு காலத்தில் கடன் தள்ளுபடி என்பது மூலதனக் கடன் அல்ல, முதல் கடன் அல்ல, வட்டித் தள்ளுபடி மட்டும்தான் 5 ஆண்டு காலத்தில் 403 கோடி ரூபாய் தள்ளப்பட்டதாக புள்ளிவிவரங்கள் பேசுகின்றன. அது தவறாக இருந்தால்கூட நாங்கள் திருத்திக்கொள்ளத் தயார். தள்ளப்பட்டது 5 ஆண்டுகளில் வட்டி மட்டும், வட்டியும் அபராத வட்டியும் சேர்த்து 403 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க வந்த கேள்வியானது, சில விதிமுறைகளை–



2006 ஆகஸ்ட் 2] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

–7 விதிமுறைகளை கடன் வழங்குவதற்காக இந்த அரசு சுற்றறிக்கையாக அனுப்பியுள்ளது. அந்த சுற்றறிக்கை இந்த விதிமுறைகள் எல்லாம் இரத்தாகிவிட்டன என்று அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் நீங்கள் அனுப்பிவிட்டதாகச் சொன்னீர்கள். இதுவரை எந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாயால் மட்டும் சொல்லவில்லை. அதற்கான ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதையும் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வரை இந்தச் சுற்றறிக்கையானது கிராமப்புற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சென்றடையவில்லை என்பதைச் சொல்லி, அடுத்த விவரத்திற்குச் செல்ல நான் கடமைப்பட்டுள்ளேன். இன்றைக்கு கடன் வழங்கப்படுகிறது, கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னால், குறுவை சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, எல்லா இடங்களிலும் நாற்று நடவு நடந்து கொண்டிருக்கிறது. சற்றேறக்குறைய தமிழகம் முழுவதும் எவ்வளவு கோடி ரூபாய் கடன் வழங்கியிருக்கிறீர்கள்? மாவட்ட வாரியாக, ஒவ்வொரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் எவ்வளவு கடன் வழங்கியிருக்கிறது என்ற விவரத்தைக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிடலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையில் அறிவிக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject–க்குப் போங்கள். 18 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது மாவட்ட வாரியாகச் சொல்லலாம். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்த நேரம் 10 நிமிடங்கள். ஆனால், நீங்கள் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அதேபோல நம்முடைய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் டெபாசிட் பெற்றிருக்கின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் டெபாசிட் பெற்றிருக்கின்றன. Urban வங்கிகள் டெபாசிட் பெற்று தங்களிடத்திலே உபரியாக இருக்கக்கூடிய பணத்தை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே கொண்டு சென்று சேர்த்துள்ளன. இன்றைக்கு அந்தப் பணமெல்லாம் விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது கடந்த காலத்திலே. இன்றைக்கு அவையெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடு) ஆனால், இன்றைக்கு டெபாசிட்தாரர்கள் தங்களுடைய...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஆட்சி அமைந்து 80, 81 நாட்கள்தான் ஆகின்றது என்று கருதுகின்றேன். இவையெல்லாம் எவ்வளவு நாட்களுக்கு முன்னால், யாருடைய ஆட்சியில் செய்யப்பட்டிருக்கிறது என்பதை உளமாரத் தெரிந்து இந்த அவையில் தெரிவிக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

*முற்பகல் 10-35*

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெபாசிட் எல்லாம் வாங்கப்பட்டது, 2001 ஆம் ஆண்டுக்கு முன்பு. நாங்கள் அந்தத் துறைக்கு — அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப்பிறகு 1,500 கோடி ரூபாய் டெபாசிட்டை படிப்படியாக குறைத்திருக்கிறோம்; அதற்கெல்லாம் கோப்புகள் உள்ளன. பல்வேறு நிபந்தனைகளை டெபாசிட் பெறுவதற்காக நாங்கள் நிர்ணயித்து பொதுமக்கள் நாளையதினம் ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காகப் பாதுகாப்பு செய்திருக்கிறோம். நான் கேட்பது, யார் காலத்திலே வழங்கப்பட்டதோ, இப்போது டெபாசிட் செய்திருக்கிறவர்கள், திருமணம் செய்ய வேண்டும் என்பதற்கும், வீடு கட்டுவதற்கும் பல்வேறு தேவைகளுக்குப் பெறப்போகிற நேரத்தில், பட்ஜெட் முடிந்தவுடன் பணம் வந்துவிடும் கொடுத்துவிடுவோம் என்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் Urban வங்கிகளிலும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.



ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் டெபாசிட்டை பெறுவதற்கு பொதுமக்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விவரம். தி.மு.க.-வினுடைய தேர்தல் அறிக்கையிலே, தி.மு.க. ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமன்றத்தில் ஏற்கெனவே ஒரு விளக்கம் சொன்னேன். டெபாசிட் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அந்த டெபாசிட் முதிர்ச்சி அடைகிறபோதுதான் பெறுவார்கள். நினைத்தபோது டெபாசிட்டை எடுக்க முடியாது. முதிர்ச்சி அடைகிறபோது அவர்கள் பெறவேண்டிய காலகட்டத்தில் அவர்கள் பெறுவதற்கான தொகையை அரசு அவர்களுக்கு வழங்க உறுதி கொடுத்திருக்கிறது. எவ்வளவு நிதி தேவையானாலும் அதைத் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையின் 48-வது பக்கத்தில், 'தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கி உதவியுடன் ஏழை எளியவர்கள் வீடுகளில் சமையல் எரிவாயு அடுப்பு வழங்கப்பட்டது. பணம் கட்ட முடியாத ஏழை எளியவர்களின் வீடுகளில் உள்ள சமையல் அடுப்புகளைக் கடந்த கால அண்ணா தி.மு.க. ஆட்சி பெற்றுக்கொண்டதாகவும், நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் அந்தக் கடனெல்லாம் தள்ளுபடி செய்யப்படும்' என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், கூட்டுறவு மானியத்திலே அந்த கேஸ் அடுப்பு சம்பந்தமாக எந்தக் கடனும் தள்ளுபடி செய்யப்பட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை.

இறுதியாக, நான் வைக்கிற நான்கு கேள்விகள். இந்தப் பேரவையின் மூலமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பெற்றுப் பயன் அடைந்தவர்களின் பட்டியலைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு இந்த அரசு முன்வருமா? கேள்வி ஒன்று. கேள்வி இரண்டு, பினாமி கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருப்பது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், இதனால் பயன் அடைந்தவர்களுடைய பெயரையெல்லாம் பத்திரிகையிலே வெளியிடுவீர்களா என்று கேட்டார்கள். அது தேவையில்லை. யாருக்கு அதனாலே குறை ஏற்பட்டு கிடைக்கவில்லையோ அவர்களுடைய பெயர்களை எதிர்க்கட்சித் தலைவரோ, எதிர்க்கட்சி உறுப்பினர்களோ வெளியிடலாம்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மக்கள் தெரிந்துகொள்வதற்காக ஒரு புத்தகமாகவாவது அந்தந்தப் பகுதியிலே வெளியிடுங்கள். இரண்டாவது கேள்வி, பினாமி கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருப்பது ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற பட்டியலை ஒவ்வொரு சங்கத்திலும் விளம்பரப் பலகையில் எழுதி வைப்பது அது நடைமுறையில் இப்போது இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பினாமி கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? கேள்வி 3. கடந்த காலங்களில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்போகிறதா அல்லது நடவடிக்கைகளை கைவிடப்போகிறதா? கேள்வி 4. ஏழை எளிய மக்கள், கைத்தறி நெசவாளர்கள் வாங்கிய வீடுகள் கட்டும் கடன் தள்ளுபடி செய்யப்படுமா? விவசாயிகளுக்கு சலுகை அளித்ததைப்போல, ஏழை எளிய கைத்தறி நெசவாளர்கள், ஏழை எளிய ஆதிதிராவிட சமுதாய மக்கள் வீடு கட்டுவதற்காக, வீட்டுவசதி சங்கத்திலே பெற்ற கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு இன்றைக்கு தரமான அரிசி வழங்காததினால், மக்களுக்கு வழங்குகிற அரிசி, உண்ணுகிற தரத்தில் இல்லாத காரணத்தினால், அரிசியை மக்கள் உண்ணாத காரணத்தினால், மக்கள் மிகுந்த துன்பத்தோடு இருக்கிறார்கள். கடன் வழங்கப்படாத நிலையில் விவசாயிகள் வேதனையோடு இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம்



திருத்திக்கொண்டு, நியாயமான வகையில் நடைபெற வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of Clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே சில செய்திகளை சொல்லி, 5 கேள்விகளை எழுப்பினார்கள். அவை நல்ல கேள்விகள்தான். ஆனால், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இந்த 5 கேள்விகளுக்குரிய விடை என்ன என்பதைப் பற்றியும் அவர் இங்கே தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும். அவர்கள் ஆட்சிக்காலத்திலே என்ன செய்தார்கள் என்பதை தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன்.

***திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> 'காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்.'

காண்பதற்கு எளியவனாய், கடுஞ்சொல் கூறாதவனாய் இருந்தால், அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகமே புகழும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் சூரியனாய், தகதகக்கும் எங்கள் தலைவரைப் போற்றி, தமிழகத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத பெருமையைப் பெற்று ஐந்தாவது முறையாக தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வராகப் பொறுப்பேற்று அமர்ந்திருக்கும் முத்தமிழ் அறிஞர், உலகம் போற்றும் உத்தமத் தலைவனாய், செம்மொழிப் புலவராய், இலக்கிய கடல் எங்கள் குறளோவியம், 7½ கோடி தமிழர்களின் ஒட்டுமொத்த ஒரே தலைவர், மாண்புமிகு மூதறிஞர், கலைஞர் அவர்களை வணங்கி, எனது கன்னிப் பேச்சை 2006–2007 தமிழகக் கூட்டுறவு மற்றும் உணவு மானியக் கோரிக்கையின்மீது துவக்குவதற்கு முன்னர், என்னை ஈன்றவர்க்கும், அவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் எதிர்கால தமிழகம், ஓய்வுக்கே ஓய்வு கொடுத்து

விட்டு, அல்லும் பகலும் உழைத்து வரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் தளபதிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது பணிவான வணக்கம்.

*முற்பகல் 10–40*

செங்குட்டுவன் என்னும் ஒரு சாதாரண தொழிலாளியை, எங்கேயோ ஒரு மூலையிலே குக்கிராமத்தில் இருந்த என்னை, தமிழகத்தை ஆட்சி செய்யும், சட்டம் இயற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க 13–வது சட்டப் பேரவையில் அமர வைத்து, எனக்குத் தாயாகவும், தந்தையாகவும் விளங்கும் எங்கள் குடும்பத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், சுற்றிச் சுழன்றடித்த சூறாவளித் தேர்தலில் 18,000 வாக்குகள் வித்தியாசத்திலே என்னை வெற்றி பெறச் செய்த கிருஷ்ணகிரி தொகுதி வாக்காள பெருமக்களுக்கும், எனக்காக அரும்பாடுபட்ட ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகின்றேன்.

ஓர் ஆட்சியை நடத்த நல்ல நிர்வாகத் திறமையுள்ள தளபதி வேண்டும். ஓர் இயக்கத்தை நடத்திச் செல்ல பக்குவம் பெற்ற ஒரு தலைவர் வேண்டும். தலைசிறந்த தலைவராகவும், தளபதியாகவும் இருக்கிற காரணத்தால்தான், தலைவா! உலகமே உங்களைப் பாராட்டுகிறது. ஒரு பெரும் அரசியல் மாற்றத்திற்குப் பிறகு இங்கே நாம் கூடியிருக்கிறோம். இம்மாற்றம், ஆட்சியில் மட்டும் அல்லாமல், இந்த அவையில்கூட முழுமையாகப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. உறுப்பினர்கள் எல்லாம் சுதந்திரமாகத் தங்களது கருத்துகளை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்கூட, கடந்த 5 ஆண்டு காலமாக சுதந்திரமாக முழுமையாக தனது இருக்கையில் உட்கார முடியாமல்போய், இன்று எங்கள் தலைவர் ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கையை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு மற்றும் உணவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது என் உரையினைத் துவக்குவதற்கு முன்பாக (குறுக்கீடுகள்) எங்களுடைய கிருஷ்ணகிரி தொகுதிக்கு 2006–2007 நிதிநிலை அறிக்கையிலே தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு, புளோரைடு நீரால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த அந்தப் பொது மக்களுக்கு, ஒரு மிகப் பெரிய நிவாரணமாக, ஒகேனக்கல்



கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மாவட்ட மக்கள் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் முதலிலே நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, கிருஷ்ணகிரி தொகுதியிலே மாம்பழம் விளைவிக்கக் கூடிய விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையத்தை அறிவிப்பு செய்த மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கால்நடை நோய்கள் தடுப்பு நுண்ணுயிர் ஆராய்ச்சி மையம் ஒன்றை அறிவித்து எங்கள் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற அந்த மின்சார வாரியத்தின் மூலமாக அந்த பல்வேறு பகுதிகளிலே.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சுதந்திரத்தைப் பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அந்தக் கேள்வியை அவர் கேட்டிருக்கின்றார். ஒரு தலைமைக்கு கட்டுப்பட்டு நடப்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கோடி தொண்டர்களுடைய கட்டுப்பாடான இயக்கம் இன்றைக்கு உலகத்திலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கொச்சைப்படுத்துகின்ற வகையில், உறுப்பினர் அவர்கள் பேச வேண்டாம். நாங்களும் அதுமாதிரி பேச ஆரம்பித்தால், விவாதம் எங்கோ போய் நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கன்னிப் பேச்சு பேசிக் கொண்டிருக்கிறார். உங்களுடைய கட்டுப்பாட்டை நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். (சிரிப்பு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10–45*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டப்பேரவை உறுப்பினர் இங்கே அவர் பேசியது கன்னிப் பேச்சு. பேசுகிறபோது அவர் சொன்னார், எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரே இடத்தில் உட்காராமல் இடம் மாறி உட்காரவேண்டிய அளவுக்கு நிலை எல்லாம் ஏற்பட்டது என்று சொன்னார். அது உண்மைதானே, முதலில் முதலமைச்சராக நீங்கள்தான் இருந்தீர்கள், இரண்டாவது முதலமைச்சராக உங்கள் தலைவி வந்துவிட்டார், இடம் மாறிவிட்டீர்கள், உண்மையைத்தான் பேசினார். அதிலே என்ன தவறு இருக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. டி. செங்குட்டுவன்:** அதேபோன்று கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இந்த low voltage என்று சொல்லக்கூடிய குறைந்த மின்னழுத்தமுள்ள பகுதிகளுக்கு எல்லாம் துணை மின் நிலையங்கள் வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டபோது, எங்களுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஆறு துணை மின் நிலையங்களை வழங்கி உத்தரவிட்ட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல என்னுடைய தொகுதி, வேப்பனப்பள்ளி பகுதியிலே இருக்கக்கூடிய ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இன்றைக்கு மிகவும் பாழ்பட்டுப் போன நிலையிலே, ஒரு மருத்துவர்கூட இல்லாத ஒரு சூழ்நிலையிலே அந்த மருத்துவமனையை தரம் உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்ட நேரத்திலே உடனடியாக அந்த மருத்துவமனையை 50 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்து மக்களின் வாழ்வில், குறிப்பாகவும், சிறப்பாகவும் விவசாயப் பெருங்குடி மக்கள், நுகர்வோர் மற்றும் நடுத்தர மக்களின்



தேவைகளை நிறைவு செய்கின்ற மாபெரும் இயக்கமாக, அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருப்பது கூட்டுறவு இயக்கமாகும். மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் உயரிய ஜனநாயகப் பண்பு கொண்டு கூட்டுறவு இயக்கமானது, திராவிட முன்னேற்றக் கழகம் 1967–இல் முதன் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், சாதாரண சாமானிய மக்களின் கைகளிலே தவழத் தொடங்கியது. அதுமட்டுமல்லாமல் பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் ஒளிமிகுந்த ஒன்பதாண்டு கால கழக ஆட்சியிலே தமிழகத்திலே கூட்டுறவு இயக்கம் தழைத்தோங்கி அகில இந்தியாவில் மட்டுமல்ல, ஆசிய அளவிலும், பலராலும் பாராட்டப்படுகின்ற இயக்கமாகத் திகழ்ந்தது.

கோவை சிந்தாமணி கூட்டுறவுப் பண்டகசாலை, ஆசிய அளவிலே தலைசிறந்த கூட்டுறவு நிறுவனம் என்று பெயர் பெற்றது எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியில்தான். தற்போதைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மரியாதைக்குரிய மாண்புமிகு கோ.சி. மணி அண்ணன் அவர்கள் அக்காலக் கட்டத்தில்தான் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை ஆகியன அகில இந்திய அளவிலே தலைசிறந்த நிறுவனங்கள் என பாராட்டப்பெற்று, பரிசுகளை வாங்கிக் குவித்தன.

அப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கம், 1977–க்குப் பின்னால் தனி அதிகாரிகள் கையிலே சிக்குண்டு சீரழியத் தொடங்கியது. எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறதோ, அப்போதெல்லாம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஜனநாயக முறையிலே தேர்தல் நடத்தப்பட்டு, கூட்டுறவாளர்களின் தலைசிறந்த நிர்வாகத்தால் கூட்டுறவு நிறுவனங்கள் உயிர்பெற்று தலைதூக்குவதும், எப்போதெல்லாம் அ.தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைத் தத்துவமான ஜனநாயகம் மறுக்கப்பட்டு, கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படாமல், தனி அதிகாரிகளின் கையிலே கூட்டுறவு இயக்கம் சிக்கிச் சீரழிவதென்பதும், அந்த இயக்கத்திற்கு ஒரு சாபக் கேடாகவே அமைந்துவிட்டது. அதனால்தான் ஜனநாயக மாண்பு போற்றும் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலுக்காக வெளியிட்ட அந்தத் தேர்தல் அறிக்கையிலும், வெற்றி பெற்று ஆட்சியிலே அமர்ந்ததற்குப் பின்னால், நடைபெற்ற முதல் ஆளுநர் உரையிலும், கூட்டுறவுகளுக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதற்காக

கூட்டுறவாளர்களும், கூட்டுறவு நிறுவனங்களும், பணியாற்றும் தொழிலாளர்களும், தலைவர் கலைஞர் அவர்களை மனமார வாழ்த்திப் பாராட்டுகின்றனர்.

விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன் 6,866 கோடி ரூபாயை இரத்து செய்து நடப்பாண்டிற்கு 1,435 கோடி ரூபாயை கூட்டுறவு வங்கிகளுக்கு அளித்து, செயலிழந்து முடங்கிப் போயிருந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்றம், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியனவற்றுக்கு உள்ளதுபோல 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டுறவு வங்கிகளுக்கும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை சட்டமாக்கப்பட வேண்டுமென்று இந்த அவையின் சார்பாக நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகள் வரை ஆட்சியில் இருந்தபோதுதான் இந்தக் கூட்டுவுத் துறை உயிர்பெற்று, இந்தியாவிலேயே முதன்முதலாக கணினிமூலம் குடும்பங்களின் விவரங்களையும், குடும்பத் தலைவரின் புகைப் படத்தையும் பதிவு செய்து அட்டைகள் வழங்கப்பட்டன. தி.மு.க. ஆட்சியில்தான் விவசாயிகளிடம் இருந்து அதிக அளவாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 17 இலட்சத்து 57 ஆயிரம் டன்னும், அ.தி.மு.க. ஆட்சியில் வெறும் 3 இலட்சத்து 38 ஆயிரம் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் மகளிரே நடத்தும் நியாய விலைக் கடைகள் உருவாக்கப்பட்டு இன்று வரை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தினை குடும்ப அட்டைதாரர்கள் அறிந்துகொள்ளும் வகையிலே, மக்கள் சாசனம் தயாரிக்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான்.

முற்பகல் 10–50

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே தற்காலிகமாகப் பணிபுரிந்து வந்த 2,700 சுமை தூக்கும் தொழிலாளர்கள் தி.மு.க ஆட்சியில்தான் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். தி.மு.க. ஆட்சியில்தான் 20 ஆண்டுகளுக்கும் மேலாக, நடத்தப்படாமல் இருந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. ஜனநாயக



முறையிலே சிறப்பாகத் தேர்தல் நடத்தி, இயங்கி வருவதைப் பார்த்த உலகின் பெரிய உர நிறுவனங்களில் ஒன்றான IFFCO என்னும் உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம் 1998–99 ஆம் ஆண்டிற்கான Sahakarita Bandhu என்னும் விருதினை 56,000 ரூபாய் ரொக்கப் பரிசுடன் தமிழகக் கூட்டுறவுத் துறைக்கு 19–11–1999–லே டெல்லியிலே வழங்கியது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில்தான். தமிழ்நாட்டிலேயே தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, சிறப்பாகச் செயல்பட்டதற்காக அதற்கு டெல்லியிலே பரிசு வழங்கப்பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

கலைஞர் ஆட்சியில்தான் நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் ஊதிய விகித முறை ரூபாய் 430–லிருந்து ரூபாய் 1,640 வரை 1–4–2000–லே உயர்த்தப்பட்டது. தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு 900 ரூபாய் என்றிருந்ததை 1,300 ரூபாயாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில்தான். கலைஞர் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் 3,792 கூட்டுறவு நகர வங்கிப் பணியாளர்களுக்கும், 1,523 கூட்டுறவு நில வள வங்கிப் பணியாளர்களுக்கும் 3,862 கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், 22,548 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கும், ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில்தான்.

கூட்டுறவு வங்கிகள் 6–9–1996 முதல் கலைஞர் ஆட்சியிலே நகைக் கடன் 50,000 ரூபாயாகவும், 27–5–1996 முதல் ஒரு இலட்சமாகவும் உயர்த்தித் தரப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில்தான். 1997 ஆம் ஆண்டு முதல் புதிதாக 26 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும், 62 இடங்களிலே மாவட்ட மற்றும் கூட்டுறவு வங்கிக் கிளைகளும் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில்தான். கலைஞர் ஆட்சியில்தான் தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் புதிய கூட்டுறவு வேளாண்மை மையம் தொடங்கப்பட்டது. கழக ஆட்சியில்தான் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே 165 நபர்களும், நகரக் கூட்டுறவு வங்கிகளிலே 796 நபர்களும், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலே 28 நபர்களும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே 235 பேர்களும் பணியமர்த்தப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில்தான்.

கடந்த 2001–இல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு தனது முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே கூட்டுறவு நிறுவனங்களிலே இயங்கி வந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களைக் கலைத்து, ஒரு ஜனநாயகப் படுகொலையினைச் செய்தது. இதன்மூலம் திமுகழக ஆட்சியிலே கூட்டுறவாளர்களால் நிருவகிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வந்த கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகள் அ.தி.மு.க. ஆட்சியில் அடியோடு அழிந்துபோனது.

கூட்டுறவு நிறுவனங்களில் 1980–க்குப் பின்னர் பல்வேறு காலக்கட்டங்களிலே பல நேரங்களில் தனி அதிகாரிகளாலும், மிகவும் சொற்பமான காலத்தில், கூட்டுறவு நிறுவனங்களிலே பொறுப்பிலே இருந்த நிருவாகிகளாலும் நிறுவனங்களின் தேவைக்கேற்ப பணி நியமனம் செய்யப்பட்ட சுமார் 25,000 தொழிலாளர்களைச் சட்டபூர்வமாக நிரந்தரப்படுத்துவதற்காக 2001 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் தி.மு.க. அரசு அரசாணை எண் 86–ஐ வெளியிட்டது. ஆனால், மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற அ.தி.மு.க. ஆட்சி, அந்த அரசாணையை செயல்படுத்திடாமல் குப்பைக் கூடையிலே தூக்கிப் போட்டதன் காரணமாக கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றி வரும் ஊழியர்கள் கடும் பாதிப்பிற்குள்ளானார்கள்.

முற்பகல் 10–55

அடுத்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பொது மக்களிடமிருந்து வைப்பு நிதி வசூலிப்பதற்குத் தடை விதித்தது அ.தி.மு.க. ஆட்சி. இதன் விளைவாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணச் சுழற்சி தடுக்கப்பட்டு, கடும் நிதி நெருக்கடிக்கு ஆளாகி, ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த வைப்புத் தொகைகளை உரிய காலத்தில் பொது மக்களுக்குத் திரும்ப வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, கூட்டுறவு இயக்கத்திற்கே மிகுந்த அவப் பெயரை உண்டாக்கியது அ.தி.மு.க. அரசு. அரசின் சார்பாக முறையான கொள்கை வழிகாட்டு நெறிமுறைகளோ, நிதியுதவியோ, முறையான ஆய்வுகளோ, அதிகாரிகளையும், அலுவலர்களையும் ஊக்கப்படுத்துகிற செயல் திட்டங்களோ அ.தி.மு.க. அரசால் வழங்கப்படாததால், கடந்த ஆட்சிக் காலத்திலே காலத்தால் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்தேவிட்டன. மொத்தத்தில் கூட்டுறவு இயக்கம் என்பது காணாமல் போய், வெறும் கூட்டுறவுத் துறை மட்டும் எஞ்சியிருந்தது. மீண்டும் அவற்றைப் புனரமைத்திடும் பெரும் பணி கழக அரசாங்கத்திற்குக் காத்திருக்கிறது.



தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் சுமார் 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமும், எஞ்சிய சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், பிற அமைப்புகளாலும் நடத்தப்படுகின்றன.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பெரும்பாலானவை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாலும், எஞ்சியவை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்களாலும் நடத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை போன்றவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது. இவ்விதம் நுகர்பொருள் வாணிபக் கழகம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகள், தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளால் நிர்வகிக்கப்பட்டு வருவதால், அவற்றில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் ஊதியத்திலும், பணி நிலைகளிலும் ஏற்றத் தாழ்வுகள் உள்ளதோடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** சமச்சீரான ஊதியமோ, பணி நிலைகளை அமைத்திட இயலாத சூழ்நிலையோ நிலவுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, பொது விநியோகத் திட்டத்திற்கென்று தனியானதொரு அமைப்பினை உருவாக்கினால்தான் பயனுள்ளதாக இருக்கும்.

பேரவைத் தலைவர் அவர்களே, 10–6–2006 அன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரியிலே ஓர் ஆய்வு நடத்தினார். அந்த ஆய்வுக் கூட்டத்திலே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது இந்த A.A.Y. Anthyodaya Anna Yojna—என்ற அந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற 35 கிலோ அரிசி என்பது, மத்திய அரசாங்கம் என்ன நோக்கத்திற்காக அந்தத்



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227417
சென்னை-600 008

திட்டத்தைக் கொடுத்ததோ, அந்த நோக்கத்தைப் பாழ்படுத்துகிற வகையிலே, அந்த 35 கிலோ அரிசி முழுவதையும் B.P.L. என்று சொல்லக்கூடிய, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களைக் கண்டுபிடித்துத் தருவதற்குப் பதிலாக, தன்னுடைய கட்சியினுடைய உறுப்பினர்களுக்கே வழங்கியது கடந்த ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 35 கிலோ அரிசி என்பது எந்த நோக்கத்திற்காக மத்திய அரசாங்கம் வழங்கியதோ அந்த நோக்கம் அத்தனையும் பாழ்பட்டுப் போனது. அந்த மத்திய அரசாங்கத்தினுடைய திட்டத்தையே பாழ்படுத்தியது அ.தி.மு.க. அரசாங்கம். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே . . . (குறுக்கீடு)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No Point of Order.

**திரு. டி. செங்குட்டுவன்:** ஆதாரத்தோடுதான் நானும் பேசுகிறேன். என்னிடத்திலே ஆதாரம் கையிலே இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயராமன், உட்காருங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** 2005–லே அ.தி.மு.க. ஆட்சிதான். (குறுக்கீடு) அ.தி.மு.க. ஆட்சிதான். (குறுக்கீடு) 2005–லே அ.தி.மு.க. ஆட்சிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே… (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், (குறுக்கீடு) பஞ்சாயத்தில், மக்கள் சபைக் கூட்டத்திலே தீர்மானம் செய்துதான் வழங்கப்பட்டதே தவிர, அரசாங்கத்திலிருந்து யார் யாருக்கு A.A.Y. Card வழங்க வேண்டும் என்று எந்த முடிவும் எடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விடுங்கள்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அரசாங்கத்திலே எந்த முடிவும் எடுப்பதில்லை. இதைக்கூட மாண்புமிகு உணவு அமைச்சர் உங்களிடத்திலே சொல்லவில்லையென்றால் அது எங்கள் குறையல்ல. அந்த உணவு அமைச்சர் அவர்கள்தான் உங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். செங்குட்டுவன், பேசுங்கள், முடியுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமன் அவர்கள் சொல்கிறார்கள். இந்த அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தினுடைய நோக்கமே மத்திய அரசாங்கம் என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால், ஏழைகளிலே மிக ஏழையாக இருப்பவன், பார்க்கிறபோதே பாவம், ஐயோ, அவன் ஏழை என்று சொல்கிறோம். அப்படி இருப்பவனுக்குத்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. இதைத் தேர்வு செய்கிறபோது, கிராமத்திலே இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர்களை வைத்துக்கொண்டு, மிக ஏழையாக இருப்பவர்களையெல்லாம் அதில் தேர்வு செய்து, அந்த கிராம சபையிலே வைத்து நிறைவேற்றி, அந்தப் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பெற்று, அந்த அரிசியைக் கொடுக்க வேண்டும். ஆனால், இங்கே நம்முடைய கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, ஒவ்வொரு கிராமத்திலும் மெத்தை வீடு வைத்திருப்பவர்கள், 2.5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், Hero Honda Motorbike–லே போய் வருபவர்கள், இப்படிப்பட்டவர்கள் எல்லாம் அந்தப் பட்டியலிலே இடம் பெற்றிருக்கிற காரணத்தினால், நான் ஆய்வுக்குச் சென்றபோது, அனைவரும் இதைத்தான் சொன்னார்கள். பல ஊர்களிலே பரீட்சார்த்தமாகப் பார்த்தபோது, மத்திய அரசாங்கம் சொன்ன திட்டத்திற்கு முரண்பாடாக, அந்த அரசாங்கம் செய்திருப்பதை உணர்ந்த காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். மூன்று தினங்களுக்கு முன்னால் முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் ஒவ்வொரு கிராமத்திலும் இந்த அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்திற்கு மிக மிக ஏழையினுடைய பட்டியல்தான் இடம் பெற வேண்டும் என்று முதலமைச்சர் ஆணையிட்டிருக்கிறார். அதை, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையாக பிறப்பித்து இருக்கிறோம்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், விரைவாக முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பொது விநியோகத் திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, கழக ஆட்சியிலே, அரசு ஊழியர்களுக்கு உள்ளதைப்போல, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, விடுமுறை நாள் மாற்றப்பட்டு, வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாக அனுசரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மற்ற ஊழியர்களுக்கு இணையாக மீண்டும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக அறிவித்திட மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை, அவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, நியாய விலைக் கடைகளிலே மேற்கொள்ளப்பட்டு வரும் பல்துறை ஆய்வுகளால், ஊழியர்கள் அலைக்கழிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, ஒரே துறையின்மூலம் நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் விற்பனையைப் பெருக்கிட ஏதுவாக, தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், அரசு உதவி பெறும் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள், அன்னதானத் திட்டங்களைச் செயல்படுத்தும் ஆலயங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான பொருட்களை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின்மூலம் பெற்றிட தக்க உத்தரவுகளைப் பிறப்பிக்க அன்போடு வேண்டுகிறேன்.

விவசாய வேளாண் பொருட்களை, அவை உற்பத்தியாகும் இடங்களுக்குச் சென்று நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு, தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும், டான்ஃபெட்டிற்கும் அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியிலே கடைப்பிடிக்கப்பட்டு வந்த தொழிலாளர் விரோதக் கொள்கையின் காரணமாக, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து ஊழியர்கள், மின்வாரிய ஊழியர்கள் என பாதிக்கப்படாத பிரிவினரே இல்லை என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாக, கூட்டுறவு ஊழியர்கள் பல்வேறு சலுகைகளையும்,



உரிமைகளையும் இழந்து மிகவும் இன்னலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு கடந்த ஊதிய ஒப்பந்தம் 30–6–2004–வுடன் முடிந்துவிட்ட நிலையில், புதிய ஊதிய ஒப்பந்தத்திற்கான கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் ஏற்கெனவே அரசுக்கு அளித்துள்ளன. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில், இந்த ஊதிய உயர்வு கோரிக்கைகள்மீது பேச்சுவார்த்தை நடத்திடவோ, ஊதிய கோரிக்கைகள் பற்றி ஆராய்ந்திட சீரமைப்புக் குழு அமைத்திடவோ அ.தி.மு.க. அரசு எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அதேபோல, மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கான ஊதிய ஒப்பந்தம் 30–9–2004–வுடன் முடிவுற்ற நிலையில், ஊதிய உயர்வு தொடர்பான கோரிக்கைகளைத் தொழிற்சங்கங்கள் அரசிடம் ஏற்கெனவே கொடுத்துள்ள நிலையில், கடந்த கால அ.தி.மு.க. அரசில் முறையான பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சீரமைப்புக் குழுகூட அமைக்கப்படவில்லை. நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கான ஊதிய ஒப்பந்தத்தின்மீதும் அ.தி.மு.க. அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. கூட்டுறவு நியாய விலைக் கடைகளிலே பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வினை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தலைவர் கலைஞர் அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்ட பின்னர், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே புதிய உயர்வினை வழங்க எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தொழிற் சட்டப் பிரிவிலே 12 (3)–ன்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஊதிய ஒப்பந்தப்படி வழங்கப்படவேண்டிய அகவிலைப்படி 49.8 சதவிகிதத்தினை 1–10–2002 முதல் வழங்காமல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுத்திவைத்து விட்டார்கள். அ.தி.மு.க. அரசின் அந்திம காலத்திலே, நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த தோல்விக்குப் பின்னால்தான், அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி திரும்ப வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலும் டான்ஃபெட் ஊழியர்களுக்கு அகவிலைப்படியினை வழங்காமல் இருப்பது மிகவும் அநீதியாகும்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு கொப்பரை கொள்முதலில் ஈடுபட்ட அப்பாவி ஊழியர்கள்மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்குகளை திரும்பப் பெற்றிட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவாக முடியுங்கள். நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டி இருக்கிறது.

**திரு. டி. செங்குட்டுவன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள், முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர், முத்தமிழ் அறிஞர் மூதறிஞர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி என்று தேர்தல் அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். முதன்முதலாக விழுப்புரம் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியை அளித்திருக்கிறார்கள். அதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். அடுத்து, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்கித்தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோல், எங்களுடைய மாவட்டத்திலே தக்காளிப் பழங்கள் அதிகமாக விளைகிற காரணத்தினால், அப்படி விளைகின்ற தக்காளிகளுக்கு சரியான விலை கிடைக்காத காரணத்தினால், மார்க்கெட்டுக்கு வந்து விலையில்லை என்று சொன்னவுடன் அவற்றை சாலையிலே கொட்டிவிட்டுப் போகக்கூடிய ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் பாதுகாத்து, விலை கிடைக்கிற நேரத்திலே விற்றுக்கொள்வதற்கு ஏதுவாக குளிர்பதனக் கிடங்குகளை உருவாக்கித்தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய தலைமை அரசு மருத்துவமனையின் தரத்தினை உயர்த்தித் தரவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில், கூட்டுறவுத் துறைக்கு என்று இருக்கின்ற அலுவலகம் கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிந்து இரண்டாண்டு காலம் ஆகிவிட்ட பிறகும்கூட, கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் அலுவலகம் கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இல்லை. ஆகவே, அந்தக் கூட்டறவுத் துறை இணைப் பதிவாளர் அலுவலகத்தை கிருஷ்ணகிரி மாவட்டத்திலே உருவாக்கித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி



மையம் கிருஷ்ணகிரியிலே அமைத்துத் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் திருமதி கே. காயத்ரி தேவி. (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

*முற்பகல் 11–05*

**திரு. டி. செங்குட்டுவன்:** இந்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்காக எனக்கு வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், எங்களது இளைய தளபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்கள்.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பினை அளித்த எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய ஒப்பற்ற தலைவர் அன்னை சோனியா காந்திஜி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது அன்புச் சகோதரியும், தலைவருமான அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் திருமதி ஜெயந்தி நடராஜன் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் உள்ள அத்தனை தலைவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் வாக்குகளைச் சேகரிக்கும் சமயத்தில், இரண்டே இரண்டு விஷயங்களைத்தான் மக்கள்முன் கேட்டேன். ஒன்று; இந்த 21 ஆம் நூற்றாண்டில் அரசியல் அதிசயமாக பிரதமர் பதவி வேண்டாம் என்று சொன்ன தியாகச் சுடர் (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து இந்த நாட்டிற்காக, இந்திய மண்ணிற்காக உயிரைவிடும் குடும்பத்திலிருந்து வரும் எங்கள் உயிரினும் மேலான தலைவர் அன்னை சோனியா

காந்திஜிக்குப் பெருமை சேர்க்கும் வகையில், நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

இரண்டாவதாக, *13* வயது முதல் *83* வயது வரை தமிழுக்காக, தமிழ் மண்ணுக்காக, தமிழ் மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை ஐந்தாவது முறையாக அரியணையில் அமரச் செய்வது (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு தமிழனின் தலையாய கடமை என்று கேட்டுக் கொண்டதற்கேற்ப, மதுராந்தகம் தொகுதி மக்கள் எனக்கு வாக்களித்தார்கள். அதற்காக மதுராந்தகம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆன்றோர் பலர் நிறைந்த இந்த அவையில் என்னுடைய கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

'செய்வதைச் சொல்வோம்; சொல்வதைச் செய்வோம்' என்ற முழக்கத்துடன், தேர்தல் களமிறங்கி, மாபெரும் வெற்றி கண்ட மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தலைமையின்கீழ் அமைந்த கூட்டணி, அரசு அமைத்து, சொன்ன அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதை, பதவியேற்ற முதல் நாளிலிருந்தே தொடங்கிவிட்டது என்பதற்காகப் பெருமிதம் கொள்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்ட வரியில்லாத நிதிநிலை அறிக்கை அனைத்துத் துறைகளைச் சார்ந்தவர்களிடமும், பொது மக்களிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒரு கிலோ அரிசி *2* ரூபாய் என்ற திட்டத்தை, தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா முழுவதும், ஏன், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொன்னதுபோல, ஆசியா முழுவதும் மக்கள் வரவேற்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என்ற திட்டத்தைப் பொறுத்தவரை, 'கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற சொல்லிற்கேற்ப, கலங்கியிருந்த விவசாய நெஞ்சங்களையெல்லாம் குளிரச் செய்த மாண்புமிகு முதல்வரை, விவசாயிகள் எல்லாம் நெஞ்சார வாழ்த்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களின் கடன் தொகையைக் கணக்கிட்டால் ரூ.50 கோடி வரைதான் இருக்கும். இதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தள்ளுபடி செய்தால், நிச்சயமாக, நியாயமாகக் கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு



மரியாதை செய்வதாக இருப்பது மட்டுமல்லாமல், மீண்டும் கடன் பெறுபவர்கள் கடனைச் சரியாகத் திருப்பிச் செலுத்த ஊக்கமாக அமையும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

விவசாயிகளுக்கு மேம்படுத்தப்பட்ட *2* ஏக்கர் நிலம் வழங்குதல், விவசாயக் கூட்டுறவுக் கடன்களுக்கு வட்டி விகிதம் குறைக்கப்படுதல், போன்ற ஏனைய பல திட்டங்களை நிறைவேற்றி வருவது, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசு உறுதியாக உள்ளதை எடுத்துக் காட்டுகிறது. இதற்காக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள அத்தனை திட்டங்களும், எங்கள் கொறடா, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதுபோல், 'கருவறையிலிருந்து கல்லறை வரைக்கும், அகதிகளிலிருந்து அரவாணிகள் வரைக்கும்' யாரையும் விட்டுவிடாமல் பார்த்துப் பார்த்து, எல்லோருடைய நலனையும் கருத்தில்கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு People-friendly, User-friendly Budget–ஆக அமைந்துள்ளது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னதுபோல், இது Total People Welfare Budget–ஆக அமைந்துள்ளது. அதுவும் *75* தினங்களுக்குள் தேர்தல் அறிக்கையை மொத்தமாக நிதிநிலை அறிக்கையாக அறிவித்த இந்த பட்ஜெட் ஒரு மகத்தான சாதனை என்பதை யாரும் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது.

இதை எதிர்க்கட்சியினர் 'கானல் நீர்', 'அலாவுதீனின் அற்புத விளக்கு காட்டும் மாயாஜாலம்', 'புதைக்குழி' என்றெல்லாம் சொன்னால், அதற்குக் காரணம், அவர்கள் வீம்புக்காக, வறட்டு கௌரவத்திற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு சொல்கிறார்கள் என்பது இந்த தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

*முற்பகல் 11–10*

கூட்டுறவுத் துறையில் என்னுடைய கருத்துகளை சமர்ப்பிக்கின்றேன். தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் எடை குறைவாக இருக்கிறது என்பது காலகாலமாக மக்களிடம் உள்ள ஒரு குற்றச்சாட்டு. இதற்கு நம் அரசு கண்டிப்பாக ஏதேனும் ஒரு வழிமுறையைக் கொண்டு வர வேண்டும். அரிசி மற்றும் சர்க்கரையை பாக்கெட் முறையிலும், மண்ணெண்ணெயை vending machines அல்லது Bunks மூலமாக வழங்குவதற்கு ஆவன செய்ய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஒரு சின்ன டீக்கடைக்குக்கூட Health Inspectors, Sanitary Inspectors எல்லாம் வைத்து ஒரு healthy environment வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், ஆயிரக்கணக்கில் மக்கள் உபயோகிக்கும் ரேஷன் பொருட்களுக்கு எந்த விதிமுறையும் இல்லாமல் இருக்கிறது. ஆகையால், அரசு ரேஷன் கடைகளில் சில specifications–களுடன் இப்படித்தான் கடைகள் இருக்க வேண்டுமென்றும். இந்த ரேஷன் பொருட்களை வைக்க வேண்டுமென்றும், தெரிவிக்க வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கின்றேன்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைமூலம் முந்தைய அரசு அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்த மாதிரி வழங்கிய குடும்ப அட்டைகளில் சுமார் 20 சதவிகிதம் போலி அட்டைகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், வழங்கிய அட்டைகளில் ஆயிரக்கணக்கில் குளறுபடிகள் உள்ளன. போலி அட்டைகளை கண்டுபிடித்து, நீக்கி அதன்மூலம் மீதமாகும் பங்கீட்டுப் பொருட்களை உண்மையான பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப அட்டைகள், இன்றைய காலகட்டத்தில் உணவுப் பொருள் பெறுவதைத் தவிர வேறு பல காரியங்களுக்கும் முக்கியமானதாக உள்ளன. ஒரு மனிதன் தன்னை சாதாரண குடிமகன் என்பதை நிருபிக்க வேண்டுமென்று சொன்னாலே, அதற்குக் குடும்ப அட்டை தேவைப்படுகிறது. இந்நிலையில் மாநிலத்தில் உள்ள சுமார் 20 சதவிகிதம் உண்மையான பயனாளிகளுக்கு இன்னமும் குடும்ப அட்டைகள் கிடைக்கவில்லை. எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் இது ஒரு மிகப் பெரிய குறையாகவே இருக்கிறது. இதைப் பரிசீலித்து உடனடியாக புதிய குடும்ப அட்டைகளை வழங்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் தீ விபத்து மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு போர்க்கால அடிப்படையில் உடனடியாக குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைத்து நடத்தினால் ஊழல் ஒழிவதோடு பெண்களுக்கும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்திய மாதிரியும் இருக்கும் என நினைக்கிறேன். இதேபோல் கார்டுகள் கூடக்கூட ஊழல் அதிகமாக வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, 500 அட்டைகளுக்கு ஒரு கடை என்று அரசு நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் கிராமப்புறங்களில் சுமார் 4, 5 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று நியாய விலைக் கடைகளிலிருந்து உணவுப் பொருட்கள் வாங்கி வர வேண்டிய சிரமத்தில் உள்ளவர்களுக்காக சுமார் 100 குடும்பங்களுக்கு உரிய பொருட்களை அங்குள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைத்து வழங்க ஏற்பாடு செய்தால் ஏழை மக்களின் சிரமம் குறையும் என்ற ஆலோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகளில் வழங்கும் இருவித அரிசிகளால் ஒன்று சற்று நிறம் குறைவாக, மங்கலாக உள்ளதால், அரிசி தரம் குறைந்து இருப்பதாக எதிர்க்கட்சியினர் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆகவே, வெள்ளை நிறமாக உள்ள ஆந்திரா அரிசியையே வழங்க வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். நம் அரசின் வெற்றியில் அரிசிக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. ஆகையால், மக்கள் ரேஷன் கடைகளில் இருந்து எவ்வளவு திருப்தியுடன் வெளியே வருகிறார்களோ அவ்வளவு திருப்தியுடன் இந்த அரசுடன் இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவு அமைச்சகத்தின்கீழும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வருவாய் அமைச்சகத்தின்கீழும் இரட்டை ஆட்சி முறையில் இயங்கி வருவதால் இவற்றிக்கிடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லை. பல தவறுகளை உடனடியாகத் திருத்தவும் இயலவில்லை. ஆகவே, இரண்டு அமைப்புகளையும் ஒரே அமைச்சகத்தின்கீழ் கொண்டு வந்தால் அவற்றின் குறைபாடுகள் நீங்கி செயல்பாடுகள் சிறப்பாக அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'எல்லோரும் ஒவ்வொருவருக்காக, ஒவ்வொருவரும் எல்லோருக்காக' 'All for one and one for all' என்ற ஓர் உன்னதமான முழக்கத்துடன் அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகள் இன்று சிறப்பாக இல்லை. இதன் முக்கிய காரணம் கூட்டுறவு அமைப்புகளுக்கு நீண்டகாலமாக தேர்தல் நடத்தப்படாமல் தள்ளி வைக்கப்பட்டு நிர்வாகம் தனி அதிகாரிகளின் கைகளில் இருப்பதனால்தான். எல்லா வகைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இந்த அரசு விரைவில் கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தி உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் கைகளில் நிர்வாகத்தை ஒப்படைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தில் கூட்டுறவு நிறுவனங்களில் நெடுங்காலமாக நிரப்பப்படாமல் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்றும் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். கூட்டுறவுத் துறைமூலம் கடந்த தி.மு.க. ஆட்சியில் ஏழையெளிய மக்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புகளுக்காகக் கொடுத்த கடன் சில பகுதிகளில் கட்ட முடியாத நிலையில் இருக்கின்றது. அவர்களுக்கும் கடன்களை அரசு முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

என் தொகுதியில் உள்ள மிக முக்கிய பிரச்சினைகளைப் பற்றி இங்கு சொல்ல ஆசைப்படுகிறேன். நான் கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது பேச வேண்டுமென்று சொன்ன சமயத்தில், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கள் மருத்துவராக இருக்கும் காரணத்தினால் சுகாதார மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள் என்று சொன்னார்கள். சுகாதாரத்தைப் பற்றிப் பேச இந்த அவையிலே நிறைய டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால், என் தொகுதியில் உள்ள படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் அவல நிலையைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னால், அதற்கு நான் ஒருத்தி மட்டும்தானே இருக்கின்றேன். கடந்த ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட தவறான அணுகுமுறை காரணமாகவும், சுயநல நோக்கோடு எடுக்கப்பட்ட தவறான முடிவுகளின் காரணமாகவும், இந்த படாளம் சர்க்கரை ஆலையின் எதிர்காலம் கேள்விக்குறியாக நிற்கின்றது.

முற்பகல் 11–15

கடந்த வாரத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள், அரசாங்கம் என்பது மக்கள் நலனுக்காக இருக்க வேண்டுமே தவிர, முதலாளிகளின் ஏகபோக இலாபத்திற்காக இருக்கக் கூடாது என்று பதிவு செய்தார். நானும் அதையேதான் சொல்கிறேன். கடந்த அரசு, என் தொகுதியில் உள்ள படாளம் சர்க்கரை ஆலை விஷயத்தில், ஒரேயொரு முறை, மக்கள் நலனைப் பற்றிச் சிந்தித்து, முதலாளிகளின் ஏகபோக இலாபத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்திருந்தது என்று சொன்னால், அந்தப் படாளம் சர்க்கரை ஆலையை நம்பி வாழ்ந்த 25,000–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்று பசியும் பட்டினியுமாய், கண்ணீரும் கம்பலையுமாய் நடுரோட்டில் நின்று கொண்டிருக்கமாட்டார்கள். ஆண்டொன்றுக்கு 20 கோடி ரூபாய் இலாபம் ஈட்டிவந்த ஆலை, கடந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட அலங்கோல முடிவுகளின் காரணமாக, இன்று குரங்கு கைப்



பூமாலையாக, என் தொகுதியின் நடுவே ஒரு அவமானச் சின்னமாக நின்று கொண்டிருக்கிறது. விரிவாக்கம் என்ற பெயரைச் சொல்லி, இந்த 25,000 குடும்பங்களையும் நிர்க்கதியாய், நடுரோட்டில் நிறுத்தியதுதான் கடந்த அரசின் மகத்தான சாதனை.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும், தன் பெயரிலேயே கருணையையும், நிதியையும் கொண்ட முதல்வர் அவர்கள், என் தொகுதி மக்கள்மீது பரிவு கொண்டு, மீண்டும் அந்த ஆலையைத் திறந்து, இயங்கவைத்து, இருண்டுபோன 25,000 குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதற்கு, அரசுக்குக் கூடுதல் நிதிச்சுமை ஏறத்தாழ 130 கோடி ரூபாய்தான் ஆகப்போகிறது. இன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களின் வயிற்றிலும் பால் வார்த்ததுபோல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடப்பு சட்டமன்றத் தொடரிலேயே, எங்கள் படாளம் சர்க்கரை ஆலையைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க ஆணை பிறப்பித்து, படாளம் சர்க்கரை ஆலையில் வேலை செய்த அத்தனை தொழிலாளிகளின் வயிற்றிலும் பால் வார்க்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மருத்துவர் என்ற முறையில், என் தொகுதியின் மருத்துவ வசதிக்காக ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைக்க ஆசைப்படுகிறேன். கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1999 ஆம் ஆண்டில் அன்றைய சுகாதார அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காட்டார் அவர்கள், சென்னை மருத்துவமனையில் தொலைமருத்துவம் — Telemedicine–ஐத் தொடங்கி வைத்தார். ஆனால், கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், இந்தத் துறை சரியாக இயங்காமல், மக்களுக்குப் பயனளிக்காமல் போய்விட்டது. சமீபத்தில்கூட மேற்கு வங்காளத்தில் உள்ள Gorakpur I.I.T., இந்த Telemedicine துறையில் மிகுந்த ஆர்வம் காட்டி, விரிவாக்குவதற்குத் தேவையான அத்தனை உதவிகளையும் அளிக்க முன்வந்துள்ளார்கள். இந்த Telemedicine வசதியை நம் அரசு, சென்னை பொது மருத்துவமனையிலிருந்து மதுராந்தகம் மருத்துவமனைக்கு extend செய்யும் என்று சொன்னால், கடந்த ஆட்சிக் காலத்தில் திறக்காமல், ஒரு மனிதன்கூட உள்ளே போகாமல் இருக்கும் I.M.C.U.–ஐ — Intensive Medical Care Unit–ஐ இன்று நாங்கள் உபயோகிக்க முடியும்.

இப்பொழுது மதுராந்தகத்திலிருந்து எல்லா cases–ஐயும் அது Poison consumed case–ஆக இருந்தாலும் சரி, Heart attack case–ஆக இருந்தாலும் சரி, Trauma case–ஆக இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் நாங்கள்

செங்கல்பட்டு மருத்துவமனைக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அதை அரசு கொஞ்சம் ஏற்றுக்கொண்டு, இதற்கு B.S.N.L. உதவி பெற்று நடவடிக்கை எடுக்குமென்று சொன்னால், சுமார் 6 இலட்சம் ரூபாய் முதலீடும், மாதம் 20 ஆயிரம் ரூபாய் செலவு மட்டுமே போதுமானது. இந்த Telemedicine–ஐ முன்மாதிரியாக மதுராந்தகத்தில் கொண்டுவந்து, பிறகு எல்லாத் தொகுதிகளுக்கும், தமிழகம் முழுவதும் அரசு கொண்டு செல்லும் என்று சொன்னால், மிகக்குறைந்த மருத்துவர்கள் இருந்தால்கூட, நல்ல மருத்துவ வசதியை மக்களுக்குத் தர முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வித் துறைக்கென இரண்டு அமைச்சர்களை நியமித்து, கல்வியின் தரத்தை உயர்த்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள், மதுராந்தகத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்றைத் தோற்றுவிக்க ஆணையிட வேண்டும்.

மதுராந்தகத்திற்கே பெருமை அளித்து வந்த மதுராந்தகம் ஏரி, இன்று பொலிவிழந்து, ஒரு நீர்க்குட்டைபோல் காட்சி அளிக்கின்றது. 1971 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், மதுராந்தகம் ஏரி கடைசியாகத் தூர் வாரப்பட்டது. அதன்பின், கவனிப்பாரின்றி சீர்கேடாக உள்ள ஏரியைத் தூர் வாரினால், சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவுக்கு நீரைத் தேக்கி, 25–க்கும் மேற்பட்ட கிராமங்களின் சாகுபடி மற்றும் குடிநீர்த் தேவைகளைச் சமாளிக்க உதவியாக இருக்கும்.

NH 45 நெடுஞ்சாலையை ஒட்டியிருக்கும் நீண்ட ஏரிக்கரைகளை நன்கு சீரமைத்து, சிறு சிறு உணவுப் பூங்காக்களை அமைத்தால், நெடுஞ்சாலைப் பயணிகளுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன். அத்துடன் ஒரு படகுக் குழாம் அமைத்து, ஏரியில் படகுகள் விட்டால், சென்னை போன்ற நெருக்கடியான நகரில் வசிக்கும் நடுத்தர மக்கள், மிகக் குறைந்த செலவில், வார விடுமுறைகளை அனுபவிக்க, குடும்பத்துடன் இன்பச் சுற்றுலா சென்றுவர வசதியாக இருக்கும். இந்தக் கோரிக்கையையும் கனிவுடன் கவனித்து, தகுந்த ஆணையிட மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.



மேலும் பல மக்கள் நலத் திட்டங்களும் இந்த அரசினால் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுடன், பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவை சபாநாயகர் அவர்களுக்கும், எங்கள் சட்டமன்றத் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும் நன்றி கூறி, அவையோர்க்கு வணக்கம் கூறி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

முற்பகல் 11–20

***திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு முதன்முறையாக இந்தத் தகுதியை வழங்கிய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர், இனமான காவலர், தமிழினப் போராளி, தமிழ் குடிதாங்கி, வாழும் பெரியார், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமை நாயகன், புகையிலை ஒழிப்புக்கு அமெரிக்காவில், உலக அளவிலான விருதுபெற்ற பசுமைப் போராளி மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக வன்னியர் கல்வி அறக்கட்டளையை நிறுவி ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்து இலவசமாக கல்வியைத் தரும் உண்மைத் தாயுள்ளம் கொண்ட சரஸ்வதி அம்மையார் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சி மாநிலத் தலைவர், ஓய்வறியா உழைப்பாளி, தியாகச் செம்மல், மேட்டூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

குவளைமலர், குறளோவியர், உலகத் தமிழ்க் குடும்பங்களின் ஒரே தலைவர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தமிழ்நாட்டின் இளைய சூரியன், பாட்டாளியின் கூட்டாளி, எங்கள்மீது மாறா பற்று கொண்டுள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், எனது வெற்றிக்கு, எனது தொகுதிக்கு வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிர்வாகிகளை ஊக்குவித்து என்னை வெற்றிபெறச் செய்த விழுப்புரம் மாவட்டத்தினுடைய விடிவெள்ளி, தமிழகம் கல்வித் துறையில் முதன்மை இடத்தை அடையவேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டுவரும், விழுப்புரம்

மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வருவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், அண்ணன் க. பொன்முடி அவர்களுக்கும், காங்கிரஸ், C.P.M., C.P.I. மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக, என்னை வெற்றிபெறச் செய்த, துரோகத்தை வீழ்த்திய முகையூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது ஈர இதயத்தில் தேங்கிக் கிடக்கும் நன்றி முத்துக்களைக் காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களை, கேரளம், மேற்கு வங்காளம், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அரசு ஊழியர்களை நியமனம் செய்வதுபோல், தமிழகத்திலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களையும், நியாய விலைக் கடைப் பணியாளர்களையும் அரசு ஊழியர்களாக்கி, பென்ஷன் வழங்க வேண்டும் அல்லது தனியாக வாரியம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

முந்தைய ஆட்சிக் காலத்தில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதரச் சலுகைகள் குறைக்கப்பட்டதை உடன் வழங்க ஆவன செய்யவேண்டுமாயும், பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வங்கிப் பணியாளர்களுக்கு ஒரு வருடமாக சம்பளம் வழங்காமலுள்ளதை உடன் வழங்க ஆவன செய்யவேண்டுமாயும், வாரிசு நியமனத்திற்கு எதிராக உள்ள பதிவாளர் சுற்றறிக்கை எண் *19622/97–4*, நாள் *27–3–1998*–ஐ உடனடியாக இரத்து செய்ய ஆவன செய்யவேண்டுமாயும், *1980* ஆம் ஆண்டுக்குப்பின் வேலைவாய்ப்பு அலுவலகம், மற்றும் நேரடிப் பணி நியமனம், பணி மாற்றப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆவன செய்யவேண்டுமாயும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியிடங்களை நிரப்பும்பொழுது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களை முழுமையாகப் பணியமர்த்த ஆவன செய்யவேண்டுமாயும், தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் ரேஷன் பொருள்கள் மட்டுமின்றி, இதரப் பொருள்கள் வாங்கிட கட்டாயப்படுத்தும் முறையைத் தடுத்து நிறுத்திட அறிவுரை வழங்கவேண்டுமாயும், அதேபோல் குடும்ப அட்டை வேண்டி, தகுதியுள்ள நபர்கள் விண்ணப்பம் கொடுத்தும் குடும்ப அட்டை



கிடைக்கவில்லை; எனவே, குடும்ப அட்டை கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டுமாயும், நகராட்சி பகுதியில் *500* அட்டைகளுக்கு மேல் இருக்கும் நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரித்து, பிரிக்கப்பட்ட கடைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களின்மூலம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமாயும் நமது அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு வணிகக் கடன் அதிகமாக வழங்கவேண்டியும், படித்த பட்டதாரிகளுக்கு சுய தொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் உதவி அளிக்க வேண்டியும், ஆதி திராவிடர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு முக்கியத்துவம் கொடுத்து கடன் வழங்கவேண்டுமாயும், பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டியும், நமது ஆட்சியில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெறப்போவதை அறிந்து போலி உறுப்பினர்களைச் சேர்த்தால் கடும் தண்டனை என்று அறிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரியும், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்று, அதனைக் கட்டமுடியாத நெசவாளர்களின் கடன்களைத் தள்ளுபடி செய்யக் கோரியும், தமிழகத்திலுள்ள நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிர் பெறும் விதத்தில் தனிக் கவனம் செலுத்தி கூடுதல் நிதி வழங்கவேண்டியும், தமிழகத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்கள் ஒரேயிடத்தில் தொடர்ந்து பணியாற்றுவதால் அங்கே சில முறைகேடுகள் நடப்பதாக அறிவேன். எனவே, தேவைக்கு ஏற்றவாறு இடமாற்றம் செய்து, சிறந்த நிர்வாகத்தை அளிக்க வேண்டியும், மீனவர்கள் அதிகம் வாழக்கூடிய இடங்களில் உள்ள மீனவப் பெண்களுக்கு வழங்கவேண்டிய பஞ்சக் கால நிவாரண நிதியை உடனடியாகக் வழங்கக் கோரியும், கூட்டுறவு வங்கியில் டெபாசிட் செய்த மக்களின் பணம் உடனடியாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டியும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு நில வள வங்கியில் கடன் பெற்றவர் கடன் தள்ளுபடி செய்தும் அவர்களின் சொத்து அடமானப் பத்திரம் உடனடியாகக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியும், கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் ஏவலர், காவலர் தவிர மற்ற பணியாளர்களை மாறுதல் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*முற்பகல் 11–25*

கூட்டுறவு நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு போதிய விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. கடந்த *5* ஆண்டு கால ஆட்சியில் நடைபெற்ற குளறுபடியால், விற்பனையாளர்கள்

நியமனம் செய்யப்படவில்லை. எனவே, அவதிக்குள்ளாகியுள்ள அந்த நிலையை மாற்றிடக் கேட்டுக்கொள்கின்றேன்.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்று இருப்பவர்கள் எல்லோரும் ஏழைகளே. வட்டி, அபராத வட்டி, பல மடங்காகி கடன்தாரர்களாக, கடன் தொல்லையில் மூழ்கியுள்ளார்கள். நம்முடைய புதிய அரசு வந்தவுடன் அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு சில அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக இருப்பது கண்டனத்திற்குரியது. எனவே, ஜப்தி நடவடிக்கையை உடனே கைவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ஏழைகளின் துயர் நிலையைப் போக்க, வீட்டுவசதி கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடை கட்டடங்கள் பழுதடைந்து மழைக்காலங்களில் ஈரம் ஏற்பட்டு, இருப்பு வைக்கின்ற பொருட்கள் வீணாகி நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, நியாய விலைக் கடைகளைப் பழுது பார்க்க நிதி ஒதுக்க வேண்டுமென்று நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி வெட்டுக் கூலி, வாகன வாடகை ஆகியவற்றை சர்க்கரை ஆலைகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆங்காங்கேயுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் முன்பு அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இல்லாத பகுதிகளை, தேர்வு செய்து கூட்டுறவு வங்கிகளை புதியதாக அமைத்திட வேண்டியும் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் தேர்தல் நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையமும், உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கு மாநில தேர்தல் ஆணையமும் இருப்பதுபோல் கூட்டுறவுச் சங்க தேர்தல் ஜனநாயக ரீதியாக நடத்துவதற்கு கூட்டுறவு தேர்தல் ஆணையம் தொடங்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கின்றேன்.

உணவுப் பொருட்களான பருப்பு, எண்ணெய், மாவு போன்றவற்றில் கலப்படம் செய்து விற்கப்படுவதாக நுகர்வோர் சங்கங்களின் மூலமாக எங்களுக்கு தகவல் வந்துள்ளது. எனவே, கலப்படத்தை தடுத்து நிறுத்த வேண்டும். கலப்படம் செய்பவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க



வேண்டுமென்று நமது அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நமது அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் ரூ. 50 ஆயிரம் வாங்கியவர்களுக்கு இப்போது ரூ. 2 இலட்சம் என்கிறார்கள். அதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்து சிலபேர் இறந்துகூட உள்ளார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கக் கடன்களை இரத்துச் செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தின் அடிப்படையில் கலைஞர் அவர்கள் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கியிருப்பது நாட்டு மக்கள் வரவேற்கக்கூடிய மாபெரும் மகத்தானத் திட்டம். ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். ரேஷன் அரிசி கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ரேஷன் அரிசியைக் கடத்துபவர்கள்மீது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் செய்து அரிசியாக்குகிறோம். இந்த அரிசி ரேஷன் கடைக்கு வரும்போது பழுப்பு நிறமாக உள்ளதாகவும், வாடை வருவதாகவும் புகார் சொல்கிறார்கள். இதை நிவர்த்தி செய்யலாம். அரிசி ஆலையில் தண்ணீர் பதத்தோடு, அடிக்கடி மாற்றி உடனுக்குடன் அரிசி அரைவை செய்ய வேண்டும். ரேஷன் கடையில் விநியோகம் செய்யக் கூடிய அரிசிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நமது அமைச்சர் அவர்கள் அரிசி ஆலைகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

உணவகங்களில் இட்லி, தோசை, வடை, சாப்பாடு ஆகியவற்றின் விலைகளை அவரவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு உயர்த்திக் கொள்கிறார்கள். இதனைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. எனவே, பல இலட்சம் பேர் அன்றாடம் உணவகங்களில் உண்ணும் இட்லி, தோசை, வடை, உணவு போன்ற உணவுப் பண்டங்களின் விலைகளை அரசேகூட நிர்ணயிக்கலாம் என்று நான் நமது அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் இரத்து, எவ்வளவு துணிச்சலாக தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொன்னதைத்தான் இப்போது செய்திருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன் தள்ளுபடிக்காக, 1435 கோடி இந்த நடப்பு ஆண்டிலே மட்டும் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கடனைத்தான் தள்ளிவிட்டோமே, மேலே கடன் வாங்காதீர்கள், நீங்கள் முதல்போட்டு விவசாயம் பண்ணுங்கள், அப்படி ஏழை விவசாயிகளிடம் சொல்ல முடியுமா? அதைக் கருத்தில் வைத்துதான், இந்த வரவு – செலவுத் திட்டத்திலே விவசாயிகள் மேலும் கடன் உதவி பெறுவதற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்குத் தாராள மனது வேண்டும். அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. இன்னொன்று முக்கியமான அம்சம், பயிர்க் கடன்களுக்கு சென்ற ஆண்டு, இருந்த 9 சதவிகித வட்டி இப்போது 7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11–30*

அதுமட்டுமல்ல. இதனால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை அரசே ஏற்றுள்ளது. இது முடியுமா என்று கை கொட்டிச் சிரித்தவர்கள் இப்போது கை கட்டி இருக்கிறார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கும் கடன்களுக்கு குறைந்தபட்சம் 10 சதவிகிதம் மானியமாக அளித்து விவசாயிகளை மேலும் ஊக்குவித்து உதவிட வேண்டுகிறேன்.

தமிழகத்தில் சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நியாய விலைக் கடைகள் இன்னும் தனியார் கட்டடங்களில் வாடகை செலுத்தி இயங்கி வருகின்றன. இந்த நிலையை மாற்றி, அரசே சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப்பற்றி சில கருத்துகளை இந்த மாமன்றத்திலே எடுத்துரைக்க விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முகையூர் தொகுதி என்பது நகரங்களே இல்லாத முழுக்க முழுக்க கிராமங்களே உள்ள தொகுதி ஆகும். விவசாயத்தை மட்டும் நம்பியே உள்ள எனது தொகுதியில் விவசாயம் சார்ந்த ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைத்து எங்கள் தொகுதிவாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் விளைந்திடும் கரும்பு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் பதிவு செய்யப்பட்டு இருந்தாலும், அந்த ஆலையின் அரைவைத் திறன் குறைவாக இருப்பதால் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் வெளி மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் அனுப்பப்படுகின்றது. இந்த நிலையை மாற்றிடவும், (மணியடிக்கப் பெற்றது) எனது தொகுதியை மேம்படுத்திடவும், நீர்வரத்து அதிகம் உள்ள பகுதியான மணம்பூண்டியில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைத்து விவசாயிகளின் நலனைத் காத்திடவும், முகையூர் தொகுதியில் தொழிற்சாலைகளே இல்லை என்கிற நிலையை மாற்றிடவும் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு வேண்டுகிறேன்.



விழுப்புரம் மாவட்டத்தில் அமைய உள்ள அரசு மருத்துவக் கல்லூரியை விழுப்புரம்–திருவண்ணாமலைக்கு இடையில் திருக்கோவிலூருக்கு அருகில் உள்ள அரகண்டநல்லூரில் அமைத்தால் நகரமே இல்லாத முகையூர் தொகுதிக்கு ஒரு நகரம் உருவாகும் வாய்ப்புக் கிட்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களே, எனது தொகுதிக்கு ஒரு நகரத்தை உருவாக்கித் தாருங்கள் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட அரகண்டநல்லூரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் அரைவை ஆலையில் 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அரைவை இயந்திரம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் தண்ணீர் இல்லாமல், பற்றாக்குறையின் காரணமாக செயல்படாமலே இருக்கின்றது. எனவே, அதனை இயக்கிடவும், அதன்மூலம் பல கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும், ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதிக்குட்பட்ட ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கலியவரதன், இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** Transformer–கள் இல்லாமல் விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. அதற்கும் ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மணலூர்பேட்டை–தியாகதுருகம் இடையில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம்

மழைக்காலங்களில் மூழ்கி விடுவதால் சுற்றுவட்டாரத்தில் 100 கிராமங்களில் உள்ள மக்கள் கள்ளக்குறிச்சி செல்ல வேண்டுமென்றால் திருவண்ணாமலை வழியாகவோ அல்லது திருக்கோவிலூர் வழியாகவோ சுமார் 50 கி.மீ. தூரத்திற்கும் மேலாகச் சுற்றி, தியாகதுருகம் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மணலூர்பேட்டைக்கும் தியாகதுருகத்திற்கும் நடுவில் பாலம் அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முகையூர் மருத்துவமனையில் இயங்காமல் உள்ள 15 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டி, மருத்துவர், செவிலியர் ஆகியோரைப் பணியமர்த்தி, மக்கள் நலன் காக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கண்டாச்சிபுரம் அரசு மருத்துவமனைக் கட்டடம் பழுதாகி, தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் நிலையை மாற்றி, புதிய கட்டடம் கட்டித் தந்து, 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக அதை மாற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மணலூர்பேட்டை, பழையகருவாச்சி மற்றும் அன்னியூர் அரசு மருத்துவமனைகளை விரிவுபடுத்தும் வகையில் புதிய கட்டடங்கள் கட்டி, கூடுதல் மருத்துவர், செவிலியர்களைப் பணியில் அமர்த்தி அவற்றையும் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனைகளாக உயர்த்திட வேண்டுகிறேன்.

மணலூர்பேட்டை, அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம், பனமலைப்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தருமாறும் மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்டோர் விடுதி அமைத்துத் தருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மணலூர்பேட்டை பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அரகண்டநல்லூர், விளந்தை, பனமலைப்பேட்டை, பழையகருவாச்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தரவேண்டுகிறேன்.

எங்கள் தொகுதியில் தீயணைப்பு நிலையமே இல்லை. எனவே, மணலூர்பேட்டையிலும், கண்டாச்சிபுரத்திலும் தீயணைப்பு நிலையங்கள் அமைத்துத் தரவேண்டுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கலியவரதன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நிறைய, 20 பக்கங்களுக்கு மேல் டைப் அடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். கடைசிப் பக்கத்திற்குப் போய்விடுங்கள்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** கெடிலம் ஆற்றுத் தண்ணீர் தென்பெண்ணையாற்றில் கலந்து கடலில் வீணாகக் கலப்பதைத் தடுக்க தேவனூர் கிராமத்திற்கு மேல் ஒரு தடுப்பணை கட்டி, அந்தத் தண்ணீரை தேவனூர், வடகரை தாழனூர், பில்ராம்பட்டு, காடனூர், ஆலம்பாடி, காரணைபெருச்சானூர், ஆயந்தூர், சென்னகுளம் இப்படிப் பல்வேறு கிராமங்களில் உள்ள 20 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்படுவதற்கு புதிய வாய்க்கால் அமைத்து விவசாயம் பெருகிட, வழிவகை செய்திட வேண்டுகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரத்திலும், திண்டிவனத்திலும் ஒரே திசையில் அரசு கலைக் கல்லூரிகள் உள்ளன. மாவட்டத்தின் மேற்குத் திசையான கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் மற்றும் எனது தொகுதி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் அரகண்டநல்லூரில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உரையை முடித்து விடுங்கள்.

முற்பகல் 11–35

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நான் விடுத்த கோரிக்கைகளின் தொடர்புடைய அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும் அருள்கூர்ந்து ஆவன செய்து, மிகவும் பின்தங்கிய தொகுதியான விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள முகையூர் தொகுதியினை வளமான தொகுதியாக மேம்படுத்தித் தருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க மருத்துவர் அய்யா, வாழ்க டாக்டர் கலைஞர். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான

உணவு மற்றும் வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உணவு மற்றும் கூட்டுறவுத் துறை.

**திரு. ப. டில்லி பாபு:** கூட்டுறவு; அந்தத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலிலே பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்பார்கள். ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சி வெற்றி பெற்று மரியாதைக்குரிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்று ஆட்சி அமைத்தபோதே தமிழகத்தில் சுமார் 6½ கோடி மக்களுடைய வாழ்க்கையினுடைய அத்தியாவசியப் பிரச்சினையான, 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி அளிக்கின்ற திட்டத்தை முதல் திட்டமாக அறிவித்து, அதை இந்திய நாடு முழுவதும் பாராட்டக்கூடிய அளவிற்கு சிறப்புமிகு உத்தரவைப் பிறப்பித்திருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம்.

அதேசமயத்தில், இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய உழைப்பாளி, தொழிலாளர் அனைத்துப் பகுதி மக்களையும் சென்றடைய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகின்றது. Ration Card இல்லாத மக்களுக்கு சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு, இந்தத் திட்டத்தின்கீழ் 2 ரூபாய் அரிசி கிடைக்காமல் அவர்கள் வெளியிலே பதுங்கி வாழ்வதையும் இந்த நேரத்திலே காண முடிகிறது. ஆகவே, அந்த Ration Card இல்லாத மக்களுக்கு Ration Card அளிப்பதன்மூலமாக முழுமையாக இந்தத் திட்டம் சென்று சேர்வதற்குப் பயன்படும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்துகின்றோம்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை, எனது நினைவுக்கு எட்டியவரை தமிழகத்தில் 1904 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், திருவூரில் முதல் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டதாம். கடந்த ஆண்டு 2004 ஆம் ஆண்டு இது 100 ஆண்டுகள் நிறைவுபெற்றுவிட்டது; நூற்றாண்டு விழா நடத்தி இருக்க வேண்டும். துரதிருஷ்டம், கடந்த ஆட்சிக்காலத்தில் கூட்டுறவுத் துறையின்மீது அக்கறை இல்லாததினாலோ அல்லது கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட வளர்ச்சியிலும் விவசாயிகளினுடைய வாழ்க்கையிலும் அக்கறை இல்லாத காரணத்தினாலோ அந்த நூற்றாண்டு விழாவைக்



கொண்டாட முடியாமல் போய்விட்டது. இந்த நேரத்திலே மாண்புமிகு தமிழக முதல்வரையும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, விவசாயிகளினுடைய வாழ்க்கையில், எந்த அளவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டுறவுத் துறையை தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய விவசாயிகளின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்துவதற்காக அந்த நிறைவு விழாவை இந்த ஆட்சிக்காலத்திலேயாவது நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நேற்றைய தினம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தனி அதிகாரிகளினுடைய பதவிக் காலத்தை 6 மாதக் காலம் நீட்டிக்கின்ற வகையிலே சட்டமுன்வடிவை முன்வைத்திருக்கிறார். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டு காலமாக இந்தக் கூட்டுறவுத் தேர்தல் நடைபெறாமல், ஆட்சியாளர்கள் அதிகாரிகளுடைய ஆட்சியாகத்தான் நடைபெற்றது. விவசாயிகளினுடைய பிரதிநிதிகள், அவர்களுடைய ஆட்சி இல்லாமல், கடும் வேதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட அந்த விவசாயிகளின் பிரதிநிதிகள் இந்த ஆட்சியிலாவது விடுதலை பெற்று, கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதன்மூலமாக உரிய ஜனநாயக முறையில் அத்தனை சலுகைகளும் அந்த மக்களுக்கு நேரடியாகச் சென்று சேர்வதற்கு தமிழக அமைச்சர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் கூடிய விரைவில் கூட்டுறவுத் தேர்தலை நடத்த முன்வர வேண்டுகிறேன். அதேசமயத்தில் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய ஏறக்குறைய ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் கூட்டுறவு அங்கத்திலே 2000 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட அடிப்படையிலே அந்தத் தேர்தல் நடக்கும் என்று அறிவித்துள்ளதை வரவேற்கின்றோம். அதே நேரத்தில் முறையாக, ஒழுங்கான முறையிலே தேர்தலை நடத்த வேண்டும். இதன்மூலம் 52,500 பெண்களும், ஏறக்குறைய 31,500 தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், ஒட்டுமொத்தமாக 1 இலட்சத்து 75 ஆயிரம் Board of Directors – இயக்குநர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டுவர முடியும்.

முற்பகல் 11–40

அதோடுமட்டுமல்லாமல், மாதிரி கூட்டுறவுச் சட்டம் அமைக்கப்பட்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர், திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் தலைமையிலே ஒரு குழு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது. அது கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் கடந்த

ஆட்சிக் காலத்திலே பல்வேறுபட்ட மக்கள் விரோதக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, ஊழியர்களை நிரந்தரமாக்குவதிலிருந்து தடையாணை பெற்றிருப்பது, ஊழியர்களுடைய சம்பள உயர்வுக்குத் தடையாணை பெற்றிருப்பது, இப்படி பல விஷயங்களில் கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத் துறை ஊழியர்களுடைய பாதிப்புகள் சொல்லில் அடங்கா. அந்த அடிப்படையிலே திரு. சி.டி. தண்டபாணி அவர்களுடைய பரிந்துரைகளைத் தமிழக அரசு பரிசீலித்து, அதை வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏறக்குறைய 6,866 கோடி ரூபாய்க்கு கடன் தள்ளுபடி செய்திருப்பது என்பது சாதாரண விஷயம் அல்ல. இந்த 6,866 கோடி ரூபாய் கடன் தள்ளுபடியோடு, 1,435 கோடி ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. 435 கோடி ரூபாய் நபார்டுக்குச் செலுத்தினாலும், ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளுக்கு இந்த ஆண்டிற்கு கடன் வழங்குகிற அந்தத் திட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கின்றது. அதேநேரத்தில், இந்தக் கடனை 50 சதவிகிதம் இன்னும் கூடுதலாக அளிப்பதன்மூலமாக, விவசாயிகளுக்குப் பெரிய அளவில் பயன்படும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஐக்கிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைத்த பேராசிரியர் வைத்தியநாதன் குழுவினுடைய பரிந்துரைகளையும் நம்முடைய மாநிலத்தினுடைய நிலைமைக்கேற்ப ஆய்வு செய்து அவற்றை அமலாக்கிட வேண்டுகிறோம்.

அதேபோல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பொது பதவித் திறன் அமலாக்கிட வேண்டும். அரசாணை 55–ஐ அமலாக்கினாலே போதும். ஏனென்று சொன்னால் பல கூட்டுறவுச் சங்கங்களிலே 5 ஆண்டு காலமாக ஒரு Secretary இருப்பார், அங்கு நடக்கிற பல்வேறுபட்ட ஊழல்களோ அல்லது தில்லுமுல்லுகளோ, அவருக்கு வேண்டப்பட்டவர்களுக்குக் கடன் வழங்குவதோ, இப்படிப்பட்ட விஷயங்கள் 5 ஆண்டு காலமாக நடைபெற்றிருக்கின்றன. ஆக, அரசாணை 55–ஐ அமல்படுத்துவதன்மூலமாக, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையோ அல்லது மாவட்டத்திற்குள்ளேயோ within district–ஆக இருந்தாலும் சரி—அதே மாவட்டத்தில்கூட பணி இடமாற்றம் செய்கின்ற அந்த அம்சங்களைக் கொண்டு வருவதன்மூலமாக



இப்படிப்பட்ட குளறுபடிகள், இலஞ்ச இலாவண்யங்கள் நடப்பதைத் தடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள். அந்தச் சங்கங்களிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்கு, அரசாங்கத்திலே ஓரளவுக்கு நல்ல சம்பளம் தந்தாலும், நியாயவிலைக் கடைகளில் பணிபுரியக்கூடிய அந்த ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய அந்தச் சம்பளத்தை, அவர்களுக்கு இணையாக வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். அதாவது, ஒரே வேலை; இவர்களும் அரிசி போடுகிறார்கள், சர்க்கரை போடுகிறார்கள், மண்ணெண்ணெய் போடுகிறார்கள், அவர்களும் அதேபோல அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அப்படியிருக்கிற பட்சத்தில், ஒரே வேலைக்கு, இரு வேறு வகைகளில் ஊதியமாக வழங்குகிற நிலைமையை மாற்றி, நியாயவிலைக் கடைகளில் பணிபுரியக்கூடிய அந்த ஊழியர்களுக்கும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே பணிபுரியக்கூடிய அந்த ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளான சென்னை காமதேனு, கோவை சிந்தாமணி, திருப்பூர் வளர்மதி, சேலம் பொன்னி, வேலூர் கற்பகம் போன்ற கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு அதிக நிதி உதவி அளித்து, புனரமைத்து, அதனை முழுமையாக செயல்பட வைக்குமாறு இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, மனித சமுதாயத்தின் கடைக்கோடி மக்களாக இருக்கக்கூடிய மலைவாழ் மக்கள், கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அவர்களுக்கு பல்வேறுபட்ட சலுகைகள் வழங்கப்பட்டாலும், சலுகைகள் கிடைக்காமல் மறுக்கப்பட்டு வந்த நிலைமை இன்றைக்கும் தமிழகத்தில் தொடர்கிறது. பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, LAMP Society என்று சொல்லக்கூடிய அந்தச் சங்கங்கள், கடந்த 5 ஆண்டு காலமாக நலிவடைந்து, சீரழிந்து இருந்ததை தமிழகம் அறியும், அனைத்து மக்களும் அறிவார்கள். ஆகவே, அந்த மக்களுடைய உற்பத்திப் பொருள்களான தேன், கடுக்காய், காய்கறிகள், பழவகைகள் ஆகியவற்றிற்கு உரிய சந்தைகளை உருவாக்கி, அதன்மூலம் அவர்கள் வாழ்விற்கு உத்தரவாதம் அளிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், வேளாண், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சிக்காலத்திலே அரசியல்

காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கடைபிடிக்கப்பட்ட கிரிமினல் நடவடிக்கைகளை இவ்வரசு கைவிட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

முற்பகல் 11–45

உணவு மற்றும் பொது விநியோகத் துறையைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 750 கோடி ரூபாயை கூடுதலாக அறிவித்திருக்கிறார்கள். ஆக, இந்த 750 கோடி ரூபாய் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். அதேசமயத்தில் கார்டு வழங்குவதில் இன்னும் கார்டு வழங்கப்படாமல், புதிய கார்டு விண்ணப்பித்தவர்கள் கார்டு கிடைக்காமல், ஒப்புகைச் சீட்டு மட்டும் பெற்று, அந்த ஒப்புகைச் சீட்டிலே இரண்டு, மூன்று மாத காலமாக பொருட்களைப் பெற்று, மீண்டும் பொருட்களைப் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு உடனடியாக பொருட்கள் கிடைக்கின்ற அந்த அம்சத்தை வலியுறுத்தவேண்டுமென்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன். புதிதாகத் திருமணம் ஆகி குடும்பம் அமைத்தவர்களுக்கு உடனடியாக கார்டுகளை வழங்குவதற்கு இந்தக் கூட்டத்தொடரிலேயே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று தமிழக மக்களும் எதிர்பார்க்கின்றார்கள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய கல்குளம் தாலுகாவில் ஏறக்குறைய 271 கார்டுகள் எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வழங்க வேண்டிய உணவுப் பொருட்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆக, இதை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, போலி கார்டுகள் சம்பந்தமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு வருகை தந்து ஆய்வு நடத்தியபோது, பல விவரங்களைச் சொன்னார்கள். கடந்தகால ஆட்சியில் நடைபெற்றதற்கு ஆதாரம், திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் சம்பந்தப்பட்ட ஒரு கடையிலே தமிழக அரசாங்கத்தினுடைய உயர் அதிகாரிகளும், உயர்நீதிமன்றத்தினுடைய



உத்தரவோடு கண்டுபிடிக்கப்பட்ட 511 கார்டுகள் ஒரே ஒரு Salesman, அவர் பெயரிலே 2 கார்டுகள், மனைவி பெயரிலே 2 கார்டுகள், தாய் பெயரிலே ஒரு கார்டு என்று இப்படி ஒரு Salesman 5 கார்டுகளை வைத்திருப்பது ஆதாரபூர்வமாக உயர்நீதிமன்றத்தில் பதிவாகி இருக்கின்ற விஷயம். அதுசம்பந்தப்பட்ட விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. ஆக, இது போன்ற நடவடிக்கைகளை, குளறுபடிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** கார்டு இல்லாதவர்களுக்கு கார்டு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அதேபோல், நகர்ப்புறங்களிலே 800 கார்டுகளிலிருந்து 1,000 கார்டுகள் வரை இருந்தால் முழுநேரக் கடை என்பதும், கிராமப்புறங்களிலே 500 கார்டுகளிலிருந்து 800 கார்டுகள் வரை இருந்தால் முழுநேரக் கடை என்பதையும் வரவேற்கின்றோம். தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம் போன்ற மலைப் பகுதி மாவட்டங்களில்—மாண்புமிகு அமைச்சரிடம் நான் வலியுறுத்தி இருந்தேன். கொல்லங்கொட்டாய் போன்று 25 வீடுகள் அல்லது 40 வீடுகள் இருக்கக்கூடிய அந்தக் கிராமப் பகுதியிலே 2 கி.மீ., 5 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ள அந்தப் பகுதிகளில் 100 கார்டுகள் இருந்தால்கூட, ஒரு பகுதிநேர ரேஷன் கடையை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மட்டரகமான அரிசி இருப்பதைக் கண்டுபிடித்து உடனடியாக அதை மாற்றுவதற்கு உத்தரவிட்டார். இப்பொழுது வழங்குகின்ற சத்தீஸ்கர், ஆந்திர மாநில அரிசிகளை இன்னும் கூடுதலாக சிறப்பான அரிசி, எங்கு கிடைக்குமோ அதை இந்த மக்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெயின் அளவு மிகக் குறைந்த அளவாக வருகிறது. 80 சதவிகிதம், 90 சதவிகிதம் என்று வருகிறது. அதைக் கூடுதலாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன்.

இறுதியாக கூட்டுறவு ஊழியர்களுடைய சம்பளம் சம்பந்தப்பட்ட விஷயம். நேற்றையதினம் மின்சார வாரிய ஊழியர்களுக்கு அறிவித்ததைப் போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கும் 50 சதவிகித அகவிலைப்படியை அடிப்படை

சம்பளத்துடன் இணைத்து வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வெளியிடப்பட்ட ஊதிய ஒப்பந்த ஆணைகள் ஐந்தாண்டுக் காலம் காலாவதி ஆகிவிட்ட நிலையில், மீண்டும் இவ்வாணையை அனைத்து தொழிற்சங்கங்களுடனும் பேசி புதிய ஆணைகள் வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். காலியிடப் பணிகளை நிரப்ப வேண்டுகிறோம். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டுகிறோம்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஆயிரக்கணக்கான சுமை தூக்கும் தொழிலாளர்கள் கூலி உயர்வு அளிக்கப்படாமலும், நிரந்தரம் செய்யப்படாமலும் இருக்கிறார்கள். அந்த சுமை தூக்கும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்து, சம்பளம் உயர்த்தித்தர வேண்டுகிறோம். கடந்த மே மாதம் 8 ஆம் தேதி தேர்தல் நடைபெற்றபோது, (மணியடிக்கப்பெற்றது) சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு அன்றைய சம்பளம் வழங்கப்படாமல் பிடித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டில்லிபாபு, உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** ஆக அவர்களுக்கு சம்பளம் வழங்கிட வேண்டுகிறோம். கூட்டுறவுத் துறை ஊழியர்களுடைய பென்சன் திட்டத்தை அமலாக்க வேண்டுகிறோம். அதோடுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதி, அரூர் சட்டமன்றத் தொகுதியில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுதுதான் தொகுதிக்கே வருகிறீர்களா?

**திரு. ப. டில்லி பாபு:** அரூர் சட்டமன்றத் தொகுதியிலே ஏறக்குறைய 70 கி.மீ., 80 கி.மீ. தூரம் கல்லூரிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரே ஒரு கிராமத்தில் 150 பட்டதாரிகள், 150 முதுகலைப் பட்டதாரிகள், படித்த இளைஞர்கள் இருக்கின்றார்கள். ஆக, கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த நேரத்தில் அரூரிலே ஒரு அரசு கலைக் கல்லூரியைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலே மனு அளித்திருக்கிறேன். அதை இந்தக் காலத்திலோ அல்லது அடுத்த ஆறு மாத காலத்திலோ, கல்லூரியைக் கொண்டு வரவேண்டும். அதேபோல் உலகத்திலே உயர்ந்த மாலிப்டினம் அரூரிலே கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான பல ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக அது கிடைக்கும் என்று ஏற்கெனவே முன்பு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் அறிவித்திருக்கிறார். ஆக, அரூரிலே அந்த மாலிப்டினம் தொழிற்சாலையைக் கொண்டு வருவது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே அமல்படுத்த நடவடிக்கை எடுப்பது, இப்படிப்பட்ட விஷயங்களுக்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்லதொரு வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.



முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் உணவு மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை நான் இங்கே சொல்ல விழைகின்றேன். அதற்கு முன்னதாக தமிழ்நாட்டை ஆளுகின்ற நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு, நாங்கள் பல ஆண்டுகளாக கோரி வந்த, அத்திட்டத்தை நாங்கள் சொல்வோம், கொள்ளிடம் உபரி நீர் என்று. ஆனால், இன்றைக்கு வரவு–செலவுத் திட்டத்தில் அறிவித்திருக்கின்ற திருச்சி மாநகரைக் காப்பாற்றவும், திருச்சி மாவட்ட கிராமங்களைக் காப்பாற்றுகின்ற நோக்கத்தில் புதுக்கோட்டை ஒரு வறட்சியான மாவட்டம் என்பதை கணக்கில் எடுத்து, அந்த மாவட்டத்திற்கு திருச்சியில் வெள்ளம் வருகின்ற காலத்தில் திருச்சியைப் பாதுகாப்பதற்காக எங்கள் மாவட்டத்தின் வறட்சியைக் கணக்கில் எடுத்து, எங்கள் மாவட்டத்திற்கு அந்த நீரைத் திருப்பிவிட்டு அங்கே உள்ள ஏரி, குளங்களை எல்லாம் பெருக்கித் தருவதற்கு 295 கோடி ரூபாய் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த அறிவிப்புக்கு என்னுடைய சார்பிலும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும், இன்னும் சொல்லப்போனால் புதுக்கோட்டை மாவட்ட மக்களின் சார்பிலும் என்னுடைய நன்றியை முதல்வரின் பாதம் தொட்டு வணங்கி தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக என்னுடைய தொகுதிக்கு 3 உயர்நிலைப் பள்ளிகள் வேண்டும் என்று கேட்டோம். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் 3 உயர்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டிற்குத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் வழங்கியிருக்கின்றார். அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல போக்குவரத்துத் துறை அமைச்சர் கிராமங்களை இணைக்கக்கூடிய வகையில் நான்கு வழித்தடங்களைக் கொண்ட புதிய பேருந்துகளை விடுவதற்கு உத்தரவிட்டு, இப்போது அந்தப் பேருந்துகள் எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னும் கேட்டதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றார். அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் என்னுடைய தொகுதிக்கு மாணவ–மாணவியர் விடுதி வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன். அவரும் கொடுப்பதாக உறுதியளித்திருக்கின்றார். Advance நன்றிகளாக அவருக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து மானியக் கோரிக்கையின்மீது ஒருசில கருத்துகளை நான் சொல்ல விரும்புகின்றேன். நான் சொல்ல விழைகின்ற கருத்துகள் பல மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே இருந்து வந்திருக்கின்றன. இருந்தாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துகளை நான் தொகுத்து இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

கூட்டுறவு அமைப்பு ஏற்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. இந்தக் கூட்டுறவு அமைப்புகள் வளமோடும், பொலிவோடும் கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக இருந்தன. ஆனால் 1990–க்குப் பிறகு இதனுடைய பொலிவு, வலிவு எல்லாம் இழந்து இன்றைக்கு அதற்கு ஊசி போடுகின்ற, மருந்து கொடுக்கின்ற ஒரு நிலைக்கு கூட்டுறவு அமைப்புகள் தள்ளப்பட்டுவிட்டன. ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவு அமைப்புகளுக்கு உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் என்று சொல்லுகின்றபோது இப்போது இருக்கின்ற உறுப்பினர்கள், இரண்டு ரூபாய் கட்டி ஆயிரக்கணக்கில் சேர்த்து வைத்திருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் விடுவித்துவிட்டு அந்தக் கூட்டுறவில் யார் பயனாளிகளாக இருக்கின்றார்கள் என்பதைக் கணக்கிட்டு அவர்கள் மூலமாக அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



முற்பகல் 11–55

இன்றைக்கு வந்திருக்கின்ற நம்முடைய அரசு, டாக்டர் கலைஞருடைய அரசு, இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு மறு உயிர் கொடுத்திருக்கின்றது. சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், புதிய கடன் வழங்குவதற்காக 1,500 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தை வலுப்படுத்தக்கூடிய முறையில் இந்த ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்கள் அந்தத் தள்ளுபடியைப் பற்றி என்ன பேசுகிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களை நெஞ்சார வாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள், அரசியல் வித்தியாசம் இல்லாமல், அது எந்தக் கட்சி என்று இல்லாமல். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில நண்பர்கள் எங்களுடைய ஆட்சியிலே செய்யாததை, டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கின்றார் என்று சொல்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றியப் பெருந்தலைவராக இருக்கின்றார், அவருக்கும் அவருடைய அண்ணனுக்கும் சேர்த்து 1¼ கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதை எப்படித் தருவார்கள்? நாங்கள் நினைக்காத ஒன்று நடந்துவிட்டது என்று பெருமையாக டாக்டர் கலைஞர் அவர்களைப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையெல்லாம் இருக்கின்றது. (குறுக்கீடு)

இந்த நிலையில் பயிர்க் கடன் என்பது உடனடியாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஊரில் கொடுக்கவில்லையென்று சொல்லுங்கள் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கொடுக்கின்றார்கள், ஆனால், விரைவாக கொடுக்கவில்லை என்பதை இந்த மன்றத்திலே என்னுடைய கருத்தாக நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரும் கூட்டுறவுத் துறை அமைச்சரும் விரைவாக அந்தப் பணிகளிலே ஈடுபடுகிறார்கள். உணவுத் துறை அமைச்சரை எடுத்துக்கொண்டால் எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் அலுவலர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு ஆய்வு நடத்தினார். அதைப் போல, கூட்டுறவுத் துறை அமைச்சரும் பல கோட்டங்களாகப் பிரித்து, விரைவாக

செயல்படுத்துவதற்கு என்ன வழிவகை என்பதைப் பற்றியெல்லாம், எங்களையெல்லாம் அழைத்து தஞ்சாவூரிலே மிகப் பெரிய ஒரு கூட்டத்தை அவர் நடத்தினார். ஆகவே, விரைவாக நடத்தச் சொல்வதற்கான முயற்சியில் அமைச்சர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதோடுமாத்திரமல்ல, அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் சிறப்பாக நடத்தப்பட வேண்டும். இனிமேல் ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் ஒரு தள்ளுபடி வரும் என்று விவசாயிகள் நினைக்காத அளவிற்கு விவசாயிகளை ஊக்குவிக்கின்ற முறையில், விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வாங்கிய கடன்களையெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்ததைப் பற்றிச் சொல்கின்றபோது, அங்கேயிருக்கின்ற அலுவலர்கள் அல்லது நிர்வகிக்கின்றவர்கள் தவறான சில நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்றார்கள். விவசாயிகள் அறவே கடனைக் கட்டாததும் ஒரு காரணம், செயலாளர்கள் முறையாக பணி புரியாததும் ஒரு காரணம் என்று இப்படி பல காரணங்களால் நலிவுற்றிருக்கின்றன. ஆகவே, அந்த நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி, மற்ற வங்கிகளாக இருந்தாலும் சரி, அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் மாவட்ட அளவிலே உள்ள அதிகாரிகளாக இருந்தாலும் சரி, இடமாற்றம் செய்யப்பட வேண்டும். தொடர்ந்து ஒரு ஊரிலே பல ஆண்டுகள் இருக்கக் கூடாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அப்படி வருகின்றபோது அலுவலர்களை நியமிக்கிற அதிகாரம், ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலும் அலுவலர்களை நியமிக்கின்ற அதிகாரம் மாநில அரசு கையிலேதான் இருக்க வேண்டும்; தேர்தலுக்குப் பின்னாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்திடம் இருக்கக்கூடாது. அது அரசினுடைய கையிலே இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*நண்பகல் 12-00*

அதேநேரத்தில், வைத்தியநாதன் கமிஷன் பரிந்துரைகளைச் செய்திருக்கின்றது. அந்தப் பரிந்துரைகளைப் பற்றி பரிசீலித்து, தேவையானவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.



அடுத்து டெபாசிட்டுகள் முதிர்வு அடைந்தால் நிச்சயம் தருவோம் என்று இங்கே பேசிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வரவேற்கின்றோம். ஆனால், இன்றைக்குப் பல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் முதிர்வு அடைந்தும் கொடுக்க முடியாத நிலை உள்ளது. என்னிடமே பல நண்பர்கள் சொல்லி இருக்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் என்னுடைய தலைமையிலே, அந்த முதிர்வு அடைந்த டெபாசிட்டுகளைத் திருப்பித் தர வேண்டும் என்று சொல்லி மறியல் போராட்டமே நடத்தி இருக்கின்றோம். ஆகவே, இந்த அரசு அந்த முதிர்வு அடைந்த டெபாசிட்டுகளைத் திருப்பிக் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில், கூட்டுறவு ஸ்தாபனங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், பணியாளர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், 20 ஆண்டு காலத்திற்கு மேலாக அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கின்றார்கள். டாக்டர் கலைஞருடைய அரசு 2001-ல் ஒரு அரசாணை பிறப்பித்து, 2 ஆண்டுகள் பணியில் இருந்து, 480 நாட்கள் பணி புரிந்து இருந்தால், அவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பித்தார்கள். அந்த ஆணையை அடுத்து வந்த அரசு செயல்படுத்தவில்லை. அடுத்து வந்த அரசு என்கின்றபோது அதுமட்டுமல்ல, கூட்டுறவு ஸ்தாபனங்களை முடம் ஆக்கிய நிலைதான் இருந்து வந்தது. ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த அரசு அந்தப் பணியாளர்களைப் பாதுகாக்க வேண்டும். அதேநேரத்தில் சில நலிவடைந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே இருக்கக்கூடிய பணியாளர்கள், 2 ஆண்டு காலமாக சம்பளம் இல்லாமலே இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இராசசேகரன், கொஞ்சம் வேகமாகப் பேசுங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** சம்பளம் இல்லாமலே இருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டும்.

அடுத்து, உணவுத் துறைக்குச் சில செய்திகளை நான் சொல்ல விரும்புகின்றேன். நெல் கொள்முதல் மிக முக்கியமானது. இந்த நெல் கொள்முதல் என்று வருகின்றபோது, ஒரு குவிண்டால், சன்ன இரகம் என்று சொன்னால் ரூ. 610, சாதாரண இரகம் என்று சொன்னால் ரூ. 480 என்று விலை வைத்து இருக்கின்றார்கள். மத்திய அரசு ஏதோ

வருடத்திற்கு 10 ரூபாய் குவிண்டாலுக்கு ஏற்ற வேண்டும் என்ற முறையில் 10 ரூபாய் ஏற்றி இருக்கின்றார்கள். நேற்றுகூட பாராளுமன்றத்திலே அது ஒரு பிரச்சினையாக வந்து இருக்கின்றது. ஆகவே, மத்திய அரசிடமிருந்து ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் உயர்த்தித் தர தமிழ்நாடு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசு, நம்முடைய அரசு கொடுக்கக்கூடிய அந்த ஆதார விலை என்பதை குவிண்டாலுக்கு 100 ரூபாய் உயர்த்தித் தரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

சென்றகால அரசு, 5 ஆண்டு காலமாக இந்த விலை உயர்வை செய்ததே கிடையாது. ஆகவே, நமது அரசு அதைப் பரிசீலித்து, குவிண்டாலுக்கு 100 ரூபாய் ஆதார விலையாகக் கொடுக்க வேண்டும். ஏன் என்று சொன்னால் விவசாயிகள் இன்றைக்கு அவர்களுடைய விவசாயச் செலவு என்பது உயர்ந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, அதை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இங்கே பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஏகபோக கொள்முதலைப் பற்றி, குறிப்பாக தமிழ்நாடு அரசு, முன்னாடி இருந்த அரசு, மத்திய அரசினுடைய ஏஜெண்டாக இருந்தது என்றும், தமிழ்நாடு அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்றும், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் கூறினார் என்றும், இப்போது என்ன சொல்கிறார்கள் என்றும் கேட்டார். எங்களைப் பொறுத்தவரையில் அதில் மாற்றம் கிடையாது. தமிழ்நாடு அரசு முழுமையாகக் கொள்முதல் செய்ய வேண்டும். ஏகபோகமாக கொள்முதல் செய்ய வேண்டும். அதேநேரத்தில், அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்கள், 20 ஆண்டு காலமாக 3,000 பேர், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் M.A., M.Sc., B.A., B.Sc., பட்டதாரிகள் பணி புரிகின்றார்கள். அவர்களுக்குப் பணி நிரந்தரம் கிடையாது. சம்பள உயர்வு கிடையாது. ஆகவே, அவர்களுக்குப் பணி நிரந்தரமும், காலமுறை ஊதியமும் வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–05

வேலை இல்லாத காலத்தில் அவர்களுக்குப் படிப் பயன் கொடுக்கலாம். 20 ஆண்டுகளுக்கு மேலாக கொள்முதலிலே உதவியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும். கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை, சமூகப் பாதுகாப்பு வழங்க



வேண்டும். அதேநேரத்தில் சென்ற ஆட்சிக் காலத்திலே திருவாரூரிலே புழுத்த அரிசி இருந்தது என்று சொல்லி அங்கேயிருக்கக்கூடிய அலுவலர்கள்மீது பொய் வழக்கு போட்டிருக்கிறார்கள். அந்தப் பொய் வழக்கையே வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, குடும்ப அட்டை சம்பந்தமாக பல்வேறு குளறுபடிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியான ஆலங்குடி தாலுகா அலுவலகத்தில் தினசரி 200 பேர் காத்திருக்கிறார்கள். புது கார்டு வாங்க வேண்டும், பழைய கார்டு மாற்ற வேண்டும், பெயர் மாற்ற வேண்டுமென்று சொல்லி 100 பேர், 200 பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு தாலுக்கா ஆபிசில் கூட்டம் கூடுகிறது என்று சொன்னால், அது குடும்பக் கார்டுக்காகத்தான். ஆகவே, இந்தக் குடும்பக் கார்டுகளுடைய குளறுபடிகளை நீக்க வேண்டும். பெயர்களை மாற்றுவது அல்லது புதிய கார்டு வழங்குவது என்பது அல்லது போலி கார்டுகளை கண்டுபிடிப்பது என்பது ஒரு மாத காலத்தில் ஏதாவது ஒரு இலக்கு வைத்து அது தீர்க்கப்பட வேண்டும். குடும்ப கார்டினுடைய குளறுபடியான நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும்.

அதுமாதிரி ரேஷன் கடைகளுக்கு செல்லுகின்ற தூரம் 1–1/2 கி.மீ. தூரத்திற்குள் சென்று வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில் 5 கி.மீ. தூரம் போக வேண்டியிருக்கிறது. அப்படி போகிறபோது, பிரிக்கிறபோது 2 கடைகளைப் பிரித்தோம் என்று சொன்னால் அந்த தூரம் குறையவில்லை என்றாகிறது. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் ஒரு கடை இருந்தது என்று சொன்னால் 3 கடையாக அதை மாற்றி ஒரு வாரத்தில் 2 நாளைக்கு பொருட்கள் கொடுத்தால் போதும். அப்படிப்பட்ட உத்தரவுகளைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

என்னுடைய தொகுதி மிகப் பெரிய தொகுதி. அதிலே கரம்பக்குடி என்ற ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. அந்தக் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கின்றது. இன்றைக்கு இருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள் 2000 ஆம் ஆண்டில் அங்கே வந்திருந்தபோது அந்தக் கோரிக்கை அவரிடத்திலே நேரடியாகச் சொல்லப்பட்டது. அப்படிச்

சொல்லுகின்றபோது அவர்கள், சில காரணங்கள் இருக்கின்றன, அந்தக் காரணங்களைக் களைந்து அறிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார். ஆகவே, மறக்காமல் வருவாய் துறை மானியக் கோரிக்கையின் போது அதைக் கட்டாயமாக அறிவிக்க வேண்டும். அறிவிப்பார் என்ற நம்பிக்கையை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, இதையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல அரசாக எங்கள் மாவட்டத்திற்கு தண்ணீரைக் கொடுக்கின்ற அரசாக என்னுடைய தொகுதிக்கு கேட்டதையெல்லாம் கொடுக்கக் கூடிய அரசாக, அதனுடைய அமைச்சர்களாக இருக்கின்ற எல்லோருக்கும் நன்றி கூறி, வாய்ப்புக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கின்றேன். நன்றி வணக்கம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் புரட்சிப் புயல் ஆருயிர் அண்ணன் வை.கோ. அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்திட விரும்புகிறேன். நம் நாட்டு மக்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டுமென்று சொன்னால் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. கடன் வழங்குவதன்மூலம் தனி நபர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும் சமுதாயத்தின் பல்வேறு மக்களுடைய கடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவாக கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அநேகமாக 1905 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி விவசாயத்திற்குத் தேவையான வேளாண்மைக் கடன்களை மாவட்டக் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக நிதியுதவி செய்து வருகிறது. 'Each for all and all for each' என்ற தத்துவத்தின் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினர்களும் இணைந்து செயல்பட்டால்தான் பெரு வெற்றியை இந்த நாட்டில் பெற முடியும் என்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் நேர்மையோடும், தொடர்ச்சியாகவும் சிறப்பாகச் செயல்பட்டால் அதன்மூலம் நாட்டின் பொருளாதார, சமூக



முன்னேற்றத்தை எந்தச் சக்தியாலும் தடுத்திட முடியாது. அதைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். "People were starved, not for want of food but for want of co-operative effort. The secret of success of co-operative effort is that the Members must be honest and know the great merit of co-operation and it must have the definite progressive goal" என்று மகாத்மா காந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-10*

அந்த அடிப்படையில் கூட்டுறவுத் துறையின்மூலம் பல்வேறு சங்கங்கள், பல்வேறு அமைப்புகளின் வழியாக நாட்டு மக்களுக்கு இன்றைக்கு பலவிதமான சலுகைகளைச் செய்வதற்காக இந்தக் கூட்டுறவுத் துறை பணியாற்றி வருகிறது. ஊரக விவசாய மக்களுக்கு, குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்குவதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முக்கிய பங்காற்றி வருகின்றன. மக்களின் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கூட்டுறவு வங்கிகள் நகைக் கடனை வழங்கி வருகின்றன.

பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற வேளாண் சார்ந்த துணைத் தொழில்கள் மேற்கொள்ள மத்திய காலக் கடன்களை கூட்டுறவு வங்கிகள் வழங்கி வருகின்றன. வேளாண் சாரா தொழில்களான லாரிகள், பேருந்துகள், நிலம் சமன் செய்யும் இயந்திரங்கள், மண் வாரும் இயந்திரங்கள் போன்றவை வாங்கவும், வீடு கட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை கட்டவும், பொறியாளர்கள் சேவை மையம் அமைக்கவும், தொழிற் கல்வி பயில்வதற்காக கல்விக் கடன்களை அளித்தும் வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சிறப்பாக இயங்கிட தவணைக் கடனை வழங்கி வருகின்றன.

அதுமட்டுமல்ல, மகளிர் தொழில் தொடங்கிட, வேலைவாய்ப்புகளைப் பெருக்கிட மகளிர் தொழில் முனைவோர் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சி தாக்குதலினாலோ, நோயினாலோ அழிந்துவிடும் நிலையில் பயிர்களுக்கு காப்புறுதி நிதி தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை நியாயமான மற்றும் ஆதாயமான விலைக்கு விற்கவும், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கவும், வேளாண் விற்பனை

விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கடன் வழங்கவும், விவசாய விளைபொருட்களைப் பதப்படுத்தவும் ஆகிய நோக்கங்களுக்காகவே கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அத்தோடு தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தரமுள்ள நுகர்வோர் பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பணியை ஆற்றுகின்றன. கூட்டுறவு அச்சகங்கள் மூலம் உள்ளாட்சி நிறுவனம் மற்றும் பொதுமக்களின் அச்சுத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வட்டியில்லா கடன்களை அவை வழங்கி வருகின்றன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் விவசாயிகளுக்கு மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்கு பற்றுச் சீட்டுகளை வழங்கி வங்கிகளில் கடன் வசதி பெறச் செய்கிறது. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மூலமாக நுகர்வோர் வழக்குகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல,

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.”

என்றான் பாரதி. ஏழை எளிய மக்களின் வறுமைக் கொடுமையைப் போக்க, நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டன. ஏறத்தாழ ஒரு கோடியே 90 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சுமார் 28 ஆயிரம் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இந்த நாட்டில் பரந்து, விரிந்திருக்கும் கூட்டுறவுத் துறை ஏழை எளிய மக்களோடு, விவசாயப் பெருமக்களோடு இரண்டறக் கலந்திருக்க வேண்டிய கூட்டுறவுத் துறை, வலுத்தவர்களைப்பற்றிக் கவலைப்படாமல், இளைத்தவர்களைக் கரையேற்ற வேண்டிய கூட்டுறவுச் சங்கங்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் மற்ற பிற வங்கிகளும் தங்களுக்கு எட்டாக் கனியாக இருக்கிறது என்று பெருமூச்சுவிட்ட ஏழை எளியவர்களுக்கு, சாதாரண சாமானிய மக்களுக்கு இதோ நமக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம், நமக்காக ஓர் அமைப்பு இருக்கிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய கூட்டுறவு வங்கிகள் இன்றைக்கு எந்த நிலைமையிலே இருக்கின்றன?



அதைத்தான் 1967–லே பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள்—அன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, நாங்கள் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறோம் என்றபோது, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அந்தச் சமயத்தில் சொன்னார்கள். 1967–லே இந்தச் சட்டமன்றத்திலே அண்ணா அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது, எதிர்க்கட்சியிலே இருந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து சொன்னார்கள். இதே சட்டமன்றத்திலேதான் அண்ணா அவர்களும் சொன்னார்கள். “கூட்டுறவுத் துறையை எந்த அளவுக்கு விஸ்தரிக்கிறோம் தெரியுமா. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை உங்களிடத்திலே விட்டபோது 6,000 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன தெரியுமா என்று நீங்கள் கேட்பீர்கள். மாட்டின்மேல் ஆயிரக்கணக்கான உண்ணிகள் இருக்கின்றன என்றால், மாட்டின் ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் உறிஞ்சி அவை பயன்பட்டிருக்கின்றனவே தவிர, அவற்றால் மாட்டிற்கு என்ன பயன்? அதைப்போல, இன்றைக்கு சுயநலக்காரர்கள், அரசியல் சூதாட்டம் நடத்துகிறவர்கள், ஊரில் உள்ள பெரிய புள்ளிகள், இழுத்த இழுப்புக்கு வருவதற்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் பயன்பட்டு இருக்கின்றனவே தவிர, நாட்டுக்கு என்ன பயன் தருகிறது” என்றார் அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள். இன்றைக்கு எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று இருந்ததைவிட கூட்டுறவுத் துறையின் பணி இன்றைக்கு அதிகமாகிவிட்டது. ஆனாலும், கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை மிகுந்த அவலத்திற்கு ஆளாகி இருக்கிறது. எத்தனையோ கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் இருந்து வருகின்றன. வேறு சில சங்கங்கள் மூடப்படுகின்ற நிலைமைக்கு இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 12–15

கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களைப்பற்றி இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பலபேர் சொன்னார்கள்; பல ஆண்டுகளாக சம்பளம் தரமுடியவில்லை என்று. சொன்னார்கள், இந்தச் சம்பளத்தை மட்டுமே எதிர்பார்த்து வாழ்க்கை நடத்துகின்ற எத்தனையோ குடும்பங்கள் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளாகி வருகின்றன. பெயரளவில் அலுவலகத்தை திறந்து வைத்துவிட்டு, சிறிது நேரத்திலே மூடிவிட்டு பணியாளர்கள் போகக்கூடிய ஒரு நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. தங்கள் பிழைப்புக்கு வழியில்லாமல் திண்டாடும் அந்தப் பணியாளர்களுக்கு மேலும் கஷ்டத்தைக்

கொடுக்கின்ற வகையில் டெபாசிட்தாரர்கள் சில வேளைகளில் கூட்டுறவு வங்கிகளை முற்றுகையிடக்கூடிய ஒரு நிலைமை இருந்து வருகிறது. காரணம், தொடக்கக் கூட்டுறவு வங்கி, பொதுமக்களிடமிருந்து வாங்கிய டெபாசிட்டை முதிர்ச்சி அடைந்ததற்குப் பின்னாலும் திருப்பிக் கொடுக்கமுடியாத ஒரு நிதி நிலைமை அங்கே கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வருகிறது. இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது.

மேலும், கூட்டுறவு வங்கிகள்மூலம் விவசாயிகள் பெற்ற கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் ஏழை எளியவர்கள் கூட்டுறவு வங்கிகளில் I.S.B. என்ற ஒரு கடனை, சிறு தொழில் கடனை — குறிப்பாக, பெட்டிக் கடை வைக்கவேண்டும் என்று சொன்னால், ஒரு 5 ஆயிரம் ரூபாய் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்ட கடன் இந்தத் தள்ளுபடியில் வரவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள், மத்திய அரசின் உதவியோடு அந்த 35 கிலோ இலவச அரிசி வழங்குகின்ற அந்தத் திட்டத்தில் பணக்காரர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள்; ஏழைகளில் மிகவும் ஏழையாக இருப்பவர்களுக்கு வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தில், பணக்காரர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எனவே, அந்த நல்ல கருத்தை நான் வரவேற்கிறேன்.

அதேபோல, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் தள்ளுபடி செய்யப்படுகின்ற பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களில் இந்த ஏழை எளியவர்களில், குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கூட்டுறவுச் சங்கங்களில், ஒரு 20 ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற விவசாயி ஒரு டிராக்டர் வாங்குவதற்காக 4 இலட்சம் ரூபாய் கடன் பெற்றிருக்கலாம். அப்படிப்பட்ட விவசாயிக்கு 4 இலட்சம் ரூபாயை அந்தக் கூட்டுறவு வங்கிகளின்மூலம் இந்த அரசு தள்ளுபடி செய்கிறது. ஆனால், அதே கூட்டுறவு வங்கிகள் ஒரு 5,000 ரூபாய் கடன் பெற்று பெட்டிக்கடை வைத்திருக்கின்ற ஓர் ஏழை எளியவனுக்கு அந்தச் சலுகை காட்டுவதில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ரேஷன் கடைகள். கிராமங்களில் இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் அதிகாலையில் எழுந்து தங்கள் வயலுக்கோ, தோட்டங்களுக்கோ, காடுகளுக்கோ அல்லது கூலி வேலைக்கோ செல்கிறார்கள். எனவே, காலை 9 மணிக்குமேல் திறக்கப்படுகின்ற



அந்த நியாய விலைக் கடைகளை காலையில் முன்னதாகவே திறந்தால், வேலைக்கு போவதற்கு முன்போ, அதேபோல, மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பியபிறகும் ரேஷன் கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிக்கொள்கின்ற வகையிலே நேரத்தை மாற்றியமைத்தால், கிராமப்புற மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், பல்வேறு கிராமங்களில் ரேஷன் கடைகள் புதிதாக அமைக்கவும் பகுதி நேரக் கடைகளை ஏற்படுத்தவும் வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கான வழிகள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் உடனடியாக விடுபட்டவர்களுக்கு புதிய ரேஷன் அட்டைகளை வழங்கவும், புதிய ரேஷன் கடைகளை ஏற்படுத்தியும் ஏழை எளியவர்களுக்கு உதவிட வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் ஆயிரக்கணக்கான வழக்குகள் நிலுவையில் இருந்து வருகின்றன. 2006 ஏப்ரலில், 6,940 வழக்குகள் இருந்ததாகவும், 2006 ஜூன் மாதத்தில் 6,999 வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு மாதத்தில் 59 வழக்குகள் கூடுதலாக நிலுவையில் இருக்கிறதென்றால், இப்படித்தான் படிப்படியாக வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது. எனவே, கூடுமானவரையில் இந்த நுகர்வோர் வழக்குகளை விரைந்து முடித்திட உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தமட்டிலும், ஒருசில பிரச்சினைகளைச் சொல்லி என்னுடைய பேச்சை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன். திருமங்கலம் தொகுதியில், பல கிராமங்களில் ரேஷன் கடைகள் இல்லாமல் மக்கள் அவதிக்கு ஆளாகி வருகிறார்கள். குறிப்பாக, திருப்பரங்குன்றம் ஒன்றியத்திலுள்ள கைத்தறி நகர் கடையில் சுமார் 600–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. நீண்டகாலமாக தங்களுக்கு இருக்கும் பகுதிநேரக் கடையை நிரந்தரமாக அமைக்க வேண்டும் என்று கேட்டு வருகிறார்கள். எனவே, கைத்தறி நகருக்கு புதிய ரேஷன் கடை அமைத்திட வேண்டும். மேலும், நெடுமதுரை என்ற கிராமத்து மக்களும் தொலைதூரம் நடந்து, கரடு முரடானப் பாதைகளில் நடந்து சென்று பொருட்களை வாங்க வேண்டியுள்ளது. அவர்களுக்கும் பகுதிநேர ரேஷன் கடை அமைத்துக் கொடுக்கவும், மேலும் திருமங்கலம் ஒன்றியத்தில் நடுக்கோட்டை, பொட்டிபுரம், கட்ராம்பட்டி, ஊராண்ட உரப்பனூர், நடுவக்கோட்டை,

சித்திரட்டிப்பட்டி, பச்சக்கோப்பன்பட்டி, திரலி, ஒக்கம்பட்டி, மங்களச்சேரி போன்ற பல கிராமங்களுக்கு ரேஷன் கடைகளை புதியதாக அமைத்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–20*

அதோடு கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் பல கிராமங்களில் ரேஷன் கடைகளுக்குக் கட்டடங்கள் இல்லை. குறிப்பாக, கொக்குளம், வளையகுளம், அரசப்பட்டி, உலகாணி, நெடுங்குளம், நேசனேரி, கரிசல்காளப்பட்டி, பேய்க்குளம், சின்னம்பட்டி, ஓடைப்பட்டி, வெற்றிக்குளம், வெல்லாகுளம், சுந்தரங்குண்டு போன்ற கிராமங்களில் ரேஷன் கடைகளுக்குக் கட்டடங்கள் உடனடியாக அமைப்பதற்கு, இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றம் ஒன்றியத்தில் பெருங்குடி, வளையகுளம் ஆகிய இரண்டு ஊர்களிலும் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றிட, கிராம மக்கள் சில ஆண்டுகளாக முயற்சி செய்து வருகிறார்கள். இந்த இரண்டு கிராமங்களும் பெரிய கிராமங்கள் அந்தப் பகுதியில். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு இலட்சம் ரூபாய் கட்டணம் அரசுக்குக் கட்டியுள்ளார்கள். எனவே, இந்த இரண்டு பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு உத்தரவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் ஒன்றியத்தில் செக்கானூரணிப் பகுதியில் சுமார் நூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடைகின்ற வகையில், பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திருமங்கலம் பிரதான விஸ்தரிப்புக் கால்வாய் திட்டத்தின்மூலம் வெட்டப்பட்டு, 1984 ஆம் ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்தக் கால்வாயை பிரதானக் கால்வாயாக மாற்றியமைத்தால், நூறுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைவதோடு, சுமார் 3,500 ஏக்கர் நிலங்களும், ஏறத்தாழ 2 இலட்சம் மக்களும் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, ஒரே ஒரு செய்தியை நான் தெரிவித்து விடை பெற விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்கள், இந்த நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியது கூட்டுறவுத் துறை. இந்தத் துறைக்குப் புத்துயிரூட்டி, திறம்பட செயல்பட வைத்தால்தான்,



நம்முடைய நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெருகும் என்பது மட்டுமல்ல, ஏற்றத்தாழ்வுகள் இருக்காது. ஏழை ஏழையாகவே இருக்கின்ற நிலை மாறி, அவனும் நல்லதொரு நிலைமைக்கு உயர முடியும். அத்தகைய வாய்ப்பை வழங்கக் கூடியது கூட்டுறவு அமைப்புகள். அதைத்தான் அண்ணா அடிக்கடி சொல்வார். "Equality is not an identity of treatment, but the awarding of equal opportunities for all" என்று அடிக்கடி சொல்வார்கள். சமத்துவம் என்பது சமமாக நடத்துவதல்ல, சம வாய்ப்பு கொடுப்பது என்று அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வார்கள். எனவே, ஏழைகள் முன்னேற, பாட்டாளி மக்கள் முன்னேற, விவசாயப் பெருங்குடி மக்கள் முன்னேற அவர்களுக்கு சம வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், கூட்டுறவுத் துறையால்தான் முடியும். அதற்காக இந்தக் கூட்டுறவுத் துறையைப் பாதுகாத்து, செம்மையாகச் செயல்பட வைத்திட இந்த அரசை நான் வேண்டி விரும்பிக் கேட்டு, வாய்ப்புத் தந்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே, நான் இரண்டாவது முறையாகவும் வந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்து, சட்டமன்றத் தொகுதியில் மட்டுமல்ல, ஒரு மாவட்டத்திலே நீ கட்சிப் பணியாற்று என்று சொல்லி என்னை மாவட்டக் கழகச் செயலாளராகவும் ஆக்கி, அதோடு மட்டுமல்ல, இந்த மூன்றாவது முறையும் வந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நீ பணியாற்று என்று சொல்கின்ற வாய்ப்பையும் எனக்குத் தந்து, எனக்கு தாய் இல்லாத குறையைத் தீர்த்து வைத்திருக்கிற எங்கள் தாயாய், தந்தையாய், தத்துவத்தின் இருப்பிடமாய், ஊனாய், உதிரமாய், உண்மையின் பிறப்பிடமாய் விளங்குகிற தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், எங்கள் ஆருயிர் அண்ணன் கலைஞருக்கு இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, அவரோடு உறுதுணையாக இருந்து, இந்தப் பணியை ஆற்றுவதற்கு எனக்கு உந்து சக்தியாய் இருந்த, ஆயிரம் விளக்கின் அணையா ஜோதி, என் அண்ணன் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரியில் மட்டுமல்ல, நான் எதிர்க் கட்சியாக இந்த மாமன்றத்திலே இருந்து சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றுகிறபொழுது, நான் எந்த

வகையிலே பணியாற்ற வேண்டும் என்பதை பண்போடு எனக்கு உரைத்துத் தந்த, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் நிதியமைச்சர் பேராசிரியர் பெருமகனார் அவர்களுக்கும், நான் இந்த மூன்றாவது முறையும் என்னுடைய தொகுதியிலே, தண்டராம்பட்டு தொகுதியில் சுமார் 31 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்கள், அந்தத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள், இன்னும் ஒருபடி அதிகமாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனக்கு அன்புச் சகோதரராக இருந்து பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் வேணுகோபால் அவர்களுக்கும் இந்த மாமன்றத்தின் மூலமாக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–25*

பொது விநியோகத் திட்டத்தின்மீது பல்வேறு கருத்துகளை இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்மீது ஜெயராமன், மாண்புமிகு உறுப்பினர் செங்குட்டுவன், மாண்புமிகு உறுப்பினர் சகோதரி திருமதி காயத்ரி, மாண்புமிகு உறுப்பினர் கலியவரதன், மாண்புமிகு உறுப்பினர் டில்லி பாபு, மாண்புமிகு உறுப்பினர் இராசசேகரன், மாண்புமிகு உறுப்பினர் வீர. இளவரசன் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தப் பொது விநியோகத் துறையிலே இருக்கிற நன்மைகளையும் பாராட்டியிருக்கிறார்கள், குறைகள் சிலவற்றையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறை சொல்லி இருந்தாலும்கூட அந்தக் குறைகளையெல்லாம் இந்தத் துறை செழிப்பதற்காக நீங்கள் சுட்டிக்கட்டுவதாக நான் எடுத்துக்கொண்டு, அந்தக் குறைகளெல்லாம் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞருடைய ஆட்சியிலே ஏழை மக்களுக்குப் பயன்படுகிற இந்தப் பொது விநியோகத் திட்டம் என்பது, அது முறையாகப் போய்ச் சேரவேண்டும் என்ற உணர்வோடு அந்தக் குறைகளையும் நான் நிறைவாக எடுத்துக்கொண்டு பணியாற்றுவேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பாக, பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே குறிப்பிடுகிறபொழுது, சென்ற அரசாங்கம் குடும்ப அட்டைகளிலே பல்வேறு குளறுபடிகள் செய்திருக்கிற காரணத்தினால் பல இடங்களிலே நாங்கள் இன்றைக்குப் புதியதாக சட்டமன்ற உறுப்பினர்களாகப் பொறுப்பேற்று அல்லது அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டு தொகுதியிலே போகிறபொழுது எங்களுக்கு நூறு மனுக்கள் வருகின்றன என்று சொன்னால், அந்த நூறு மனுக்களிலே 75 மனுக்கள் புதியதாக அட்டை வேண்டும் என்கிற மனுக்கள்தான் வருகின்றன. அல்லது பழைய மனுக்களிலே ஒப்புகைச் சீட்டு, acknowledgement கொடுத்து அதையும் அதோடு pin செய்து எனக்குப் புதியதாக வழங்குங்கள் என்று சொல்வதையும் நாங்கள் பார்க்கிறோம். இதில் 75 மனுக்கள் இப்படித்தான் வருகின்றன. எனவே, சென்ற அரசாங்கம் செய்த அந்த குளறுபடிகளை நீக்கி புதியதாக அட்டைகள் தரவேண்டும் என்பதைப் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள்.



அதேபோன்று தூரத்திலே இருக்கிறது, 5 கிலோ மீட்டர் தூரம், 7 கிலோ மீட்டர் தூரம், 3 கிலோ மீட்டர் தூரம் என்றெல்லாம் தூரத்தைக் கணக்கெடுத்து, பகுதி நேரக் கடைகளைத் தரவேண்டும் என்கிற மக்களுடைய அந்த எண்ணங்களையும் இங்கே வெளிப்படுத்தினார்கள்; பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள். அதோடு மட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே குறிப்பிடுகிறபொழுது பாராட்டினார்கள். இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமனைத் தவிர்த்து அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே பாராட்டினார்கள்.

இந்த இரண்டு ரூபாய் அரிசி தமிழ்நாட்டிலே இன்றைக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அனைத்து கிராமங்களுக்கும் வருகிறது, சிறப்பாக வருகிறது, தரமாக வருகிறது, சுவையாக வருகிறது என்று சொன்னவர்கள் சில இடங்களிலே அரிசி வெண்மையாக இல்லாமல் கொஞ்சம் கலர் மாறியிருக்கிறது, கொஞ்சம் கறுப்பாக இருக்கிறது, எனவே, அதையும் மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். நான் பலமுறை இதே சட்டமன்றத்திலே குறிப்பிட்டுச் சொன்னேன். ஆந்திரா அரிசிக்கும், சத்தீஸ்கர் அரிசிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆந்திரா அரிசி என்பது கொஞ்சம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும், விலையும் ஒன்றுதான், சுவையும் ஒன்றுதான் என்று சொல்லிவிட்டு, சத்தீஸ்கர் அரிசி பார்ப்பதற்கு கொஞ்சம் பழுப்பாகத்தான் இருக்கும், ஆனால், விலையும் ஒன்றுதான், தரமும் ஒன்றுதான், சுவையும் ஒன்றுதான் என்று சொன்னேன். ஆனாலும்கூட, ஒரு வார காலத்திற்கு முன்னால், தமிழ்நாட்டில் இருக்கிற ஏழை மக்களுடைய நாடியைப் பிடித்து ஆட்சி நடத்துகின்ற, தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள் என்னை அழைத்து அதுசம்பந்தமாக

நீங்கள் மத்திய உணவுக் கழகத்திலிருந்துதான் இதைப் பெறுகிறீர்கள்; எனவே, மத்திய அமைச்சர் மாண்புமிகு சரத் பவார் அவர்களை நேரடியாகச் சந்தித்து இந்த அரிசி முழுமையாக ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளச் சொன்னார். சத்தீஸ்கர் மாநிலம் என்பது கொஞ்சம் தூரத்திலே இருக்கிறது. ஆந்திரா என்பது தென்னகத்துப் பகுதியிலே, பக்கத்திலேயிருக்கிற ஓர் அண்டை மாநிலம். எனவே, போக்குவரத்தைக்கூட நீங்கள் கணக்கிலே எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, பல அறிவுரைகளை என்னிடத்திலே அவர்கள் சொன்னார்கள். நான் டெல்லிக்குச் சென்று, மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் அன்பிற்குரிய அண்ணன் டி.ஆர். பாலு, ராஜா, இரண்டு பேரையும் அழைத்துச் சென்று, நேரடியாக சரத் பவார் அவர்களைச் சந்தித்து, இந்தக் கோரிக்கையை வைத்தேன். முதலமைச்சர் சொன்ன தகவலையும், அவர் எனக்குச் சொன்ன அறிவுரையையும் ஏற்று, அதை ஏற்றுக்கொண்டு, இனிமேல் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு, இன்னும் ஓராண்டு காலத்திற்கு ஆந்திரா அரிசியை தொடர்ந்து நான் அனுப்புகிறேன் என்கிற உத்தரவாதத்தையும் அளித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–30*

அதோடு மட்டுமல்ல. சத்தீஸ்கர் அரிசி என்கிறபோது—அங்கேயும் விவசாயிகள்தான் இருக்கிறார்கள். எனவே, அங்கு இருக்கிற அரிசியை, இங்கே இருக்கின்ற பற்றாக்குறைக்கு அனுப்புகின்ற சூழ்நிலை வருமென்று சொன்னால், அந்த அரசை அழைத்து, அங்கேயிருக்கிற hulling agents – அந்த அரவை முகவர்கள் எல்லாம் சத்தீஸ்கர் மாநிலத்திலே புதிய அரிசி ஆலையை அமைப்பதன் மூலமாகத்தான் தாமான அரிசியை அவர்கள் தர முடியும்; எனவே, அப்படி அமைத்தால்தான் தமிழ்நாட்டிற்கு இனிமேல் சத்தீஸ்கர் அரிசியை அனுப்ப முடியும் என்று அந்த அரசிற்கும் தெரிவிக்குமாறு அறிவுரை சொல்லியிருக்கிறார் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதோடு மட்டுமல்ல. பல சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தொடர்ந்து இங்கே ஒன்றைப் பாராட்டிக்கொண்டிருந்தார்கள். ஏழைகள் உண்ணுகிற 2 ரூபாய் அரிசி,—ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் திட்டம் தேர்தல் நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே இடம் பெற்றிருந்தது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13 ஆம் தேதி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே, அங்கே பல இலட்சக்கணக்கான மக்கள்



கூடியிருந்த இடத்தில் — இதுவரை நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, பல காலக்கட்டங்களிலே அமைச்சரவை அமைத்து, முதலமைச்சராக பலர் ஆகியிருக்கிறார்கள். ஏன், எங்களுடைய தலைவர்கூட நான்கு முறை முதலமைச்சராக ஆகி, இப்போது ஐந்தாவது முறை முதலமைச்சராக ஆகியிருந்தாலும்கூட, இதுவரை கண்டிராத அளவிற்கு, தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில், தொலைக்காட்சியிலே உலக மக்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற அதே நேரத்தில், அங்கே கையிலே வைத்த மை காய்வதற்கு முன்னால், 5 தினங்களிலே முதல் கோப்பை, ஏழைகள் உண்ணுகிற இந்த 1 கிலோ அரிசி 2 ரூபாய் என்கிற திட்டத்திற்கு கையெழுத்தை அவர்கள் இட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அரசியல்வாதிகள், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் வெளியிலே இந்த அரிசியை உண்ணுகிற பயனாளிகள் எல்லாம், ஏதோ தேர்தலுக்காக மட்டும்தான் இது வந்தது என்று கருதுகிறார்கள், இல்லை.

அருமை சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே, 31–12–2002 தீக்கதிரிலே, 'தஞ்சை மாவட்டத்தில், திருபுவனத்திலே வீரய்யன் என்கிற விவசாயி வறுமையின் கொடுமையால் தற்கொலை செய்துகொண்டான்'. 4–2–2003 அன்று, தீக்கதிர் செய்தி, 'திருவாரூர் மாவட்டத்திலே 7 வயது சிறுவன் பிரகாஷ் மற்றும் 11 வயது சிறுமி சந்தியா ஆகியோர் பசியின் கொடுமையால் இறந்த செய்தி'. 5–1–2003 அன்று, தினகரன் செய்தித்தாளில், மன்னார்குடி தெற்குதி, பாளையங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவர் அன்றைய முதல்வருக்கு வறுமையின் கொடுமை பற்றி எழுதிய கடிதத்தை—தற்கொலை செய்துகொண்டான் என்கிற செய்தி. அதேபோன்று 7–1–2004 அன்று தினகரன் நாளிதழிலே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) அவர்கள் காலையில் பேசுகின்றபோது, பத்திரிகை செய்தியைக் கையில் வைத்துக்கொண்டு பேச முற்படுகின்றபோது, அதைச் சபை உறுப்பினர்கள் மறுத்தால் அதற்கடுத்து அவர்கள் பேசக் கூடாது என்ற தகவலை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் கொண்டு, சபை உறுப்பினர்கள் பேசுவது சரியான மரபாகாது. பத்திரிகைச் செய்தியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரிடம் கொடுத்து, அதற்குப் பின்னால் ஆதாரங்கள்

இருந்தால், அதையும் மாண்புமிகு அமைச்சர் பேரவைத் தலைவரிடம் கொடுத்ததற்குப் பின்னால், ஆதாரம் இருப்பதாகப் பேரவைத் தலைவர் கருதினால் பேசலாம். அதை விடுத்து, பத்திரிகைச் செய்தியை மட்டும் கையிலே வைத்துக்கொண்டு பேசுவது என்பது சபையின் மரபுக்கு உகந்ததுதானா என்பதை பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு தகவலை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைச் செய்தியைப் பற்றி அல்ல. நான் இந்த அவையிலேயே, முன்னாள் முதலமைச்சர் முன்னிலையிலேயே பேசி பதிவு செய்த விஷயத்தைத்தான் இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். இது ஆதாரம் இல்லாத செய்தியல்ல. உண்மைச் செய்தி. அப்படி அந்தச் செய்தியைத் திரும்பத் திரும்ப இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். அதன்மீது நிவாரணம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்குரிய நீதி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அப்படி பசியால், பட்டினியால் செத்தவர்களைப் பற்றிப் பேசுகிறபோதுதான் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்ன செய்தி வருத்தமான செய்தி. பிரகாஷ் என்ற மாணவன் இறந்தான் என்று சொல்கிறபோது, அவன் பட்டினியால் சாகவில்லை என்று சொல்லிவிட்டு, அவனோடு கூடப் பிறந்த இன்னும் இருவர் ஏன் உயிரோடு இருக்கிறார்கள் என்று கேட்டு பதிவு செய்த மன்றம் இது. ஆகவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதை இங்கே பதிவு செய்வது என்பது தவறான செய்தி. சரியான செய்தியைத்தான் அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு (குறுக்கீடு) One minute. (குறுக்கீடு) சொல்கிறேன், சொல்கிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். அவர் என்னிடம் பத்திரிகையைக் காண்பித்துவிட்டுத்தான் பேசுகிறார்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இனிமேல் பத்திரிகைச் செய்தியைக் காட்டிப் பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகையைக் காண்பித்துவிட்டுத்தான் பேசினார்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பத்திரிகைச் செய்தியை வைத்துப் பேசலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குத் தெரியும். நான் அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, பத்திரிகைச் செய்திகளை யாராவது ஆதாரம் காட்டிப் பேசினால், அதை மறுத்துவிட்டால், அதை உடனே ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதைப் போன்ற ஒரு கருத்து தொனிக்க இங்கே பேசினார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் பேசியதை அவர்கள் மேற்கோள் காட்டினார்கள். இது மிகப் பெரிய தவறான புரிந்துகொள்ளுதலாக இருக்கும் என்று நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்றால், பத்திரிகைகள் என்பது இந்த சமூகத்தினுடைய தொடு நரம்புகள். They are the sensational nerves of the society. பத்திரிகைகளை மேற்கோள் காட்டாமல், பாராளுமன்ற, சட்டமன்ற விவாதங்கள் நடப்பது சாத்தியம் அல்ல. மாண்புமிகு ஆற்காட்டார் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். சொல்கிற கருத்தை (குறுக்கீடு) அவர் கருத்து சொல்கிறார். (குறுக்கீடு) அவர் கருத்தைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு ஆற்காட்டார் என்ன சொன்னார்கள் என்றால், யாராவது நான் இப்படிப் பேசினேன் என்று ஒரு பத்திரிகையிலே மேற்கோள் காட்டினால், அதை இந்த அவையில் மறுத்துவிட்டால், அதுதான் அந்த விவகாரத்தோடு முடிந்ததேயொழிய, பத்திரிகைகளிலே வரக்கூடிய செய்திகளையெல்லாம் இந்த மன்றத்திலே காட்டக் கூடாது என்பது பத்திரிகையை நம்பாதவர்களுக்கு

வேண்டுமானால் சரியாக இருக்கலாமேயொழிய, பத்திரிகையை நம்புகின்ற எங்களுக்கு அது சரியானதல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோது, இறந்தவர், பட்டினியால் இறக்கவில்லையென்றுதான் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறாரே தவிர, மற்றும் அவர் குடும்பத்திலே இருக்கின்றவர்கள் பட்டினிச் சாவு அல்ல என்று அரசிடத்திலேயிருந்து வந்த தகவலை வைத்துக்கொண்டு அன்றைக்குச் சொல்லியிருக்கிறார். அவருடைய பத்திரிகையில் வந்த செய்திகளை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். அதற்குப் பதிலாக அந்தச் சாவு பட்டினிச் சாவு என்று சொல்வதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா? அதற்கு, இந்த சபையிலே பேசுகிறபோது நாளை, உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறபோது, அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதை மட்டும், அதை அனுப்பலாமா என்பதை மட்டும் இந்த சபையின் மூலமாக உரிமைக் குழுவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இதே சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்கள் நாங்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர் இல்லை. இதே பிரச்சினை வருகிறபோது, இதே விவாதத்திற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு விதியே என்னவென்று சொன்னால், சட்டமன்றத்திலே முன்பு பதிவாகி இருக்கிற செய்திகளைச் சொல்கிறபோது, அதற்குப் போய் ஆதாரங்கள் காட்ட வேண்டும் என்ற அவசியம் இல்லை. சட்டமன்றத்திலே பதிவாகி இருக்கிற செய்தியைத்தான் மாண்புமிகு உணவு அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதற்கு முதலமைச்சரும் பதில் சொல்லியிருக்கிறார். அந்தச் செய்திகளைச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பத்திரிகைச் செய்தி ஒரு ஆதாரம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த ஆட்சிக் காலத்தில், தஞ்சை டெல்டா மாவட்ட



விவசாயப் பகுதியில், அங்கே பசி, பட்டினியால் இறந்தார்கள் என்ற செய்தி இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, அது இங்கே அலுவலக நடைமுறையிலேயும், பதிவேடுகளில் பதியப்பட்டு, பத்திரிகைகளிலே வந்த செய்தி. அன்றைய முதலமைச்சர் மறுத்தார்கள், இல்லையென்று சொல்லவில்லை. நடந்த செய்தி உண்மை. அதுமட்டுமல்ல, அதே காலக்கட்டத்தில் அந்த மாவட்ட மக்கள் எலிக்கறியைச் சாப்பிட்டார்கள் என்ற செய்தியும் உண்மை. அதைப் படம் பிடித்துக் காட்டினோம். எலியைப் பிடிப்பது, நண்டு பிடிப்பது, இந்தச் செய்திகள் எல்லாம் இதே மாமன்றத்தில் வந்தன. ஆனால், அதை மறுத்துவிட்ட முன்னாள் முதலமைச்சர் அன்று சொன்னார், சொன்னது மட்டுமல்ல, இதுபற்றி எங்கள்மீது அவதூறு வழக்கையும் பதிவு செய்தார். ஆகவே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக் குறைச்சலாக அல்லது குதர்க்கமாக, மாமன்ற உறுப்பினர்களே பேசுவது அழகாக இருக்காது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் வைத்தியலிங்கம், உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடு) உட்காருகிறீர்களா, இல்லையா நீங்கள்? (குறுக்கீடு) உட்காருங்கள் முதலிலே.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர்களாக வரக் கூடியவர்கள் பேசுகின்றபோது மற்றவர்கள் மனதைப் புண்படுத்தக் கூடாது என்ற வகையில் பேச வேண்டும். யாரையும் சரி, (குறுக்கீடுகள்) இல்லை, நேரடியாகப் பேசக்கூடாது. அப்படி பேசுகிறார்கள் என்று சொன்னால், பிறகு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. அதுமாதிரி மற்றவர்களுக்கும் பேசத் தெரியும். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. வேல்முருகன். (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன் உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலிருந்து உணவு மற்றும் கூட்டுறவுத் துறை பற்றி விவாதம் மென்மையான முறையில், சுமூகமான அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இடையிடையே வாக்குவாதங்கள் இருந்தாலும்கூட, அதன்காரணமாக அசம்பாவிதமான வார்த்தைகளோ, மனம் நோகும்படியான சொற்களோ இருதரப்பிலும் பிரயோகிக்கப்படவில்லை என்பதை நான் இங்கிருந்தும் கேட்டேன், என் அறையிலேயிருந்தும் கேட்டிருக்கின்றேன். இப்பொழுது எதிர்க்கட்சியின் சார்பில், கடந்த காலத்திலே எப்படி உணவு நிலைமை இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்று அவர்களும் இன்றைய ஆட்சியைக் குறை கூறி, இன்றைய ஆட்சியிலே பட்டினியால் செத்தார்கள் என்றெல்லாம் அதிமுக. சார்பிலே பேசிய யாரும் பேசவில்லை. அப்படிப் பேசாத சூழ்நிலையில், நம்முடைய உணவு அமைச்சர், கடந்த காலத்திலே பட்டினியால் செத்தார்கள் என்ற அந்தச் செய்தியை இங்கே சொல்லியிருக்கத் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அந்தச் செய்தியைச் சொன்னதன் காரணமாகத்தான், இந்த அளவிற்கு விவாதம் காரசாரமாக வடிவெடுத்திருக்கிறது. எனவே, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) காலையிலிருந்து சுமூகமாகத் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விவாதத்தை, சுமூகமாகவே முடித்து, விவாதம் உணவு சம்பந்தம் என்ற காரணத்தால், அனைவரும் உணவுக்கு ஒழுங்காகச் செல்லுவதுதான் முறையாக இருக்கும் என நான் கருதுகின்றேன். எனவே, இத்துடன் இந்தப் பிரச்சினையை நிறுத்துமாறு தாங்கள் ஆணையிடுவது உசிதமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மேலும், விவாதம் வேண்டாம். அமைச்சர் அவர்கள் உரை.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** 'சோழவள நாடு சோறுடைத்து' என்று சொல்வார்கள். எனவே, அந்த வகையில், இந்தத் தேர்தல் அறிக்கை வருவதற்கு முன்னால், தலைவர் அவர்கள் பல நேரங்களிலே, எப்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபொழுது, அந்தக் காலத்திலே தஞ்சைப்



பகுதியிலேயிருந்து உணவு உற்பத்தியைச் செய்து, பல மாநிலங்களுக்கு அனுப்பிய ஒரு மாநிலம். எனவே, அன்றையிலிருந்து அவருடைய மன நிலை என்பது, பக்கத்திலே இருந்த நம்முடைய பொருளாளர், அண்ணன் வீரபாண்டியார், அண்ணன் பொன்முடி போன்றவர்களெல்லாம் பார்த்தோம். அந்த ஒரு மாத காலம். அதனுடைய விளைவாக, அந்தத் தாயுள்ளத்தோடு, பசிக் கொடுமை என்று சொல்கிறபொழுது ஔவையார் அவர்கள் சொன்னார்:

> "ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
> இருநாளைக்கு ஏலென்றால் ஏலாய் - ஒரு நாளும்
> எந்நோய் அறியாய் இடும்பைக்கூர் என்வயிறே
> உன்னோடு வாழ்தல் அரிது."

என்று பசிக் கொடுமையைப் பற்றி, 'நல்வழி' என்பதிலே ஔவையார் அவர்கள், அந்தக் கொடுமையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அந்தக் கொடுமையை உணர்ந்த காரணத்தாலேதான், தாய் உள்ளத்தைக் கொண்ட தலைவர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலே இடம் பெறுவதற்காக ஏற்பாடு செய்தார்கள். அதோடுமட்டுமல்ல, 1953-வது ஆண்டிலேயே இந்தப் பசிக் கொடுமையைப் பற்றி வெளியிலே சொல்வதற்காக அன்றைக்கு "பராசக்தி" என்ற திரைப்படத்திலே, குணசேகரன் என்கிற பாத்திரத்தைப் படைத்து, அதிலே அந்த குணசேகரன் பாத்திரத்திலே, அந்தப் பசிக் கொடுமையை வெளிப்படுத்துகிற விதமாக ஒரு வசனம் வரும்,

> *"கல்லைத்தான், மண்ணைத்தான் காய்ச்சித்தான்
> குடிக்கத்தான் கற்பித்தானா"*

என்பதை ஒருவனுக்கு பசி வந்துவிட்டால், அவன் கல்லையும், மண்ணையும்கூட தின்ன வேண்டிய ஒரு சூழ்நிலை, தமிழ்நாட்டிலே இருக்கிறது என்பதை, 1953 ஆம் ஆண்டிலேயே, அந்தப் பசிக் கொடுமையைப்பற்றி, தமிழ்நாட்டிலே நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

அதோடுமட்டுமல்ல; இந்தக் கொடுமைகள் எல்லாம் தமிழ்நாட்டிலே இருந்தன ஒரு காலத்திலே என்பதை உணர்ந்த

வள்ளலார் அவர்கள் சொன்னார்:

"… …பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும், பசியறா தயர்ந்து
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியில் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்,
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்
வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் … … "

என்று பசிப் பிணியைக் கண்டு வள்ளலார், பதைத்தார், துடித்தார், இளைத்தார். ஆனால், 21 ஆம் நூற்றாண்டிலே, எங்களுடைய வள்ளலாராய் இருக்கிற தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் கொடுத்தார்; இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், ஏழைகளுக்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்தார் என்பதை இங்கே எடுத்துச் சொல்லி பாராட்டும் முகமாக அவர்கள் எல்லாம் பாராட்டினார்கள். உணவுத் துறை அமைச்சர் என்கிற முறையிலும், அவருடைய தம்பி என்கிற முறையிலும், அப்படிப் பாராட்டிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு கிலோ அரிசி ரூ.2/– என்கிற திட்டத்தின்கீழ் 1,78,20,122 குடும்பங்கள் பயன்பெறுகின்றன. அதைப் பயன்படுத்துவதற்காக இன்றைக்கு 28,375 நியாய விலைக் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாகவும் கூட்டுறவுத் துறையின்மூலமாகவும், செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பொது விநியோகத் திட்டம் மக்களுக்குப் போய்ச் சேர்க்கின்ற பணிகளை, இன்றைக்கு இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

இந்தப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தளவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நான் உணவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, பல இடங்களிலே. பல குளறுபடிகள் எல்லாம் இருக்கின்றன; எனவே, இதைச் சீர்செய்ய வேண்டுமென்று சொல்லி எனக்கு அவர்கள் ஆணையிட்டார்கள்.



அதை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 27 மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களையெல்லாம் நேரடியாக அழைத்து, அந்தந்தப் பகுதிகளிலே பொது விநியோகத் திட்டத்திலே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை, சட்டப் பேரவையிலே இங்கே சொல்லப்படுகிற கருத்துகளை எல்லாம், அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். அவற்றையெல்லாம் குறிப்பெடுத்துக்கொண்டு, உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை அழைத்து, இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்று குறிப்புகளையெல்லாம் கொடுத்து, மிக வேகமாக, இந்தப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தளவில் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்ன கூற்று மூன்று. ஒன்று, அட்டைகளிலே குளறுபடிகள் இருக்கின்றன. சாதாரணமாக, ஒரு initial தவறி விட்டாலும்கூட, அதை சரிசெய்ய மாநிலத்திலேயிருக்கிற ஆணையாளரிடத்திற்கு வந்து திரும்பப் போகவேண்டியுள்ளதால், காலதாமதம் ஏற்படுகிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதோடுமட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்கள், 'நாங்கள் செல்கிறபோது, புதிய கார்டுகளை வழங்கமுடியவில்லையே' என்பதையும் சொன்னார்கள். இவற்றையெல்லாம் ஒன்று திரட்டி, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே நான் சென்று, "இவற்றையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள்; மக்கள் பிரதிநிதிகள் சொல்லியிருக்கிறார்கள்" என்று சொன்னவுடனேயே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றையெல்லாம் படித்துப்பார்த்தார், ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற கார்டுகளில் இருக்கிற குளறுபடிகளின் காரணத்தினால், பல இடங்களிலே, பல பகுதிகளிலே, பல தொகுதிகளிலே, பல மாவட்டங்களிலே, சுமார் 20 சதவிகிதம் போலி கார்டுகள் இன்றைக்கும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒரு பகுதியிலே போலி கார்டுகள் இருந்து கொண்டிருக்கின்றன; இன்னொரு பகுதியிலே புதியதாக பயனாளிகள் தங்களுக்கு குடும்ப அட்டைகள் வேண்டும் என்று மனு செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற இரண்டையும் சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். அதையும், முதலமைச்சரிடத்திலே சொன்னேன். அவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து,

அவற்றையெல்லாம் பின்னால்—ஏனென்று சொன்னால், bogus card-களைப் பிடிப்பது என்பதில் கொஞ்சம் காலதாமதம் ஆகும். அதற்கென்று ஒன்றை வரையறுக்கவேண்டும்; அதிகாரிகளை முடுக்கி விடவேண்டும். எனவே, அதற்காக—ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு ஒருவன் வாங்கிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறான். ஒருவன் கார்டு இல்லாமல், அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு, 'புண்ணியவான் ஆட்சியிலே, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குப் போடுகிறார்களே, தனக்கு அந்த வாய்ப்பில்லையே' என்று சொல்கிற அந்த நிலைமையை எல்லாம்கூட சீர்தூக்கிப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மூன்று தினங்களுக்கு முன்னால் எனக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். "உடனே, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் பரிந்துரையை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தந்தவுடனேயே, அதை உடனே அவர்கள் ஆய்வு செய்து, அவர்களுக்கெல்லாம் புதிய கார்டுகளை வழங்கவேண்டும்" என்று முதலமைச்சர் அவர்கள் எனக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–50*

இன்றைக்குப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தளவில், நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இங்கே ஒரு கூற்றைச் சொன்னார்கள். மண்ணெண்ணெய் என்ன ஆயிற்று? முதலமைச்சர் டில்லிக்குப் போய் வந்தாரே, மண்ணெண்ணெய் என்ன ஆயிற்று? 16,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தருவதாகச் சொன்னார்களே அது என்ன ஆயிற்று என்பதை இங்கே எடுத்துக் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள். சென்றவுடனே மத்திய அரசாங்கத்திலே அவர்கள் ஏற்றுக்கொண்டு 12,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்க்கு ஆணை அனுப்பிவிட்டார்கள். ஆனால், இங்கே நமக்கு 16,000 கிலோ லிட்டர் தேவைப்படுகிறது. 12,000 கிலோ லிட்டருக்கு ஆணை வந்திருக்கிறது. அடுத்த மாதம் அந்த மண்ணெண்ணெய் வருவதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், முழுமையாக அதைத் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கருதிய காரணத்தினால்தான் உடனே அவர் என்னை டில்லிக்குப் போகச் சொல்லி பெட்ரோலியத் துறையினுடைய அமைச்சரை நேரடியாகப் பார்த்து தொடர்ந்து நமக்கு போதுமான அளவுக்கு மண்ணெண்ணெய் தர வேண்டும் என்பதை நீங்கள் வலியுறுத்திவிட்டு வாருங்கள் என்று சொன்னார்கள். எனவே, சென்ற வாரம் டில்லிக்குச்



சென்று அங்கே நம்முடைய மத்திய அமைச்சர்கள், நம்முடைய மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்களையும், நம்முடைய மாண்புமிகு ராஜா அவர்களையும் அழைத்துக் கொண்டு பெட்ரோலியத் துறை அமைச்சரை நாங்கள் பார்த்தோம். அதற்கு வேண்டிய கோப்புகள், தொடர்ந்து இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன டில்லியிலே. கூடிய சீக்கிரத்திலே போதுமான அளவிற்கு நம்முடைய மக்களுக்கு அந்த மண்ணெண்ணெயும் வழங்கப்படும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இங்கே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தேர்தல் அறிக்கையிலே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் நீங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்யப் போகிறீர்களா அல்லது ஏற்கெனவே இருந்த எங்களுடைய முறையைப் பின்பற்றப் போகிறீர்களா என்று கேட்டார். எங்களுடைய ஆட்சியைப் பொறுத்தளவிற்கு, எது நல்லதாக இருந்தாலும் அதைத் தொடர்வதுதான் எங்களுடைய ஆட்சியினுடைய முறையேயொழிய, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை கலைஞர் போட்டார் என்கிற காரணத்திற்காக நீங்கள் ஐந்தாண்டு காலம் ஒதுக்கி வைத்தீர்களே அதைப்போல அல்ல.

இப்போதுகூட, சைக்கிள் திட்டத்தை நீங்கள் அறிவித்தீர்கள், அது மக்களுக்குப் பயன்படுகிற திட்டம் என்கிற காரணத்தினால்தான் அதைத் தொடர்ந்து இந்த அரசாங்கம் இன்றைக்கு அதைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறது: ஆனால், நாங்கள் தேர்தல் அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், கொள்முதல் நிலையங்களை மூடிவிட்டு, விவசாயிகள் வயிற்றில் அடித்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்கிற காரணத்தினால், நுகர்பொருள் வாணிபக் கழகமே நேரடியாகக் கொள்முதலிலே ஈடுபடும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

இதிலே நம்முடைய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த, நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்த சிவபுண்ணியம் அவர்கள்தான் சென்றமுறைகூட சட்டமன்றத்திலே சொன்னார்கள். அப்படி சொன்னதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அப்போது உணவுத் துறை அமைச்சராக இருந்தவர், நாங்கள் நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னால், டில்லியிருந்து ஊக்கத் தொகையைக்கூட நாங்கள் பெற்றுத் தர முடியும். எனவே,

நாங்கள் டில்லியிலே கேட்கிறோம் என்று சொன்னார்கள். அப்போது திரு. சிவபுண்ணியம் பேசுகிறபோது, நீங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்யலாமே என்பதை இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். ஆனால், எங்களைப் பொறுத்தளவில் — இப்போது நேரடியாக விவசாயிகளின் வயிற்றிலே அடிக்காமல் என்று சொன்னால் — முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெற்று போன மாதம் காவிரி டெல்டா பகுதியில் இருக்கிற விவசாயிகளையெல்லாம் தஞ்சாவூரிலே கூப்பிட்டு, அழைத்துப் பேசி, என்னென்ன பிரச்சினைகள் எல்லாம் விவசாயிகளுக்கு இருக்கின்றன என்பனவற்றை எல்லாம் கேட்டறிந்து, அவை எல்லாம் அறிவிப்பிலே வர இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாங்கள் ஒன்றாகத் திரட்டி, விவசாயிகளுக்கு எல்லாம் உதவுகின்ற அரசாங்கமாக இந்த அரசாங்கம் செயல்படும். இப்போது கொள்முதல் நிலையங்களைப் பொறுத்தளவில் தேவையான அளவிற்கு இன்றைக்குத் திறப்பதற்கு வேண்டிய முயற்சிகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்முலமாக இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. எனவே, அப்போது ஒரு கருத்தை சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். "பல பிரச்சினைகள் எல்லாம் தீர்கின்றன, அரசு அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க வேண்டிய நிலை கொள்முதல் செய்கிறபோது இருக்கிறது, எனவே, முதலமைச்சரிடத்திலே சொல்லுங்கள், சட்டமன்றத்தில் அரசியல் கட்சிகள் இருக்கின்றன, அவற்றின் பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு ஒரு வட்ட அளவிலே ஒரு குழு அமைத்தால் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் ஆங்காங்கே தீர்க்க முடியும்" என்று சொன்னார்கள். எனவே, அதையும் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே சொன்னேன், எனவே, இப்போது அப்படி நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கிற அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவை வட்ட அளவிலே அந்தப் பகுதியிலே அமைக்கலாம் என்று இன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) எனவே, அந்தக் குழுவையும் நாங்கள் அமைக்க இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடுமட்டுல்ல.. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. பொள்ளாச்சி ஜெயராமன். (குறுக்கீடு) என்ன Point of Order? என்ன Point of Order? (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சர், தொடர்ந்து பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தளவில் இன்னொன்று சொன்னார்கள். (குறுக்கீடு)



பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை, உட்காருங்கள். அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இன்னொன்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த அளவில் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், ஆட்சியிலே இருந்தபொழுது, நாங்கள் தரமான அரிசியை, சீரான விலையிலே கொடுத்தோம் என்று சொன்னார்கள். நான் வைத்திருப்பது, ஏப்ரல் மாதம் 2002. மாண்புமிகு அன்றைய அமைச்சர் தனபால், "யாரெல்லாமோ எதிர்பார்த்த அரிசி, என்னுடைய தாய் தெளிவாக, நாட்டு மக்களுக்கு இந்த மன்றத்திலே சொன்னார்கள். மூன்று ரூபாய் ஐம்பது காசுக்கு மேலே ஒரு பைசாகூட, ஏழை மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற அந்த ரேஷன் அரிசிக்கு, நாங்கள் விலையை ஏற்றமாட்டோம் என்று தெளிவான ஒரு கொள்கையை இந்த மாமன்றத்திலே, நாட்டு மக்களுக்கு மத்தியிலே, அரிசி வாங்கிப் பயன்படுத்துகிற மக்களுடைய வயிற்றிலே பாலை வார்க்கிற மாதிரி ஒரு அற்புதமான, மகிழ்ச்சியான செய்தியை இந்த நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அன்றைய உணவுத் துறை அமைச்சராக இருந்த தனபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அப்படிக் குறிப்பிட்ட ஒரு பத்து மாத காலத்திலேயே, 10 கிலோ அரிசி, 6 ரூபாய்; பத்து கிலோ அரிசி, மூன்றரை ரூபாய் என்கிற நிலையும் வந்தது என்பது நாடறிந்த உண்மை.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், அன்றைக்கு இந்த செய்தியைப் படித்து, ஒரு பத்து தினங்கள்கூட ஆகவில்லை; அந்த 10 தினங்களிலே, இதே மாமன்றத்திலே என்ன சொன்னார்கள் என்று சொன்னால், "புழுத்த அரிசியை வைத்துவிட்டு, நீங்களெல்லாம் போய்விட்டீர்கள். நாங்கள் எப்படி அந்த அரிசியைக் கொடுக்க முடியும்? எனவே, கிட்டத்தட்ட 1.25 இலட்சம் டன் புழுத்த அரிசியை வைத்துவிட்டுப் போய்விட்டீர்கள்" என்று இதே மாமன்றத்திலே குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) அவர்கள் சொல்லியிருக்கிற விவரம். அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அப்பொழுது அமைச்சராக இருந்த தனபால் அவர்கள், ஒரு பத்திரிகையிலே ஜூன் மாதம், 21 ஆம் தேதி, கொடுத்த ஒரு செய்தி வருகிறது. அது மன்றத்திலேயும் பதிவாகியிருக்கிறது. பொன்முடி கைது பற்றி நிருபர்கள் கேட்ட கேள்விக்கு, தலைமைக் கழகத்திலே, நம்முடைய முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், "கடந்த 12 ஆம் தேதி உணவுத் துறை குறித்து நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், ரூபாய்

65 கோடி மதிப்புள்ள அரிசி கிடங்குகளில் உள்ளது. இந்த அரிசி தமிழக மக்கள் பயன்படுத்த முடியாததாக உள்ளது என்று அதிகாரிகள் கூறினார்கள். நானும், துறையில் சில அதிகாரிகளும் பரிசோதனை செய்ததில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலே, மக்கள் பயன்படுத்த முடியாத அரிசி, 1.25 இலட்சம் டன் வைக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்து, அதன் மதிப்பு 125 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை நான் நிருபர்களிடம் தெரிவித்தேன். அங்கே தனியாக அடுக்கி வைத்திருந்த கெட்டுப்போன அரிசியை விட்டுவிட்டு, நல்ல அரிசியை மட்டும் பொன்முடி எடுத்துக் காட்டினார். இவ்வாறு அவர் அத்துமீறிச் செயல்பட்டது கண்டிக்கத்தக்கது. 125 கோடி ரூபாய் மதிப்புடைய பயன்படுத்த முடியாத அரிசியை திராவிட முன்னேற்றக் கழக அரசு வைத்துச் சென்றுள்ளது. இதுகுறித்து, விசாரணை மேற்கொள்வோம்" என்று முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதை வைத்துக்கொண்டு, 29 ஆம் தேதி அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தனியார் தொலைக்காட்சிச் செய்தியாளர்கள் உள்ளிட்ட 50 பேருடன், விழுப்புரத்திலேயுள்ள நுகர்வோர் வாணிபக் கழகக் கிடங்குகளிலே அத்துமீறி, ஆயுதங்களுடன் நுழைந்துள்ளார், பொன்முடி. அங்குள்ள அரிசியைப் படம் பிடித்துள்ளார். அங்குள்ள அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்யவிடாமல் தடுத்திருக்கிறார். இதற்காக அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எம்.எல்.ஏ.–வாக இருந்தாலும் கிடங்கிற்குள் அத்துமீறிப் புகுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை." அவர் சொன்னது, "எம்.எல்.ஏ.–வாக இருந்தாலும் அத்துமீறி கிடங்கிற்குள் புகுவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. அவரது கட்சித் தலைவர், – நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சொல்லி – வாய் தவறி நல்ல அரிசியை வைத்துவிட்டுச் சென்றதாகக் கூறிவிட்டார். அதை நிரூபிக்க, பொன்முடி ஏதேதோ செய்கிறார்" என்று, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களே, இதே மாமன்றத்திலே சொன்னார்கள். பத்திரிகையிலும் அப்போது செய்தி வந்தது. ஆனால், நடந்தது என்ன? அது அல்ல. உண்மை நிலை என்ன? அன்றைக்கு இந்த அரிசியைப் பொறுத்த அளவில், குணாளன் என்கிற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக இருந்தார். அவர், கேரளாவிற்கு ஒரு கடிதம் எழுதுகிறார். கடிதம் எழுதுகிறபோது, "A quantity of around 45 M.T. of TKM-9 red colour variety of good quality of FAQ standard rice, Boiled Rice Common 32 M.T. and Raw Rice Common 30 M.T. is available in our State...."



பிற்பகல் 1–00

இப்படியொரு கடிதத்தை குணாளன் அவர்கள் முதலமைச்சருடைய, அந்தத் தேதி என்னவென்று கேட்டீர்களானால், அதற்குப் பின்னால், 10 தினங்கள் கழித்து, இந்தக் கடிதத்தை நம்முடைய குணாளன் அவர்கள் எழுதுகிறார்கள். அதோடு மட்டுமல்ல, கேரள அரசாங்கம் அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், நாங்கள் உங்களுடைய அரிசியை 6 ரூபாய்க்கு எடுத்துக்கொள்கிறோம், கிலோ 6 ரூபாய்க்கு எடுத்துக்கொள்கிறோம் என்று, கேரளாவினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய Chairman அவர்கள் இந்த அரசுக்கு 17–7–2001 அன்று திரும்பவும் கடிதம் எழுதுகிறார். நம்முடைய குணாளன் எழுதிய கடிதத்திற்குப் பதில் கடிதம் அவர் எழுதுகிறார்.

அதோடு மட்டுமல்ல, அதற்குப் பின்னால் அவருடைய துறையினுடைய செயலாளர் திருமதி லஷ்மி பிரானேஷ், அரசுச் செயலாளர் அவர்கள் ஒரு கடிதம், 7–8–2001 அன்று, எழுதுகிறார்கள். அவர் என்ன கடிதம் எழுதுகிறாரென்றால், தற்சமயம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைக்கு மேல் அரிசி அதிகமாகக் கைவசம் உள்ளது, டி.கே.எம்.9 ரக அரிசியை தமிழ்நாட்டு மக்கள் விரும்பிச் சாப்பிட்டதாகவும், கைவசமுள்ள அரிசியின்தரம் கெட்டுப்போகுமுன், டி.கே.எம்.9 ரக அரிசியை உடனடியாக பொது விற்பனைமூலமாக (open tender) விற்பனை செய்யலாம் என்று முடிவு எடுக்கப்படுகிறது என்று அரசுச் செயலாளர் அவர்கள் சொல்கிறார்கள். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், ஆக, அன்றைக்கு தலைவர் கலைஞருடைய ஆட்சியை விட்டுவிட்டுப் போகிறபோது நாங்கள் நல்ல அரிசியை வைத்திருந்தோம். அதனால்தான் இப்படி கடிதப் பரிமாற்றங்களெல்லாம் நடைபெற்றன. கடிதப் பரிமாற்றங்கள் நடைபெற்ற அதே நேரத்தில், அது முழு விலைக்கும் வாங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இதை ஏன் நான் இங்கே குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினரே அத்துமீறி நுழைந்திருக்கிறார், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லுகிற அதேநேரத்தில், சென்ற மாதம் நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் 12–7–2006 பிற்பகல் 1.30 மணிக்கு 15 நபர்களோடு அந்த கிடங்குக்கு சமச்சீர் செய்து வைத்திருக்கிற அரிசியைப் பார்ப்பதற்காக அவர் செல்லுகிறார். செல்லுகிறபொழுது அங்கு அரிசியைப் பற்றி எதுவுமே சொல்லாமல்....
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாகச் சொல்லலாம். உட்காருங்கள், (குறுக்கீடுகள்) கடைசியாகச் சொல்லலாம். உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) கடைசியில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** அரிசியைப் பற்றி அங்கு எதுவும் சொல்லாமல் ஒரு 15 பேரோடு கிடங்குக்குப் போகிறார் — நான் கேட்கிறேன் – ஆனால், அதைப்பற்றி நாங்கள் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே சொல்லுகிறோம், இப்படி கருப்பசாமி எந்தவித அனுமதியும் இல்லாமல் கிடங்குக்குப் போகிறார் என்று சொல்கிறோம். ஆனால், அவர் சொல்லுகிறார், அவர் சட்டமன்ற உறுப்பினர், "மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயமிருக்கும்", ஏனெனில், அவர் போய் பார்ப்பதில் ஒன்றும் தவறில்லை என்று சொல்லி, எவ்வித வழக்கும் இன்றைக்கு கருப்பசாமி மீது நாங்கள் போடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற காரணத்தினால் போகலாம் என்று அனுமதித்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

அடுத்து, இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் இந்த 27 மாவட்டங்களிலே சென்று பார்த்ததன் விளைவாக முதலமைச்சருடைய அனுமதியோடு இந்த அறிவிப்பை நாங்கள் வெளியிடுகிறோம்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருள்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு முழுமையாகச் சென்றடைவதையும், அவை பொதுமக்களுக்கு முறையாக வழங்கப்படுவதையும் கண்காணிப்பதற்கு, ஒருங்கிணைந்த கணினிமயமாக்கப்பட்ட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய மின் ஆளுமைக் குழுமத் திட்டத்தின்கீழ் நிதியுதவிபெற்று, இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தவாறு அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தில் தற்பொழுது பயன்பெறுவோர்களின் பட்டியல், தகுதிக்கேற்ற பயனாளிகள் உள்ளதில் பல புகார்கள் எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு அவற்றையெல்லாம் மறு ஆய்வு செய்து, தகுதியான பயனாளிகள் மட்டுமே (மேசையைத்



தட்டும் ஒலி) இத்திட்டத்தில் பயன்பெறத்தக்கவகையில் ஒரு குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நியாய விலைக் கடைகளை தீவிரமாகக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு உள் வட்டங்களிலும், அதாவது பிர்கா வருவாய் ஆய்வாளரை அல்லது கூட்டுறவுத் துறை சார்புப் பதிவாளரை, ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, இக்குழுவிலே இரண்டு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், மூன்று பொதுநல ஆர்வலர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இடம் பெறுவார்கள். இந்தக் குழு மாவட்டத்தில் உள்ள 5 உள் வட்டங்களில் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டு பின்பு படிப்படியாக அனைத்து வருவாய் வட்டங்களிலும் இது அமைக்கப்படும் என்கிற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வால்பாறை மலைப் பகுதிக்கு, நீலகிரி மாவட்ட மலைப் பகுதிக்கு வழங்கப்படும் அளவில், குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்கப்படும். பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதை சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 36 மண்ணெண்ணெய் நிலையங்கள் நடப்பாண்டில் கணினிமயமாக்கப்படும். வெளிமாநிலங்களுக்கு அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்புப் படை வீதம் 5 சிறப்புப் படைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு சிறப்பு படையிலும் ஒரு துணைக் கண்காணிப்பாளரும், 2 உதவி ஆய்வாளர்களும் மற்றும் 6 காவலர்களும் இடம் பெறுவார்கள். இந்தச் சிறப்புப் படை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கட்டுப்பாட்டில் இயங்கும்.

பொது விநியோக முறையைச் சிறப்பாக கண்காணிப்பதற்கும், அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும், பறக்கும் படை வட்டாட்சியர்கள் அனைவருக்கும் நடப்பு ஆண்டிலே வாகன வசதி செய்துத் தரப்படும்.

அரிசி மற்றும் உணவுப் பொருட்களைக் கடத்துபவர்கள் பற்றி துல்லியமாக தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

இவர்களின் பெயர் மற்றும் முகவரி இரகசியமாக வைக்கப்படும். உணவுத்துறை அமைச்சர் அலுவலகம், உணவுத் துறைச் செயலாளர், சிறப்பு ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு இந்தத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். சன்மானம் வழங்குவதற்குரிய இரகசிய நிதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது.

நெல் கொள்முதல் நிலையங்கள். விவசாயிகள் நெல்லைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு ஏதுவாக, கிடங்கு, களம், அலுவலகம் ஆகிய வசதிகளுடன், 2001 முதல் 2002 வரை கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வந்தன. ஆனால், முந்தைய ஆட்சியில் 2–2–2003–லிருந்து அமைக்கப்படவில்லை. இப்பணி நிறுத்தப்பட்டுவிட்டது. விவசாயிகளின் வசதிக்காக இந்தப் பணியை, தொடர்ந்து செயல்படுத்தவும், நடப்பு நிதியாண்டில் 10 புதிய கொள்முதல் நிலையங்கள் கட்டவும் இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு ஏற்படும் எந்த ஒரு குறைபாட்டினையும், உணவுத்துறை அமைச்சருக்கும், அவருடைய அலுவலகத்திற்கும், தொலைபேசி அல்லது தொலை நகல் மூலம் தெரிவிப்பதற்கு, தொடர்பு தொலைபேசி எண்கள் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள்மூலமாக விளம்பரப்படுத்தப்படும். குடும்ப அட்டைகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்கள், எடை குறைப்பு, பொருள்கள் வழங்கப்படாதது, கூடுதல் விலைக்குப் பொருள்கள் விற்பது, கடையை உரிய நேரத்திலே திறக்காமல் இருப்பது, இதர பொருட்களை வாங்குவதற்கு நிர்ப்பந்திப்பது, போன்ற குறைகள் குறித்த தகவல்களை இந்தத் தொலைபேசி எண்களிலே தெரிவிக்கலாம். தகவல் பெற்ற 48 மணி நேரத்திலே இக்குறைகளை இந்த அரசு உடனுக்குடன் தீர்க்கும்.

பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, பொதுமக்களின் வசதியைக் கருத்தில்கொண்டு பகுதி நேரக் கடைகள் திறக்க, இரு நியாய விலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் குறைந்தது இரண்டு கிலோ மீட்டர் என்பதை ஒன்றரை கிலோ மீட்டராகக் குறைத்து, ஒரு நியாய விலைக் கடைக்கு 200 குடும்ப அட்டைகள் என்பதைக் குறைத்து 150 குடும்ப அட்டைகள் என்றும் இன்றைக்கு முடிவு செய்து, பல பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு இந்த அரசு வழிவகை செய்திருக்கிறது என்கின்ற நல்ல செய்தியையும் சொல்லிக்கொள்கிறேன்.



பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை இங்கே தந்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நேரடியாக நாங்கள் படித்துப் பார்த்திருக்கிறோம். அதிகாரிகள் எல்லாம், இங்கே அதை பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவை எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, உடனுக்குடன் இந்தத் துறையின்மூலமாக தீர்க்கப்படுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும். எனவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு சந்தேகம்...

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே,.. விளக்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசுகிறார்கள். உட்காருங்கள். உரையை முடித்தவுடன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசிய பிறகு கடைசியில் கேள்வி கேளுங்கள். உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தைக்கும் தந்தையாய் வழிகாட்டி, தாய்க்கும் தாயாய் என்னை அரவணைத்து, எங்கேயோ குக்கிராமத்தில் பிறந்த என்னை, விவசாய அமைச்சராக்கி, உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் ஆக்கி, தற்போது கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பொறுப்பு கொடுத்துள்ளார். உலகத்திலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்தியாவிலேகூட, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, யாரும் செய்யாத அளவிற்கு விவசாயிகளுக்குக் கடன் 6,866 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) அறவே தள்ளுபடி செய்து, வரலாற்றுப் புகழ்மிக்க ஆணையிட்டு, அதன்மூலம் கடன்பட்ட நெஞ்சம் எல்லாம்–கலங்கிக் கொண்டிருந்த விவசாயப் பெருமக்களுடைய உள்ளம் குளிரச் செய்து, உலக வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ள தமிழகத்தின் விடிவெள்ளி, எனது அருமைத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழ் அறிஞர், (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் வள்ளுவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, என் உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 1–10

கடந்த முறை முதல்வராக இருந்தபோது, இலவச மின்சாரம் வழங்கி விவசாயிகளுக்கு மகத்தான சேவை புரிந்ததுபோல், இம்முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் ஒரே அரசாணையின்மூலமாக ஏறத்தாழ 22,23,446 விவசாயிகளின் கடன்களை இரத்துச் செய்து, அவர்களுடைய மனச் சங்கடத்தையும், வேதனையையும் போக்கியதோடு, அனைத்துக் கூட்டுறவு வங்கிகளுக்கும் வாழ்வளித்தார் என்பதை நினைவூட்ட நான் விரும்புகிறேன்.

கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றுகின்ற அனைத்துப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் விவசாய உறுப்பினர்கள் ஆகியோர் மனதில் புத்துணர்ச்சியூட்டி, நலிவடைந்திருந்த கூட்டுறவு இயக்கத்தை தூக்கி நிறுத்தி இருக்கிறார் நம் தானைத் தலைவர் அவர்கள்.

இதுபோல், 2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசியை பொதுமக்களுக்கு வழங்கும் திட்டமும், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 26,429 கடைகளில், விநியோகத் திட்டக் கடைகள்மூலம் செயல்படுத்துவது கூட்டுறவுத் துறைக்குப் பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த இருபெரும் திட்டங்களின் காரணமாக விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் மகிழ்ச்சியையும், நெகிழ்ச்சியையும், முதல்வருக்கு அவர்கள் காட்டிய நன்றியையும் நான் ஆய்வுக் கூட்டங்களுக்காக பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றபோது, நேராகக் காண முடிந்தது.

கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி என்ற மகத்தான திட்டத்தின்கீழ், இதுவரை 20,67,823 விவசாயிகளுக்கு 5,056.03 கோடி ரூபாய் அளவிற்கு, கடன் நிலுவை இல்லை என்ற சான்றிதழ் தானாகவே அரசுமூலம் வழங்கப்பட்டிருக்கிறது.

நிலத்தை அடமானம் வைத்துக் கடன்பெற்ற 1,08,201 விவசாயிகளுக்கு 711 கோடியே 46 இலட்சம் ரூபாய் கடனுக்கான பத்திரங்கள் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. எல்லோரும் இங்கே பேசினார்கள். பத்திரங்கள் வழங்கப்படவில்லை, வந்து சேரவில்லை என்று சொன்னார்கள். அவை



இப்பொழுது அனுப்பப்பட்டு, பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அனைத்து நில அடமானப் பத்திரங்களும், 31–8–2006–க்குள் வழங்கப்பட்டுவிட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 88,695 விவசாயிகளுக்கு 120 கோடியே 14 இலட்சம் ரூபாய் கடனுக்காக அடமானம் வைக்கப்பட்ட நகைகள் திரும்ப வழங்கப்பட்டுவிட்டன.

இதுமட்டுமின்றி, இதுவரையில் தமிழகம் முழுவதும் கூட்டுறவு வங்கிகள்மூலமாக 1,10,337 விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக 214 கோடியே 33 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரை எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டவர்களுக்கு, இந்தப் பதிலை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 21,536 விவசாயிகளுக்கு 38 கோடியே 53 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த ஆட்சியில் சென்ற ஆண்டு, இதே காலகட்டத்தில் இந்த மாவட்டங்களில் 3,468 விவசாயிகளுக்குத்தான் 8 கோடியே 41 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதிலே ஒரு கணக்கைச் சொல்லப்போனால், கடந்த ஆட்சி வழங்கியதைவிட, மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு, ஆறு மடங்கு எண்ணிக்கையிலான விவசாயிகளுக்குக் கடன் வழங்கியிருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு, விவசாயிகள் விளைவிக்கின்ற பயிர்களுக்கு ஏற்ப கடன்கள் உடனுக்குடன் தடையின்றி வழங்க ஆணையும் இடப்பட்டுள்ளது. குறுவை, சம்பா, தாளடி போன்றவைகளுக்கு கால, பருவத்திற்குத் தக்கவாறு கடன் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய சாதனையைக் கண்டு மனம் சகிக்காத சிலர், அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற சில குறைகளை பூதாகரம் ஆக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளை மறைத்து, சலசலப்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இத்தகையவர்களின் அறியாமையைக் கண்டு விவசாயப் பெருமக்களும், அவர்தம் குடும்பங்களும் எள்ளி நகையாட இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எங்கேனும் தவறு ஏற்பட்டாலும், அத்தகைய தவறுகளுக்கு காரணமாக யார் இருந்தாலும், அத்தகையோர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*பிற்பகல் 1–15*

நம்முடைய உறுப்பினர், அவருடைய ஊருக்குப் பக்கத்தில் நான் ஒரு கூட்டத்திற்குப் போய் இருந்தபோது வந்து சொன்னார். அதைக்கேட்டு, உடனடியாக அங்கே போய் விசாரிக்கச் சொல்லி இருந்தேன். நடவடிக்கை எடுத்து, அந்த நடவடிக்கை Criminal நடவடிக்கையாகவும், Civil நடவடிக்கையாகவும் எடுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு மட்டுமல்ல, Civil வழக்கும் அவர்மீது தொடரப்படும், ஜப்தி நடவடிக்கையும், அந்தச் சொத்தை எடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

அனைத்து விவசாய பெருமக்களும் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றிய எல்லா ஊழியர்களும், கூட்டுறவுத் துறை அலுவலர்களும், ஒன்றுசேர்ந்து இத்திட்டச் செயலாக்கத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதோடு, வருங்காலத்தில் வாங்குகின்ற கடன்களையும் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதன்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காண்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடின்றி, நம்முடைய முதல்வர் அவர்களுக்கு தங்களுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு இயக்கம் ஒரு நாட்டின் சமூக, பொருளாதாரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் வழி செய்யக் கூடிய மாபெரும் கருவி ஆகும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக வேளாண் பெருங்குடி மக்களுக்கு கடன்கள் வழங்கி, அதன்மூலம் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து நல்ல மகசூல் பெற்று, அவர்களது விளைபொருள்களை நல்ல விலை கொடுத்து விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு விற்பனை சங்கங்கள் வாங்கி, அவற்றை பதப்படுத்தி, நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளின்மூலமாக பொது மக்களுக்கு நியாயமான விலையில் வழங்கி, விலைவாசியை ஒரே சீராக வைத்திருக்கும் ஆற்றல் பெற்ற இயக்கம்தான் இந்த கூட்டுறவு இயக்கம். இத்தகைய கூட்டுறவுகளுக்கு மக்களாட்சி முறைதான் சாலச் சிறந்ததாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கெல்லாம் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறதோ, அன்றைக்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தி, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை



நிர்வாகிகளாக்கி, ஜனநாயகத்தை மலரச் செய்திருக்கிறது. ஆனால், இடையிடையே அமைந்த மாற்று அரசுகள், தேர்தலை நடத்தாமல் தனி அலுவலர்கள் கையிலே சங்கங்களின் பொறுப்பினை ஒப்படைத்ததால், தொடர்ச்சியான மக்களாட்சி முறை இல்லாமல் வேறு நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெறக் காரணமாக இருந்துவிட்டன. அதனால், இனி தொடர்ச்சியாக கூட்டுறவுகளில் எப்பொழுதும் மக்களாட்சி முறை இருக்கும் வகையிலே செயல்படவேண்டும் என்ற தீராத ஜனநாயக வேட்கையோடு கூட்டுறவுத் தேர்தல் நடைபெற வேண்டுமென ஆணையிட்டிருக்கிறார் நம் முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

அதோடு, இரண்டு நாட்களுக்கு முன்னால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதைப்பற்றி பேசும்போது, ஒன்றைச் சொன்னார். *31–7–2006* அன்று நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்கள் கடந்த ஆட்சியில் அவர் முதலமைச்சராக இருந்தபோது *1,169* கோடியே *30* இலட்சம் விவசாயிகளுக்காக வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது என்று தெரிவித்தார். ஆனால், இது உண்மை அல்ல. உண்மையிலேயே விவசாயிகளுக்காக அந்த அரசின் திட்டங்களில், அடிப்படையில் ஊக்கத் தொகை நீங்கலாகத் தள்ளுபடியாக வழங்கப்பட்ட தொகை *369* கோடியே *41* இலட்சம் மட்டுமே. அவர் சொன்ன தொகையில் பாதிக்கு மேல், அதாவது *645* கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி செய்யப்படும் என அரசு ஆணை மட்டுமே வெளியிடப்பட்டதே தவிர, முந்தைய ஆட்சியில் இத்திட்டத்திற்கு எந்தச் செலவுமே செய்யப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இது தவிர *2001* ஆம் ஆண்டு, (குறுக்கீடுகள்) அந்த ஆட்சியிலே இருந்து இருக்கிற புள்ளிவிவரங்களைத் தொடர்ந்து அரசாங்கத்தின் மூலமாக கிடைத்த தகவலைத்தான் இங்கே வெளியிடுகிறேன். என் வீட்டிலிருந்தோ, அலுவலகத்திலிருந்தோ நான் தருகிற புள்ளிவிவரம் அல்ல இது. வட்டித் தள்ளுபடிக்காக அனுமதிக்கப்பட்ட *310* கோடியே *51* இலட்சம் ரூபாயில், செலவழிக்கப்பட்ட தொகை *226* கோடியே *56* இலட்சம். அதேபோன்று *2003–2004*–ல் வட்டித் தள்ளுபடிக்காக அனுமதிக்கப்பட்ட *62* கோடி ரூபாயில், '*40* கோடிதான் செலவிடப்பட்டது. அதனால் அனுமதிக்கப்பட்ட, செலவிடப்படாத தொகை *105.95* கோடி ரூபாய். எனவே, செல்வி ஜெயலலிதா அரசின் ஆட்சிக் காலத்தில் அறிவித்த வட்டித் தள்ளுபடித் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை,

*(குறுக்கீடுகள்) 369 கோடியே 41 இலட்சம் ரூபாய் மட்டுமே என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, அடிக்கடி குறுக்கிடுகிறீர்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* எனக்கும் சட்டசபை வரலாறு கொஞ்சம் தெரியும். நானும் ரொம்ப நாளாக வந்து கொண்டிருக்கிறேன். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் எவ்வளவு கேவலம்... *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் பேசியதே கிடையாதா? *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசியதே கிடையாதா? அம்மையார் என்கிறார்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் ஒரு விளக்கம் சொல்ல சந்தர்ப்பம் கொடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கொஞ்சம் இருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பெயரைச் சொன்னீர்கள். நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் பெயரைச் சொல்லாமல் இருந்தீர்களா? *(குறுக்கீடுகள்)* எத்தனை தடவைச் சொன்னீர்கள்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நானே சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* அமைதியாக



உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். ரங்கநாதன், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* ஜெயக்குமார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள் முதலில். *(குறுக்கீடுகள்)* முதலில் உட்காருங்கள். உறுப்பினர்கள் யாரும் எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள் முதலில். அமைதியாக இருங்கள். அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கடந்த கால ஆட்சியில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் விவசாயக் கடன்களை இரத்து செய்தது குறித்து அறிக்கை ஒன்றை அப்போது தந்தார்கள். இப்போது ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அதிகாரிகளையெல்லாம் அழைத்துக்கொண்டு, எவ்வளவு கூட்டுறவுக் கடன்கள் கடந்தகால ஆட்சியிலே இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைக் கேட்டிருக்கிறார். அதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் சொல்கின்ற புள்ளிவிவரங்களிலே ஏதாவது தவறு இருக்குமானால், நாளைக்கே அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரக்கூடிய *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. தவறான புள்ளிவிவரம் யார் கொடுத்தாலும், தவறான தகவல் யார் கொடுத்தாலும், உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. எனவே, மானியத்தின்மீது அமைச்சர் பதில் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* ஏதாவது சொல்லவேண்டுமென்றால், ஜெயராமன், கடைசியாகச் சொல்லலாம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லையில்லை. கடைசியாகச் சொல்லலாம், உட்காருங்கள். அமைச்சர் உரையை முடிக்கட்டும், அதற்குப்பிறகு பேசலாம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரு வார்த்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வார்த்தை? *(குறுக்கீடு)* கொஞ்சம் பொறுங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எங்களுடைய தலைவருக்கு எத்தனை வயது, உங்கள் தலைவருக்கு எத்தனை வயது? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், பிறகு சொல்லுங்கள், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தயவுசெய்து, அண்ணே ஒரு நிமிடம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கொஞ்சம் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் ஒன்று சொல்கிறேன். நான் உங்கள் தலைவரைவிட வயதிலும் மூத்தவன், அரசியலிலும் மூத்தவன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. அதனால் பெயரைச் சொல்வதில் தவறே இல்லை. *(குறுக்கீடுகள்)* சில கூட்டுறவு வங்கிகளில் பொது மக்களால் செலுத்தப்பட்டுள்ள வைப்பீட்டுத் தொகையை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் குறுக்கிடுகிறீர்கள். அமைதியாக இருங்கள். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் கடைசியில் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் உரையை முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* உரையை முடிக்க வேண்டும், Time ஆகிவிட்டது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, சில கூட்டுறவு வங்கிகளில், பொது மக்களால் செலுத்தப்பட்டுள்ள வைப்பீட்டுத் தொகையை திரும்ப வழங்குவது குறித்து உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள்மூலம் தெரிவித்துள்ளார்கள். முந்தைய காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் தவறான செயல்பாடுகளின் காரணமாகவும், பணியாளர்களுக்குக் கூடுதலாகச் சம்பளம் விடுவித்ததாலும், பல்வேறு காலகட்டங்களில் இயற்கைச் சீற்றங்களால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி உதவி அளித்ததாலும், வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யாததாலும், அந்தச் சங்கங்களால் வைப்புத் தொகைகளைத் திருப்பிச் செலுத்த இயலவில்லை.



*பிற்பகல் 1–25*

கழக அரசு பதவியேற்றவுடன், இந்த ஆட்சி வந்து ஏறத்தாழ *80* நாட்கள்தான் ஆகின்றது. அதற்குள்ளே இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நாங்கள் தள்ளி வைத்தமாதிரி கத்தினால் என்ன நியாயம்? அதிலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். பதவியேற்றவுடன் விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ததுடன், அதனால் வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பினை வட்டியுடன் ஐந்து ஆண்டு காலத்தில் திருப்பிச் செலுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. சிலபேர் சில சந்தேகங்களைச் சொன்னார்கள். அந்தச் சங்கங்கள் இயங்க முடியாது என்றார்கள். அதுதான் தப்பு. அவர்களுக்கு இருந்த சுமையை நீக்கிவிட்டோம். சுத்தமாக ஒழித்துவிட்டோம். அவர்கள் இப்போது free–ஆக இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது கொடுக்கின்ற தொகை free. அது இனாம் போன்றது. அதை வைத்துக்கொண்டு, அந்தச் சங்கங்களை மிளிரச் செய்யலாமே தவிர, அந்தச் சங்கங்கள் வீணடிக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இவ்வரசு நலிவுற்ற கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளைச் சீரமைத்து, பொதுமக்களின் வைப்பீட்டுத் தொகைகளை திருப்பியளிக்க நடவடிக்கை எடுத்து வரச் செய்திருக்கிறது. அதன்அடிப்படையில், மதுரை நகர கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்துள்ள தொகையை வைப்பீட்டுதாரர்களுக்கு திருப்பியளிக்க–அவர்கள் ரொம்ப ரூபாயை சாப்பிட்டுவிட்டார்கள். அங்கிருந்த பணியாளர்களும் சாப்பிட்டுவிட்டார்கள், அதை வேறுவிதமான கடன்களுக்கும் கொடுத்துவிட்டார்கள், எந்தெந்த வகையிலோ, பலகோடி ரூபாய் அதிலே வீணடிக்கப்பட்டுவிட்டது. அதை இப்போது வைப்பீடு செய்த அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில், கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு பலஹீனமோ, அல்லது அவநம்பிக்கையோ ஏற்படக் கூடாது என்பதற்காக, நேற்றையதினம் தொலைபேசியில் மும்பையில் உள்ள வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகத்தை அணுகியதில் அவர்கள் ரூ. *21.77* கோடியை அனுமதித்தார்கள். இன்று அது வழங்கப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இது ஒரு முதல்கட்ட நடவடிக்கை. ஏறத்தாழ *54* கோடி ரூபாய் இருக்கும் என்று கருதுகிறேன். அதிலே பாதியை இப்போது நாங்கள்

வழங்கியிருக்கிறோம். நேற்று ஒரே நாளில் நடவடிக்கை எடுத்து, முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை அவர்களுக்குத் தெரிவித்து, அதைத் திருப்பிக் கொடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலை இங்கே இருக்கிறது. அன்றைக்குப் போனபோது எல்லாம் சொன்னார்கள். நேராகவே சொன்னார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அருமை நண்பர்கள்கூட என்னிடத்திலே சொன்னார்கள். அதை இங்கே வழங்கியிருக்கிறோம்.

பல உறுப்பினர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஒரு பெரிய சுமையை இந்த அரசாங்கம் தாங்கி இருக்கிறது. 6 ஆயிரத்து சொச்சம் கோடி என்பது சாதாரண விஷயமல்ல. அப்படிப்பட்ட நேரத்தில், இந்தக் கட்டடங்கள் கட்டுவது, மற்ற நடவடிக்கைகளை சற்று ஒத்தி வைத்துவிட்டு, அடுத்த ஆண்டில் அந்தப் பிரச்சினைகளை மேற்கொள்ளலாம் என்பதை எல்லோருக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில இடங்களில் சில கட்டடங்கள் கட்டப்பட்டு பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை வேண்டுமானால் பூர்த்தி செய்வோம். அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. அதோடுகூட வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பவேண்டும் என்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரூட்ட வேண்டுமென்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தவேண்டுமென்றும், பல்வேறு கருத்துகளை இங்கே சொன்னார்கள். அவற்றை வெட்டுத் தீர்மானங்களிலே கொடுத்திருக்கிறார்கள். 50 சட்டமன்ற உறுப்பினர்கள், 199 வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிலே இவை உள்ளடக்கம். அப்படிப்பட்டவற்றை செய்து தருவதற்கு இந்த அரசாங்கம் நிச்சயம் காத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவற்றையெல்லாம் ஆய்ந்து அறிந்து உரிய நடவடிக்கை எடுத்து கூட்டுறவுத் துறையை சீர்படுத்தி, செப்பனிட்டு, கூட்டுறவு இயக்கத்தைச் சரியான திசையிலே கொண்டு சென்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மகத்தான சாதனைகள் புரிந்து தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றிடுவோம் என்று உறுதி கூறி, நான் சில அறிவிப்புகளை இங்கே உங்கள் மத்தியிலே அறிவிக்க இருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று எண்ணி



அறிவித்ததற்கேற்பவும், மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் தேவையினையொட்டியும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள 125 உதவி மேலாளர் பணியிடங்கள் நிரப்பப்படும். அவை அத்தனையும் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களில் முதல்கட்டமாக 250 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 500 இடங்களில் காலியாக இருக்கின்றன. இந்தத் தடவை 250 பேர்களை நியமிக்கவிருக்கிறார்கள். இதில் 75 உதவியாளர் பணியிடங்கள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அதனுடைய இணைப்புச் சங்கங்களின் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சங்கங்களிலிருந்து ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** கூட்டுறவுச் சங்கங்களின் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றில் பணியாற்றும் தகுதியுள்ள பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும். அங்கே கீழே இருப்பவர்களுக்கு ஒரு promotion கொடுக்கப்பட்டு, அவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு, மீதியிருப்பவைகளுக்கு நேரடி நியமனம் செய்யப்படும்.

கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில்—இங்கே அவர்கள் சொன்னார்கள், காலியாக உள்ள 2,200 விற்பனையாளர்கள்—எல்லா இடங்களிலும் காலியாக இருக்கின்றன என்கிறார்கள்—ஊரகங்களில் முழுவதும் அந்தக் குறைபாடு இருக்கிறது. 2,200 விற்பனையாளர்கள் மற்றும் 300 கட்டுநர்கள், பொட்டலம் போட்டு மடித்து, தைத்து அதை எடுத்துக் கொடுக்கின்றவர்கள். ஆக மொத்தம் 2,500 பணியிடங்களை, நாளை முதல், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும், 2,500 பேர்களையும் பணி நியமனம் செய்ய இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவுச் சங்கங்களில், பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இல்லை.

தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்மூலமாக பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தனி நபர்களும் பயிற்சி பெறும் வகையில் 2006–2007–ல் குறைந்தபட்சம் 3,000 நபர்களுக்கு நகை மதிப்பீடும் மற்றும் அதன் நுட்பங்களும் குறித்தான பயிற்சி வழங்கப்படும். ஏற்கெனவே அந்த ஆட்சியிலே 2,000 பேர்களுக்குக் கொடுத்தார்கள். நாம் 3,000 பேர்களுக்குக் கொடுக்க இருக்கின்றோம்.

கடந்த ஆட்சியில் 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கலைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை அது. எல்லா பத்திரிகைகளிலும் எழுதினார்கள். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியிலேகூட சொன்னார்கள். அப்போதே நான் சிரித்துக் கொண்டே சொன்னேன், பொறுத்திருங்கள், பார்த்துக்கொள்வோம், சட்டமன்ற நிதிநிலை அறிக்கை வரட்டும். மானியக் கோரிக்கை வந்த பிறகு நான் சொல்கிறேன் என்று சொன்னேன். இந்த 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கலைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அந்த அறிவிப்பு இரத்து செய்யப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை புத்துயிர் ஊட்டி வாழ்திறனுள்ள சங்கங்களாக்க நடவடிக்கை எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவற்றை எப்படி புதுப்பிப்பது என்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே கலைக்கப்பட்ட சங்கங்கள் இங்கே தனி அலுவலர் ஒரு குறிப்பிட்ட 34 சங்கங்களுக்கு நான் கொண்டு வந்த மசோதாவிற்கு அப்போது மிகவும் கஷ்டப்பட்டார்கள். இதை ஆரம்பத்திலேயே எதிர்க்கிறோம் என்றார்கள். ஆனால், இந்தக் கூட்டுறவுத் துறைக்கு தனி அலுவலர்கள் என்கிற ஒரு கொள்கையே யார் காலத்தில். கொண்டு வரப்பட்டது என்பதை இந்த அவையில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் தெரியும். அந்தக் கொள்கை குறிப்பிலும் அது இருக்கின்றது. இதை நான் எதற்காக குறிப்பிடுகின்றேன் என்றால் சங்கங்களாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொன்னவுடனேயே கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் உள்ள அத்தனை பேரும் வந்து கேட்கின்றார்கள். எங்கள் சங்கத்தைக் கலைத்து இருக்கிறார்களே, என்ன செய்வது என்று. அதற்கு ஒரு நடவடிக்கை எடுக்கின்றோம். என்ன நடவடிக்கை? அந்தச்



சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டுகின்றோம். ஏற்கெனவே உள்ள சங்கங்கள், கலைக்கப்பட்டது அத்தனையும் புத்துயிர் ஊட்டுவதற்குக் கூட்டுறவுத் துறையினுடைய விதிமுறைகளுக்கிணங்க அங்கே இருக்கின்ற மக்கள் தொகை, நிலத்தின் அடிப்படை, கடன் கொடுக்கின்ற தகுதி வாய்ந்தவர்கள், கடன் பெறுகின்ற தகுதி வாய்ந்தவர்கள், அதனுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் அந்தச் சங்கங்களுக்கும் உயிர் கொடுக்க இந்த அரசு முடிவெடுத்திருக்கின்றது. முதலமைச்சர் அவர்கள் அதை அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் தள்ளுபடிச் சலுகை பெற்ற விவசாயிகளுக்கு அவர்கள் வங்கிகளிலே அடமானமாக வைத்துள்ள சொத்து பத்திரங்கள் திருப்பி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது ஒரு பெரிய பிரச்சினை. பத்திரிகைகளிலே எல்லாம் எழுதினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப 31–8–2006–க்குள் அனைத்துப் பத்திரங்களும் திருப்பி வழங்கப்படும். அவை அத்தனையும் இந்த மாத கடைசிக்குள் வழங்கப்படும். மேற்சொன்னவாறு கடன் தள்ளுபடிச் சான்றிதழ் பெற்ற கடன்தாரர் அந்தப் பகுதியிலுள்ள சார்–பதிவாளர் அலுவலகத்தை அணுகி, இந்தப் பத்திரத்தை வாங்கிக் கொண்டு போய் அப்படியே வீட்டிற்குப் போய்விட முடியாது. ஏனென்றால், ஏற்கெனவே அடமானம் பெற்றிருக்கிறது. அதில் வில்லங்கம் இருக்கின்றது. அவர்கள் அதை வாங்கிக் கொண்டு போய் பதிவுத் துறை, Registrar Office–க்குச் சென்று அந்த வில்லங்கத்தை மாற்றித் திரும்ப எடுத்துக்கொள்ள வேண்டும். அதை வாங்கியவுடனேயே அந்த வில்லங்கம் மறைந்ததாக யாரும் கருதக்கூடாது. ஏற்கெனவே அது வில்லங்கம் ஆகியிருக்கின்றது.

சிறு வணிகத் திட்டத்தின்கீழ் தற்போது மகளிர் வணிகக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இனி இந்த சிறு வணிகக் கடன் திட்டம் சிறு வணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் பயனளிக்கும். இது பெண்களுக்கு மட்டும் இருந்தது. இதை ஆண்களுக்கும் பயன் அளிக்கத்தக்க வகையிலே மாற்றி இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வகையில் விரிவாக்கப்பட்டு வாராந்திரக் கடனாக இரண்டாயிரம் வழங்கப்படும்.

பிற்பகல் 1–35

விவசாயிகளின் பயிர்க் கடன்மீதான வட்டிச் சுமையைக் குறைக்க நடப்பு குறுவைப் பருவத்தில் பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு சதவிகித வட்டிக் குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்புத் தொகையை அரசே ஏற்றுக் கொடுப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகையை அரசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், பண்ணை சாரா கடன் பெற்றுள்ளவர்களின் கடன்—பண்ணை சார்ந்த, பண்ணை சாராத கடன், அதாவது விவசாயமற்றவர்கள், விவசாயிகள் என்ற நிலை இருக்கிறபோது, அதிலே ஒரு சிறிய ஒன்றைத்தான் எங்களால் செய்ய முடியும். என்ன காரணம் என்றால், கடன் சுமையைக் குறைக்கும்வண்ணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பண்ணை சாரா கடனும் பெற்று, தற்போது நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவுதான் எங்களால் செய்ய முடியும் அதிலே.

தவணை தவறிய கடன்காரர்களுக்கு 31–12–2006–க்குள், 12 ஆம் மாதம் டிசம்பர், காலம் கூடத்தான் கொடுத்திருக்கிறோம். 31–12–2006–க்குள் தவணை தவறிய தொகையைத் திரும்பி செலுத்தும்பட்சத்தில் மேற்கண்ட வட்டி குறைப்புடன் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அபராத வட்டி 3 சதவிகிதமும் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ஆயிரம் வீதம், ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும்வண்ணம் வட்டியில்லா கடனாக 500 மகளிருக்கு மொத்தம் 5 இலட்சம் ரூபாய் நடப்பாண்டில் வழங்கப்படும்.



தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லா கடனாக இரண்டாயிரம் மகளிருக்கு மொத்தம் 10 இலட்சம் ரூபாய் நடப்பாண்டில் வழங்கப்படும்.

நகர மற்றும் புறநகரப் பகுதிகளில் உள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 500 வீதம், ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும்வண்ணம் வட்டியில்லா கடனாக ஆயிரம் மகளிருக்கு மொத்தம் 5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள உடல் ஊனமுற்ற பெண்களுக்கு, அவர்களது கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, நபர் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வட்டியில்லா பங்கு மூலதன கடனாக ஆயிரம் பெண்களுக்கு மொத்தம் 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான அடிப்படை வசதிகள் செய்துகொள்ள சங்கம் ஒன்றுக்கு ரூ.4.30 இலட்சம் வீதம், அதாவது ரூ.2.10 இலட்சம் கடனாகவும், ரூ.2.20 இலட்சம் மானியமாகவும் இரண்டு சங்கங்களுக்கு வழங்கப்படும்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகத்தை சீராகச் செயல்படுத்த—உணவு அமைச்சர் சொன்னதற்கு அடிப்படை—எங்கள் கடைகளில் கொண்டு வந்து வைத்து விற்கிறார்களே அதற்கு—சீராகச் செயல்படுத்த நடப்பாண்டில் பழுதடைந்துள்ள மண்ணெண்ணெய் பேரல்களுக்குப் பதிலாக புதிய பேரல்கள் வாங்குவதற்கு 35 இலட்சம் அந்தச் சங்கங்களுக்கு மானியமாகவே வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாயிரம் நியாய விலைக் கடைகளுக்கு நவீன மின்னணு எடை இயந்திரம் வாங்குவதற்கும்—இங்கே ரொம்ப பேர் சொன்னார்கள், சங்கத்தில் எல்லாம் அந்தத் தராசு, இந்தத் தராசு, பழைய தராசுகள் எல்லாம் கேவலமாக இருக்கின்றன என்று

சொன்னார்கள். அதற்காக மின்னணு எடை இயந்திரம், அதாவது, இரண்டு பக்கம் இருக்குமே அப்படியில்லாமல் தட்டு தராசாக, புதிய தராசாக, ஏறத்தாழ 6 ஆயிரத்திற்கு மேல் விலை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்—முறைப்படி அதை டெண்டர் வைத்து வாங்க வேண்டும். அப்படி வாங்குவதற்காக ஒரு கோடி மானியமாக இந்தச் சங்கங்களுக்கெல்லாம் நாம் வழங்குகிறோம். இதையெல்லாம் இப்போதுதான் இந்த ஆட்சியிலே பண்ணுகிறோம். அதற்கு முன்பு அங்கே தராசு இருந்ததா என்றும் பார்த்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மிக்க வேகப்படுபவர்களுக்காகச் சொல்கிறேன். தராசு இருந்ததா என்றும் பார்த்ததில்லை, எங்கேயிருக்கிறது தராசு என்று யாருக்கும் தெரிந்ததில்லை. (குறுக்கீடுகள்)

பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் நாணய சங்கங்களில் தனி நபர் கடன் உச்சவரம்பு தற்போதுள்ள ரூபாய் இரண்டு இலட்சம் அளவிலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை வெளிப்படையாக பொது மக்கள் தகவல் அறியும்வண்ணம் நடப்பாண்டில் தொடுதிரை தகவல் அறியும் கணினிகள் அனைத்து மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் அமைக்கப்படும். சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் ரூ. 50 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்படும். கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் கணினிமயமாக்கப்படுவதோடு கூட்டுறவுத் துறையும் படிப்படியாக கணினிமயமாக்கப்படும்.

*பிற்பகல் 1–40*

கூட்டுறவுச் சங்கங்களின் ஆய்வு முறைகளை நெறிப்படுத்தி கடன் வழங்கல் மற்றும் நியாய விலைக் கடைகளின் ஆய்வினைத் தீவிரப்படுத்தும் வகையில் வாகன வசதி இல்லாமல் இருந்த 2 மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் 19 துணைப் பதிவாளர்களுக்கு முறையே 2 அம்பாசிடர் சீருந்தும், மற்றும் 19 ஈப்புகளும் 87,95,000 ரூபாய் செலவில் வழங்கப்படும்.

1996 ஆம் ஆண்டு கூட்டுறவுகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களை ஒட்டுமொத்தமாகக் கலைத்துவிட்டு, தனி அலுவலர்களை நியமித்து கூட்டுறவுச் சங்கங்களின் புதிய உறுப்பினர்களை தனி



அலுவலர்கள் சேர்க்க வழிவகை செய்ய, பிரிவு 89(A) என்ற ஒரு புதிய பிரிவினை கூட்டுறவுச் சட்டத்தில் சேர்த்து 2001 ஜூன் திங்களில் ஒரு அவசரச் சட்டத்தினை முந்தைய அரசு பிறப்பித்தது. இப்புதிய சட்டப் பிரிவினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தில் 3 நீதிபதிகளைக் கொண்ட குழு, புதிதாகச் சேர்க்கப்பட்ட மேற்படி பிரிவு 89(A) செல்லாது எனத் தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில், முந்தைய அரசால் மேல் முறையீடு செய்யப்பட்டது. நாம் அந்த மேல் முறையீட்டினைத் திரும்பப் பெற்று உயர்நீதிமன்றத் தீர்ப்பையொட்டி தனி அலுவலர்கள் நியமனத்திற்கு முன்பாக, அதாவது 25–5–2001–க்கு முன்னர் உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்திட இவ்வரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே இருந்த சங்க உறுப்பினர்களின் அடிப்படையில், இரண்டு, இரண்டு ரூபாய் கட்டிவிட்டு சேர்ந்தது எல்லாம் High Court–லேயே அது செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். அதனாலே, நாம் புதிய நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம்.

நடப்பு ஆண்டில் ஒரு இலட்சம் மகளிர்க்கு புதிய சுய உதவிக் குழுக்கள் மூலம் கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்படும். கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கப்படும் விதிமுறைகளை–வழிமுறைகளை மேலும் எளிதாக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

கூட்டுறவு வங்கிகளில் செயல்படும் பயிர்க் கடனுக்கான காப்பீட்டுத் திட்டத்தில் மாறுதல் செய்து, அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டை நீட்டிக்கும் வகையில் அரசுக்கு ஆலோசனை வழங்க வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட 14 மாவட்டங்கள் நீங்கலாக, இதர மாவட்டங்களில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

தமிழக அரசு இந்திய ஆட்சிப் பணி, மற்றும் அகில இந்திய பணிகளுக்காக தேர்வுக்கு ஏற்கெனவே நடத்தி வரும் பயிற்சித் திட்டங்களில் சேர்ந்து படிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

கடந்த ஆட்சியிலே நியாய விலைக் கடைகளில் காலி சாக்குகள்–கோணிப் பை மிகப்பெரிய பிரச்சினை இது. (சிரிப்பு). கடந்த

ஆட்சியிலே நியாய விலைக் கடைகளில் காலி சாக்குகள் விற்பனையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரே விலை என்று நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த முறையை மாற்றிவிட்டு, சரக வாரியாக கோணிப் பை விற்பனைக் குழு அமைத்து திறந்த முறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏல முறை இரண்டுமே வைத்து இருக்கிறோம். திறந்த முறைகளிலும் ஏலம் கேட்கலாம். டெண்டரும் போடலாம். அப்படி போடும்போது, எது அதிகமோ அந்த விலைக்குத்தான் கொடுக்கப்படும். இப்புதிய முறையின் காரணமாக இன்றைய நிலவரப்படி கணக்கிட்டால் சாக்கு ஒன்றுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.5 கோடி முதல் ரூ.8 கோடி வரை கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூடுதலாக இதன்மூலம் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகள் அனைத்தும், வெட்டுத் தீர்மானங்கள் மற்றும் கேள்விகள் மூலமாக இத்துறைக்கு வந்துள்ளன. இம்மன்றத்தில் 50 சட்டமன்ற உறுப்பினர்கள் 199 வெட்டுத் தீர்மானங்களை கொடுத்து உள்ளனர். இவற்றையெல்லாம் பரிசீலித்து உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று சொல்லி, உறுப்பினர்கள் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–1996 இந்த 5 ஆண்டு கால மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே N.C.D.C மூலமாக இரண்டு கட்டத்தில், முதல் கட்டமாக 18 கோடி ரூபாயும், இரண்டாம் கட்டமாக 48 கோடி ரூபாயும் மீனவர்கள் தங்களுடைய தொழில் செய்வதற்கு கட்டுமரம், வலை, வல்லம் மற்றும் outboard machine அதாவது வெளிப்பொருத்தும், உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு அன்றைக்கு N.C.D.C மூலமாகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அந்த கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை. அந்தக் கடன் தள்ளுபடி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி ஒரு கொள்கை முடிவுபற்றியது. கொள்கை முடிவை அரசாங்கம் ஆலோசித்து தேவைப்பட்ட முடிவை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கை வாபஸ் பெற்று, தேர்தலை ஜனநாயக முறையில் நாங்கள் நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 2000–க்கு முந்தைய ஆண்டிலேதான் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களைச் சேர்த்ததிலே பல்வேறு தவறுகள் இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது எதிர்க்கட்சியின் சார்பாக. ஆனால், இன்றைக்குப் புதிதாக தேர்தல் நடத்துகிறபோது, உண்மையான அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களை சரியான முறையில் தேர்வு செய்து, தேர்தலை நடத்தப் போகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நாங்கள் எதையும் சரியாக ஆராய்ந்து முறையாகத்தான் செய்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு விவரங்கள் கேட்க விரும்புகிறேன். ஒன்று நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரிடம். 126 கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் செயல்படுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்பொழுது முதல் அவை கடன் வழங்கத் தொடங்கும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். கோணிப் பை விவகாரத்தைப் பற்றி அவர் இங்கே குறிப்பிட்டார். 2001–க்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே ஒரு கோணிப் பை 2 ரூபாய், 3 ரூபாய்க்கு விற்றது. அனைத்திந்திய அண்ணா தி.மு.க.

ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் மாவட்ட அளவில் ஒட்டுமொத்தமாக tender-cum-auction முறையைக் கொண்டு வந்து 6 ரூபாய், 5 ரூபாய் 50–பைசாவிற்கு விற்கிற அளவுக்கு அதன் விலையை உயர்த்தி ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி, 7 கோடி, 8 கோடி என்கிற அளவுக்கு வருமானத்தை பெருக்கியது அம்மாவினுடைய அரசு என்பதைக் குறிப்பிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் சொன்னதுபோல சங்கரன்கோயிலில் அந்த உணவு கிடங்கிலே நான்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் டெண்டர் விடுவதை மறுத்தார்கள் என்றுதான் பொருள் ஆகிறது. எனவே, இந்த அரசு டெண்டர் விடுவதையும், ஏலம் விடுவதையும் ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில்தான் இதைச் செய்யும் என்பதை உறுதிப்படுத்துகிறேன். பதிவு செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நான் அத்துமீறி நுழைந்ததாகச் சொல்வது தவறு. நான் அதை வன்மையாக மறுக்கிறேன். நான் எதற்காக அங்கே சென்றேன் என்றால், எங்களுடைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய புகைப்படப் போட்டோவை அங்குள்ள அலுவலகத்தில் எடுத்து விட்டதாகச் சொன்ன தகவலின் அடிப்படையில் நான் சென்றேன்; ஓடினேன்; பார்த்தேன்; அங்கு பார்த்தபொழுது படம் இல்லை; உடனே கேட்டேன் படத்தை, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள்.



**திரு. சொ. கருப்பசாமி:** வாங்கினேன் படத்தை; பார்வைக்கு வைத்தேன். அங்கேயுள்ள சங்கரன்கோயில் வட்டார வழங்கல் அதிகாரி அங்கே இருந்தார்கள். அவரிடத்தில் நல்ல அரிசி போடுங்கள், மக்கள் கேட்கிறார்கள் என்று சொன்னவுடனே நீங்கள் வேண்டுமானால் போய் பாருங்கள் என்று சொல்லி அந்த வட்டார வழங்கல் அதிகாரிதான் என்னை உள்ளே அழைத்து சென்றார்கள். பார்த்தேன்; பூராவும் உளுத்துப் போன அரிசி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலிருந்து இந்த ஆட்சி எவ்வளவு நேர்மையாக மக்கள் பிரதிநிதிகளை மதிக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டீர்கள் இல்லையா, உட்காருங்கள். நீங்கள் குற்றச்சாட்டை மறுத்து விட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, உட்காருங்கள்.

**திரு. கோவை தங்கம்:** வால்பாறைக்கும் நீலகிரி மாவட்டத்திற்கும்—மலைப் பகுதி என்பதால்—சீமை எண்ணெய், மண்ணெண்ணெய் அதிகமாகத் தருவதாக உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்காக வால்பாறை மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே ஒரே ஒரு கேள்வியை கேட்க விரும்புகின்றேன். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறைக்கு மண்ணெண்ணெய் அதிகமாகத் தருவதாக கூறினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்களுக்கும் நன்றி தெரிவித்து எவ்வளவு மண்ணெண்ணெய் கூடுதலாக வழங்குகிறார் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிறபொழுது நீலகிரி மாவட்டத்தில் அந்த மலைப் பகுதியிலே கூடுதல் மண்ணெண்ணெய் என்ன தருகிறோமோ அதையே வால்பாறைக்கும் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறேன். எனவே, அதே அளவு கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். *(குறுக்கீடுகள்)* உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் பேசியாகிவிட்டது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1-50*

**திருமதி டி. யசோதா:** எங்கள் கட்சி சார்பில் இரண்டே இரண்டு பேர்தான் பேசியிருக்கிறோம்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகர கூட்டுறவு வங்கியிலே பணம் முதலீடு செய்தவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து திரும்ப வழங்கப்பெறும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு மதுரை மக்களின் சார்பில் என்னுடைய நன்றியறிதலை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** அதேபோன்று, அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நன்மாறன், உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சந்தேகத்தைத்தான் கேட்கிறேன். 9 சதவிகித வட்டியினை



நீங்கள் குறைப்பதாகச் சொல்லி 2 percent குறைத்து 7 சதவிகிதம் என்று சொல்கிறீர்கள். மத்திய அரசாங்கம் ஏற்கெனவே இரண்டு சதவிகிதம் குறைத்திருக்கிறது. அப்படியென்றால் அந்த 7 சதவிகிதத்தில் மத்திய அரசாங்கத்தினுடைய இரண்டு சதவிகிதம் உள்ளடங்கி இருக்கிறதா, அல்லது அதைத் தவிர்த்து—ஏனென்றால், 9–லே நீங்கள் இரண்டு குறைத்தால் 7, மத்திய அரசாங்கத்தின் இரண்டு குறைத்தால்—ஏற்கெனவே குறைத்திருக்கிறார்கள்—அப்போது 5 வரவேண்டும். ஆக 7 தான் வருகிறது என்றால், அது மத்திய அரசாங்கத்தினுடைய குறைப்பா, மாநில அரசாங்கத்தினுடைய குறைப்பா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* திரு. வேல்முருகன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் கேட்டதைப்போல, மத்திய அரசாங்கம் 9 சதவிகிதத்திலே இருந்து 7 சதவிகிதமாகக் குறைத்தது. அதை இந்த அரசாங்கம் பின்பற்றி விவசாயிகளுக்கு 7 சதவிகிதம் என்று இப்போது வட்டி வீதம் அறிவித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் எங்கள் கடலூர் மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்தபோது, ரேஷன் கடைகளில் அரிசி வாங்குவதற்காக பல்வேறு மைல் தூரம் கடந்து சென்று வாங்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது, ஆதலால் கிராம மக்களுடைய நலனைக் கருதி, ஏழையெளிய மக்களுடைய வாட்டத்தைப் போக்குகின்ற வகையில் 150 அட்டைதாரர்களுக்கு ஒரு பகுதி நேர கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அந்த ஆய்வுக் கூட்டத்தில் வேண்டுகோள் வைத்தோம். அதை ஏற்று இங்கு பெருந்தன்மையோடு அறிவித்திருக்கிற மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு *(குறுக்கீடு)* எங்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பில் 6 பேர் பேசியிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். 2001–ல் இருக்கின்ற உறுப்பினர்களின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும், புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள் என்ற தகவலையும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். 1996-லிருந்து 2001 வரை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நியாயமான, உண்மையான உறுப்பினர்களைக்கூட ஒட்டுமொத்தமாக நீக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இருங்கள். நான் முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பெரியகுளம் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திலே நான் உறுப்பினர், 1996–2001–ல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் எழுந்து நிற்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** ஆதாரத்தின் அடிப்படையில் சொல்கிறேன். உயர் நீதிமன்றத் தீர்ப்பு அது. (குறுக்கீடு) உயர் நீதிமன்றத் தீர்ப்பு அது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கருத்து சொல்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அவர் எழுந்து நின்றால், உறுப்பினர்கள் முதலில் உட்கார வேண்டும். அதுதான் அவை மரபு. முதலில் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நாங்கள் உறுப்பினர்கள் சில பேரை நீக்கிவிட்டதாகவும், தி.மு.க.காரர்களையே நாங்கள் சேர்த்துவிட்டதாகவும் சொல்லி, உச்ச நீதிமன்றத்திலே வழக்குப் போட்டதாகச் சொல்கிறார்கள். இப்போது இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கைத் திரும்பப் பெறவேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. வேண்டுமானால் உச்ச நீதிமன்றத்திற்கு நீங்களும் போய் வாதாடி, நாங்கள் போடுகின்ற விண்ணப்பத்திற்கு எதிராக ஒரு விண்ணப்பத்தைப் போடுங்கள். நீதிமன்றம் என்ன முடிவு எடுக்கிறதோ அந்த முடிவுக்கு அரசும் கட்டுப்படத் தயாராக இருக்கிறது.



பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன். (குறுக்கீடு) நன்மாறன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், இங்கே எழுப்பிய ஒரு விளக்கத்திற்கு நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தந்திருக்கிறார்கள். தவறாகப் பதிவாகிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். 2001 வரை உறுப்பினர் சேர்த்ததன் அடிப்படையில் தேர்தல் நடத்த வேண்டுமென்று வழக்கு உயர் நீதிமன்றத்திற்குப் போனது. ஆனால், உயர் நீதிமன்றம் மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்று இருந்த காலத்தில் உறுப்பினர் சேர்த்ததுதான் செல்லும், தனி அலுவலர்கள் காலத்தில் சேர்த்த உறுப்பினர்கள் செல்லத்தக்கது அல்ல என்று தீர்ப்பு வழங்கியது. அதை எதிர்த்துதான் அ.தி.மு.க. ஆட்சியிலே உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கிற்குப் போனார்கள். அது நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இப்போது தேர்தல் நடத்தினால், 2001 ஆம் ஆண்டு தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு உள்ள உறுப்பினர்களைக் கொண்டுதான். (குறுக்கீடு) 2001 ஆம் ஆண்டில் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில்தான் தேர்தல் நடத்தப்படும். ஆகவே, அதுதான் உண்மை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் பக்கத்திலேயிருந்து, உங்கள் கட்சியிலிருந்து நிறைய உறுப்பினர்கள் பேசியாகிவிட்டது. அதற்குப் பிறகும் நீங்கள் எழுந்து நிற்பது முறையில்லை. திரு. நன்மாறன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நன்றி சொல்ல விடுங்கள். (குறுக்கீடுகள்) ஓர் உதாரணத்தைச் சொல்ல விடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. என். நன்மாறன்:** மதுரை நகர கூட்டுறவு வங்கி குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கு நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விஷயம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாரையும் யாரும் கட்டாயப்படுத்த முடியாது. உட்காருங்கள் முதலில். அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் வங்கிகளில் இருக்கும்வரை புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான அதிகாரம் இல்லை. அந்தத் தனி அதிகாரிகள் சென்றுவிட்டு, மக்களாட்சி வந்தபிறகுதான் அந்தத் தலைவர் வந்தபிறகுதான், அந்தப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியும். இதுதான் விதி. இதைப் புரிந்துகொள்ளாமல் பேசுவது தவறு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வரியிலே முடியுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும் தெரிகிறதா, அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001–ல் நான் பெரியகுளம் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர். 1996–2001–ல் நான் பெரியகுளம் நகர மன்றத்தினுடைய தலைவர். என்னை போலி உறுப்பினர் என்று சொல்லி, அந்தச் சங்கத்திலிருந்து நீக்கியிருக்கின்றார்கள். என்னோடு சேர்ந்து 150 பேரை நீக்கியிருக்கின்றார்கள். அந்த மாதிரி உதாரணம் எல்லா சங்கங்களிலும் இருக்கின்றது. ஆகவே, நியாயமான உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு ஏதாவது வழிவகையை இந்த அரசு செய்யுமா என்பதை உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்ற குற்றச்சாட்டு 5 வருடத்திற்கு முன்னால் இருந்தது. 5 வருடங்களாக இருந்தார்கள், இதையெல்லாம் நீக்கிவிட்டு தேர்தல் நடத்தியிருக்கலாம் இல்லையா? ஏன் நடத்தவில்லை? ஏன் நடத்தவில்லை? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடத்தக் கூடாது என்பதற்காகவே ஒரு வழக்கைப் போட்டுவிட்டு, ஜனநாயகத்தினுடைய கழுத்தை நெரிக்கிற வகையிலே தனி அதிகாரிகளை வைத்துக்கொண்டு நடத்தினார்களே தவிர, தேர்தல் நடத்த வேண்டும் என்கிற எண்ணம் இல்லை. இருந்திருந்தால், பண்ணியிருக்கலாம் இல்லையா? 5 வருடமாக இருந்த அரசாங்கத்தாலே முடியவில்லை. இப்போது தேர்தல் நடத்த வந்தவுடன், இதையெல்லாம் சொல்லி மறுபடியும் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். கூட்டுறவு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலை நடத்துவதற்காக இந்த வழக்கைத் திரும்பப் பெறுகிறோம். தேர்தலை நடத்தக் கூடாது என்பதற்கு வழக்கைப் போட்டார்கள். தேர்தலை நடத்துவதற்காக இந்த வழக்கை நாங்கள் திரும்பப் பெறுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சாமி. இருக்கையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமசாமி.

**திரு. டி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. குமரகுரு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பாண்டுரங்கன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*பிற்பகல் 2-00*

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.396,42,73,000/-, மூலதனக் கணக்கில் ரூ.756,68,57,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.278,72,44,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 13 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13-கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை.

திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.



**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,546,44,34,000/–, மூலதனக் கணக்கில் ரூ.36,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.300,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3–8–2006) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

10. 2004–2005 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

22. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

23. மானியக் கோரிக்கை எண் 13–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு I

*(277 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 12**
**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–**
**கூட்டுறவு கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007**

## அத்தியாயம்–1

### முன்னுரை

நம் நாட்டு மக்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றம் பெற கூட்டுறவு இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. கூட்டுறவு இயக்கம் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் பரவலாக வேரூன்றி ஆக்கபூர்வமாக சமூக மேம்பாட்டுக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரும்பங்காற்றி வருகிறது.

தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக வேளாண் கடனுக்கும், நுகர்வோர் வாணிபத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்பட்டதால், கூட்டுறவு வரலாற்றில் தமிழகம் முக்கிய இடம் வகிக்கிறது. வேளாண் வளர்ச்சி மற்றும் நுகர்வோர் சேவையில் மட்டுமின்றி தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வீட்டுவசதி, துணி நூல், பால்பண்ணை மற்றும் மீன்வளம் போன்ற துறைகளின் வளர்ச்சியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த அரசு பதவியேற்ற 13–5–2006 அன்றே பொதுமக்கள் முன்னிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஆணையிடப்பட்ட முத்தான மூன்று திட்டங்களில் இரண்டு திட்டங்கள் கூட்டுறவுத் துறை தொடர்பானது என்பதிலிருந்தே கூட்டுறவுகளுக்கு இவ்வரசு அளிக்கும் முக்கியத்துவம் புலனாகிறது. இதற்கு முன் எப்போதும் விவசாயிகளுக்கு இதுவரை எந்த அரசும் செய்திடாத அளவிற்கு, கூட்டுறவுச் சங்கங்களில் 31–3–2006 அன்று நிலுவையிலிருந்த அனைத்து விவசாயக் கடன்கள் மற்றும் அவற்றிற்கான வட்டியும் சேர்த்து மொத்தம் ரூ.6,866 கோடியினை தள்ளுபடி செய்து ஆணையிட்டு தொடர்ந்து இயற்கை சீற்றங்களால் பேரிடர்களுக்கு ஆளான பெருவாரியான விவசாயிகளைக் கடன் சுமையிலிருந்து காப்பாற்றியிருக்கிறது நம் அரசு. இதேபோல்

[2006 ஆகஸ்ட் 2

2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படும் திட்டமும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 26,429 பொது விநியோகத் திட்ட கடைகள் மூலம் செயலபடுத்தப்படுகிறது. இவ்விரு திட்டங்களையும் வெற்றிகரமாக செயல்படுத்தும் மிகப்பெரிய பொறுப்பினைக் கூட்டுறவுச் சங்கங்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது, வளர்ச்சிப் பாதையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றும் பங்குமீது அரசு கொண்டுள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

வேளாண் கடன் வழங்கல், வேளாண் விளைபொருள் விற்பனை, உரங்கள் மற்றும் இன்றியமையாப் பொருட்கள் விநியோகம் மற்றும் தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களை நெறிப்படுத்துதல் ஆகியவை கூட்டுறவுத் துறையின் முக்கிய பணிகளாகும். இவ்வாறு இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக அதன் உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் சிறப்பான சேவை வழங்க வேண்டும் என்பதும் அனைத்து வகை கூட்டுறவுகளின் செயல்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பதுமே இத்துறையின் நோக்கமாகும்.

2006–07 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட இருக்கும் கடன்களின் திட்ட இலக்கு பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1 | குறுகிய காலக் கடன்கள் | 1235.00 |
| 2 | மத்திய காலக் கடன்கள் | 70.00 |
| 3 | நீண்ட கால வேளாண் கடன்கள் | 200.00 |
| 4 | நகைக் கடன்கள் | 6000.00 |
| 5 | பண்ணை சாரா மற்றும் இதரக் கடன்கள் | 532.00 |

இத்திட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் பின்வரும் அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன.



2006 ஆகஸ்ட் 2]

# அத்தியாயம்–2

## கூட்டுறவுக் கடன், கட்டமைப்பு மற்றும் அதன் செயல்பாடுகள்

கடன் வழங்குதலில் தனி நபர்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தவும், சமுதாயத்தின் பல்வேறு மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதற்கும் ஏதுவாக கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. குறுகிய காலக் கடன் வழங்கும் கட்டமைப்பு மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராமப்புற அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் கொண்ட மூன்றடுக்காக அமைந்துள்ளது. நீண்ட காலக் கடன் கட்டமைப்பைப் பொறுத்தவரை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினையும், வட்டம்/ஊராட்சி ஒன்றிய அளவில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் கொண்டுள்ளது. சிறுநகரம் மற்றும் நகரங்களில் உள்ள மக்களுக்கான வங்கி சேவையினை கூட்டுறவு நகர வங்கிகள் அளிக்கின்றன.

### குறுகிய காலக் கடன் கட்டமைப்பு

குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை விவசாயிகளுக்கு வழங்குவதில் கூட்டுறவு வங்கிகள் ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

10–வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட குறுகிய கால, மத்திய கால மற்றும் பண்ணைசாராக் கடன்களின் விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | குறுகிய கால பயிர்க்கடன் | | விவசாய துணைத் தொழில்களுக்கான மத்திய காலக் கடன் | | பண்ணை சாரா கடன்கள் விவரம் |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | குறியீடு | சாதனை | கடன்கள் |
| 2002–03 | 1360.00 | 963.69 | 106.00 | 94.37 | 118.89 |
| 2003–04 | 1251.45 | 616.59 | 194.88 | 72.15 | 116.28 |
| 2004–05 | 1037.69 | 1080.58 | 94.37 | 50.19 | 83.93 |
| 2005–06 | 1097.50 | 1132.18 | 59.80 | 37.76 | 72.63 |

[2006 ஆகஸ்ட் 2

2006–2007 ஆம் ஆண்டில் 1,235 கோடி ரூபாய் அளவுக்கு குறுகிய காலக் கடன்கள் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலத் தலைமை வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் கீழ்க்கண்ட பத்திகளில் விவரிக்கப்படுகின்றன.

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி**

1905 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் கடன் வழங்கும் திட்டங்கள் மற்றும் கடன் வழங்குதல் குறித்த கொள்கை ஆகியவற்றை முறைப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மைக் கடன்கள் அளிப்பதற்கு ஏதுவாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு இவ்வங்கி நிதியுதவி அளிக்கிறது. விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வேளாண்சாராக் கடன்கள் வழங்கவும் இவ்வங்கி நிதியுதவிஅளிக்கிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலமாக, பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு இவ்வங்கி முக்கிய பங்கினை ஆற்றுகிறது.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள்/சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றிற்கு தவணைக் கடனும், இதர தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரடி கடனுதவியும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் அளிக்கப்படுகிறது. இவ்வங்கி சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள 43 கிளைகள் மூலமாக சென்னை நகர மக்களின் வங்கித் தேவைகளை நிறைவு செய்கிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் 53.48 கோடி ரூபாய் ஆகும். இதில் அரசு மூலதனம் 0.26 கோடி ரூபாய் ஆகும். 31–3–2006 அன்று நிலவரப்படி இவ்வங்கியின் ஒதுக்கீடுகள் 356.14 கோடி ரூபாயாகவும், வைப்புத் தொகை 3,126.00 கோடி ரூபாயாகவும் உள்ளது.

மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் அடிப்படை வசதியை வலுப்படுத்த, இவ்வங்கியின் சார்பு நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகை மூலமாக 'தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி' பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து



2006 ஆகஸ்ட் 2]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இதுவரை மொத்தம் 21.81 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்**

தற்போது மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. தம்மைச் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கும் மற்றும் ஊரக பகுதி மக்களுக்கும் சேவை செய்வதற்காக இவ்வங்கிகளின் கிளைகள் பெரும்பாலும் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தங்கள் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து தலைமை வங்கி மூலமாக பெறும் மறு நிதியுதவியைக் கொண்டும் வேளாண் தொழில்களுக்கும், வேளாண் சார்ந்த தொழில்களுக்கும் கடன் வழங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி உதவி அளிக்கின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து தலைமை வங்கி மூலமாக கடன் உதவி பெற்று மாவட்ட அளவில் தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இவ்வங்கிகள் நிதியுதவி அளிக்கின்றன.

இவ்வங்கிகள் வேளாண் சாராத் தொழில்களுக்கும், லாரிகள், பேருந்துகள், நிலசமன்செய் இயந்திரங்கள், மண்வாரும் இயந்திரங்கள் போன்றவை வாங்கவும், வீடுகட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், தொழில் கல்வி பயிலுவதற்காக கல்வி கடன்களும் அளித்து வருகின்றன. சென்னை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நகைக் கடன், சிறுவியாபாரக் கடன் மற்றும் சம்பளக் கடன் ஆகியன வழங்கி சென்னை நகர மக்களின் தேவைகளை நிறைவு செய்கிறது. இது தவிர, தனது எல்லைக்குட்பட்ட பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கடன் உதவியும் அளித்து வருகின்றது.

31–3–2006 அன்று உள்ளபடி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த பங்கு மூலதனம் ரூபாய் 526.50 கோடி ஆகும். ஒதுக்கிய நிதிகள் (Reserves) ரூபாய் 1,114.49 கோடியாகவும், வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 6,979.34 கோடியாகவும் மற்றும் நடைமுறை மூலதனம் ரூபாய் 11,061.17 கோடியாகவும் இருந்தன.

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

ஊரக விவசாய மக்களுக்கு, குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பயிர்க் கடன்கள் வழங்குவதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முக்கியமான பங்கினை ஆற்றிவருகின்றன. விவசாய நோக்கங்களுக்காக வழங்கப்படும் குறுகிய காலக் கடன்கள் பயிர் சாகுபடிக்கேற்றவாறு அதிகபட்சமாக 15 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். மத்திய காலக் கடன்கள் மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். பால்பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை அமைத்தல் போன்ற வேளாண் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள மத்திய காலக் கடன்களை இவ்வங்கிகள் வழங்கி வருகின்றன. சொந்த நபர் ஜாமீன் பேரில், சாகுபடி செய்துள்ள பயிருக்காக ரூ.1.00 இலட்சம் வரை பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. ரூ.1.00 இலட்சத்திற்கும் அதிகமாகும் கடன் தொகைக்கு சொத்து அடமானம் வைத்தோ அல்லது நகைகளை அடமானம் வைத்தோ கடன் பெற்றுக்கொள்ளலாம். மேலும், நிதி ஆதாரம் அதிகம் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், டிராக்டர், பவர்டில்லர்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கும் நிதியுதவி அளிக்கின்றன.

## விவசாயக் கடன் அட்டைத் திட்டம்

விவசாயிகளின் கடன் தேவைகளை குறிப்பிட்ட நேரத்தில் எவ்வித இடையூறுமின்றி நிறைவேற்றுவதற்காக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட விவசாயக் கடன் அட்டைத் திட்டம் இம்மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் விவசாயக் கடன் அட்டைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இதுவரை 14,61,831 விவசாயக் கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## பயிர்க் கடன் மீதான வட்டி குறைப்பு

விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் பயிர்க் கடன் வழங்கப்படவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பு குறுவை சாகுபடி காலத்திலிருந்து கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் பயிர்க் கடன்களின் மீதான வட்டியை 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக்





குறைத்து நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படும் வட்டியிழப்பை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நலிவுற்ற பிரிவினருக்குக் கடன் வழங்குதல்

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகள் போன்ற நலிவுற்ற மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்திலேயே கூட்டுறவுக் கடன் கொள்கை அமைந்துள்ளது. 5 ஏக்கர் மற்றும் அதற்கு குறைவாக உள்ள சிறு விவசாயிகளுக்கு 30 சதவீதத்திற்குக் குறையாமல் கடன் வழங்க வேண்டும் என தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி குறியீடு நிர்ணயம் செய்துள்ளது. ஆயினும் நலிந்த பிரிவினருக்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் இக்குறியீட்டிற்கு அதிகமாகவே வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து நலிவுற்ற பிரிவினருக்கு அதிகப்படியான கடன் வழங்கவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும்.

## நகைக் கடன்

மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்கள் வழங்கி வருகின்றன.

## தொழில் கடன்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், வணிக விரிவாக்கத்தின் ஒரு பங்காக, மருத்துவர்களுக்கும், பொறியாளர்களுக்கும் ரூ.100.00 இலட்சம் வரை, 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய தொழில் கடன்கள் வழங்கி வருகின்றன. பெறவுள்ள கடன் தொகையின் அடிப்படையில் தொழில் கடனுக்கான வட்டி விகிதம் 12 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை அமையும்.

## மகளிர் சிறு வணிகக் கடன்

சிறுவணிகம் செய்யும் மகளிர் சந்திக்கும் இடையூறுகளைக் களையவும், அதிக வட்டிக்கு கடன் கொடுக்கும் தனி நபர்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும் சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறு வணிகம் செய்யும் மகளிரின் கடன் தேவைகளை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன. இது மகளிருக்கு அதிகாரமளிக்கும் திட்டமென்பது குறிப்பிடத்தக்கது.

[2006 ஆகஸ்ட் 2

இத்திட்டத்தின்கீழ் பூக்கள், காய்கறிகள், பழங்கள் வியாபாரம் செய்தல் மற்றும் பெட்டிக்கடை நடத்துதல் போன்ற சிறு வணிகம் செய்யும் மகளிர், அவர்களது வணிகத் தேவைக்குத் தகுந்தவாறு 100 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை கடன் பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களுக்கான சிறு வணிகக் கடன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

**நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் சிறு வணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் கடன் உதவி வழங்கப்படும்.**

### மகளிர் தொழில்முனைவோர் கடன் திட்டம்

மகளிர் தொழில் துவங்கிட ஊக்குவிக்கும் வகையிலும், வேலை வாய்ப்புகளைப் பெருக்கிடவும் மகளிர் தொழில்முனைவோர் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மகளிர் தொழில்முனைவோர்களுக்குச் சிறுதொழில் தொடங்கவும், சேவை மையங்கள் ஆரம்பிக்கவும் 12 சதவீத வட்டியில் 60 மாதத் தவணைகளில் திரும்ப செலுத்தக்கூடிய கடனாக ரூ.10.00 இலட்சம் வரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளால் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்

பணிபுரியும் மகளிர் கடன் திட்டத்தின்கீழ், அவர்களது அவசரக் குடும்பச் செலவுகளுக்கான கடன் தேவைகளையும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூ.1.00 இலட்சம் வரை கடனாக வழங்குகின்றன. இக்கடன் 36 மாத தவணைகளில் ஆண்டுக்கு 12 சதவீத வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.



2006 ஆகஸ்ட் 2]

### பேறுகாலக் கடன் திட்டம்

வணிக நடவடிக்கைக்கு மட்டும் அல்லாது மகளிரின் உடல் நலனைப் பேணவும், குறிப்பாக பேறு காலத்தின்போது கடன் தேவைப்படுகிறது. மருந்து, ஊட்டச்சத்து, போக்குவரத்து, மருத்துவ உதவி/சிகிச்சை, தாய் மற்றும் பிறந்த குழந்தை ஆகியோரின் உடல் பரிசோதனைகள் போன்றவற்றிற்காக மகளிருக்கு உதவும் நோக்கத்துடன் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 11 சதவீதம் வட்டி வீதத்தில் ரூ.2,000/– வரை மகளிருக்குப் பேறுகாலக் கடனாக வழங்கி வருகின்றன.

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன்.

உறுப்பினரின் கடன் பெறும் தகுதி அவர் செலுத்தியுள்ள பங்குத் தொகையுடன் இணைக்கப்பட்டுள்ளதால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்குத் தொகைக் கடனாக ரூ.500/– வீதம் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையை, கடன் அனுமதிக்கப்பட்ட ஆண்டிற்கு அடுத்த ஆண்டிலிருந்து 5 ஆண்டு தவணைகளில் ரூ.100/– வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும். இதனால் மகளிர் உறுப்பினர்கள் ரூ.20,000/– வரை கூடுதலாகக் கடன் பெறுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

2006–07 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,000 மகளிர் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்க ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உடல் ஊனமுற்ற மகளிருக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன்

உடல் ஊனமுற்ற மகளிர் கடன் பெறும் திறனை உயர்த்தி, அதன்மூலம் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வட்டியில்லா பங்குத் தொகைக் கடன் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு வங்கிகளின் உடல் ஊனமுற்ற பெண் உறுப்பினர்களுக்கு 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய வட்டியில்லா பங்குத் தொகைக் கடனாக நபர் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் வழங்கப்படுகிறது. இது உடல் ஊனமுற்ற பெண் உறுப்பினர்கள் ரூ.20,000/– வரை கூடுதலாகக் கடன் வசதி பெற வழிவகுக்கிறது.

[2006 ஆகஸ்ட் 2

நடப்பாண்டில் 1,000 உடல் ஊனமுற்ற பெண் உறுப்பினர்களுக்கு பங்குத் தொகைக் கடன் வழங்க ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன்**

இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிட உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பங்குத் தொகை செலுத்தி தங்களது கடன் பெறும் திறனை அதிகரித்துக்கொள்ள நபர் ஒன்றுக்கு 250 ரூபாய் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. கடன் வழங்கப்பட்ட ஆண்டிற்கு அடுத்த ஆண்டிலிருந்து ஐந்து சம தவணைகளில் இக்கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும். இதன்மூலம் இவ்வுறுப்பினர்கள் 10,000 ரூபாய் கூடுதலாகக் கடன் பெற இயலும்.

**தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்**

இந்திய அரசால் பயிர்க் காப்பீட்டிற்காக ரபி 1999–ல் கொண்டு வரப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் காரிப் 2000–லிருந்து மாநில அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சி தாக்குதலினாலோ, நோயினாலோ அழிந்துவிடும் நிலையில், அப்பயிர்களுக்கு காப்புறுதியும் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. சாதாரணமாக காப்பீடு செய்யும் தொகை உத்திரவாத மகசூலுக்கு 100 சதவீதமும் கூடுதல் காப்பீடாக 150 சதவீதம் வரையும் காப்பீடு செய்யப்படுகிறது. கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் உள்ளடங்குவர். இத்திட்டத்தின்கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 10 சதவீதப் பிரிமியம் தொகைக்குச் சமமான மானியம் வழங்கப்படும். இம்மானியத் தொகையினை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பகிர்ந்து கொள்கின்றன. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம், பிரிமியத் தொகையைவிட அதிகமாயிருந்தால் இக்கூடுதல் தொகையை மாநில மற்றும் மத்திய அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளும். மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதி மற்றும் பயிர் குறித்து முடிவெடுக்கும்.

**நீண்ட காலக் கடன் கட்டமைப்பு**

நீண்ட காலக் கடன் வழங்கும் அமைப்பானது, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி



2006 ஆகஸ்ட் 2]

வங்கியும், வட்டம்/ஊராட்சி ஒன்றிய அளவில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் கொண்ட இரண்டு அடுக்கு கட்டமைப்பாக உள்ளது. இவ்வங்கிகள் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த செயல்பாடுகளான சிறுபாசனம், தோட்டப் பயிர் மற்றும் மலைப்பயிர் வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை வைத்தல், ஆடு வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல் மற்றும் டயர் மாட்டு வண்டிகள். டிராக்டர்கள், பவர் டில்லர்கள் வாங்குதல், குழாய் பதித்தல், கால்நடை கொட்டகை கட்டுதல், பண்ணை வீடு கட்டுதல் போன்றவைகளுக்குத் திட்ட அடிப்படையில் கடன் வழங்குகின்றன. சிறு தொழில்கள், விசைத்தறிகள், கிராமப்புற வீடு கட்டுதல், ஊரக மருத்துவமனைகள் தொடங்குதல் போன்ற பண்ணைச்சாரா திட்டங்களுக்கும் தொடக்க கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கடன் வழங்குகின்றன.

இத்திட்டங்களுக்காக கடன் வழங்கத் தேவையான நிதி ஆதாரத்தை தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சிறப்புக் கடனீட்டுப் பத்திரத்தை வெளியிடுவதன்மூலம் பெறுகிறது. மத்திய அரசு, மாநில அரசு மற்றும் நபார்டு வங்கி ஆகியன இவற்றில் முதலீடு செய்கின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, நபார்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையை உரிய காலத்தில் செலுத்தத் தவறும் பட்சத்தில், நபார்டு வங்கியினுடைய கோரிக்கையின் அடிப்படையில் ரிசர்வ் வங்கியில் உள்ள மாநில அரசு கணக்கில் ரிசர்வ் வங்கியே தன்னிச்சையாக பற்று வைத்துக்கொள்ளலாம் என்ற நபார்டு வங்கியின் நிபந்தனையை முந்தைய அரசு ஏற்றுக் கொள்ளாததால் நபார்டு வங்கியிலிருந்து மறு நிதி உதவி கிடைக்கப்பெறவில்லை. இதனால் கடந்த இரண்டாண்டுகளில் நீண்ட காலக் கடன்கள் ஏதும் வழங்கப்படவில்லை. இது குறித்து நபார்டு வங்கியுடன் கலந்தாலோசித்து இந்த ஆண்டு 200 கோடி ரூபாய் அளவிற்கு நீண்ட காலக் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

**பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்குதல்**

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், ஒரு உறுப்பினர் செலுத்திய மூலதனத்தின் 20 மடங்கு தொகையைக் கடனாக வழங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ்,

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் உள்ள பெண் உறுப்பினர்கள் பங்கு மூலதனம் செலுத்தி தங்களுடைய கடன் பெறும் திறனை அதிகரித்துக் கொள்வதற்காக அரசால் வட்டியில்லாக் கடனாக நபர் ஒன்றுக்கு ரூபாய் 1,000/– வழங்கப்படுகிறது. இதனால் பெண் உறுப்பினர்கள் கூடுதலாக ரூபாய் 20,000/– கடன் பெற வழிவகுக்கப்படுகிறது. இத்தொகை கடன் பெற்ற ஆண்டிற்கு அடுத்த ஆண்டிலிருந்து, 5 ஆண்டு தவணைகளில் ரூ.200/- வீதம் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

நடப்பாண்டில் 500 பெண் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் 5.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகரக் கூட்டுறவு வங்கிகள்**

நகர்ப்புற மக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் சுலபத் தவணை முறைகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய கடன் வழங்குவதற்காக நகர் மற்றும் சிறுநகரப் பகுதிகளில் 121 நகரக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. 31–3–2006 நிலவரப்படி அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளும் 2,391.26 கோடி ரூபாய் வைப்புத் தொகையுடன் தங்களது சொந்த நிதி ஆதாரத்தையும் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

இவ்வங்கிகள் வீடு பழுதுபார்த்தல், சிறு வணிகம், முன்கடன் தீர்வு செய்தல், குழந்தைகளின் கல்விக் கடன் போன்ற நோக்கங்களுக்காக கடன் வசதி அளிக்கின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள் தங்களது கடன் வழங்கும் கொள்கையை மாற்றியமைத்து நகைக் கடன் மட்டுமின்றி குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்குதல்**

நகரக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 500/- வீதம் வழங்கப்படுகிறது. இக்கடனை ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து அடுத்த ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 100/- வீதம் 5 தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.



**மகளிர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் வழங்குதல்**

நகரக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் உறுப்பினர்கள் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க அரசு வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக நபர் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் வழங்குகிறது. இக்கடன் 5 ஆண்டு தவணைகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 100 வீதம் திரும்பச் செலுத்த வேண்டும்.

நடப்பு ஆண்டில் 1,000 உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் 5.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி**

கூட்டுறவுச் சங்கங்களில் 31–3–2006 அன்று நிலுவையிலிருந்த அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்தது மாண்புமிகு முதல்வர் தலைமையிலான இப்புதிய அரசின் மகத்தான சாதனையாகும். இக்கடன்கள் தொடர்பாக எவ்வித வசூல் நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது எனவும், 31–3–2006 ஆம் தேதியன்று நிலுவையிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட கடன்தாரர்களுக்குக் கடன் தள்ளுபடி சான்றிதழ் வழங்க வேண்டும் எனவும் அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

26–7–2006 வரை 5,415.82 கோடி ரூபாய்க்கான 2,19,093 கடன் கணக்குகளுக்குக் கடன் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடன் தள்ளுபடியின் விளைவாக கூட்டுறவு வங்கிகள் நபார்டு வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூ.1,668/– கோடி அளவிற்கான கடன் பொறுப்புகளை இவ்வரசே முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வகையில் 2006–2007–க்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.435 கோடி அள்விற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கடன் தள்ளுபடியால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டவும், விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்யவும், இந்த ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்த திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் மொத்தத்தில் 1,435 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள தொகைக்கும் அதன் மீதான வட்டிக்கும் தேவையான ஒதுக்கீடுகள் செய்வதன்மூலம் விவசாயிகள் தொடர்ந்து பயிர்க் கடன்

[2006 ஆகஸ்ட் 2

பெறுவதும், இவ்வங்கிகளின் வைப்பீட்டாளர்கள் மற்றும் பணிபுரிபவர்களின் நலன் பாதுகாக்கப்படுவதும் உறுதி செய்யப்படும்.

கூட்டுறவு வங்கியின் கடன் தள்ளுபடி திட்டத்தை அமல்படுத்தவும், தள்ளுபடி செய்த கடன்களுக்கான கணக்குகளைப் பராமரித்தல் குறித்தும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கீழ்க்கண்ட வகையான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன:—

(1) குறுகிய கால பயிர்க் கடன்கள்

(2) நகையீட்டின் பேரில் விவசாய நோக்கத்திற்காக வழங்கப்பட்ட பயிர்க் கடன்கள்

(3) மத்திய காலக் கடனாக மாற்றப்பட்ட குறுகிய கால பயிர்க் கடன்கள்

(4) மத்திய காலக் கடனாக அட்டவணைப்படுத்தப்பட்ட குறுகிய கால பயிர்க் கடன்கள்

(5) மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்டு/மறு மாற்றியமைக்கப்பட்டு பின்னர் தனிக் கடனாக முடக்கப்பட்ட வேளாண் கடன்கள்

(6) வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு வழங்கப்பட்ட மத்திய காலக் கடன்கள்

(7) பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன்கள்

கடன் தள்ளுபடித் திட்டத்தின் பயன் தகுதியான விவசாயிகளுக்கு மட்டுமே சென்றடைய வேண்டும் என்பதை அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வங்கிகள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் பயனாளிகளின் பட்டியலைத் தயார் செய்து, வங்கியின் வளாகத்தில் தெரியக்கூடிய அளவில் பிரசுரிக்க வேண்டும். இதனால் இத்திட்டம் வெளிப்படையான முறையில் எவ்வித பாரபட்சமும் இன்றி செயல்படுத்துவது உறுதி செய்யப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 2]

# அத்தியாயம்—3

## கூட்டுறவு விற்பனை, பதனிடல் மற்றும் பண்டகச் சேமிப்பு

### கூட்டுறவு விற்பனை

விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளை பொருட்களை நியாயமான மற்றும் ஆதாயமுள்ள விலைக்கு விற்க ஏற்பாடு செய்தல், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்குதல், வேளாண் விளை பொருட்களின் ஈட்டின்பேரில் கடன் வழங்குதல், விவசாய விளை பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்மூலம் விவசாயக் கடன்களை வசூலிக்க உதவுதல் ஆகியவை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அடிப்படை நோக்கங்களாகும்.

இந்த நோக்கங்கள் தமிழ்நாட்டில் இயங்கும் 114 தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் நிறைவு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் செயல்படும் அனைத்துக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு தலைமைச் சங்கமாகவும் செயல்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகத்தில் ஒரு முக்கிய பங்காற்றி வருகிறது. இந்த இணையம் 28,140 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 39 கிடங்குகளைச் சொந்தமாகவும், 3,460 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 9 வாடகைக் கிடங்குகளையும் வைத்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சென்னையில் இரண்டு குளிர்பதனக் கிடங்குகளைப் பராமரித்து வருகிறது. அதில் 2,500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட குளிர்பதனக் கிடங்கு கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்திலும், 1,250 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட குளிர்பதனக் கிடங்கு பேசின் பிரிட்ஜிலும் உள்ளது.

[2006 ஆகஸ்ட் 2

இந்த இணையம் விளை பொருட்களுக்கு ஆதரவு விலைகளை வழங்குதலில் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாட்டில் செயல்படுகிறது. மேலும், இந்த இணையம் திருவாரூர் மாவட்டத்தில் பாமணியில் ஒரு உரக்கலவை ஆலையை நடத்தி வருகிறது.

**வேளாண் விளை பொருட்கள் விற்பனை**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அவற்றின் விவசாய உறுப்பினர்கள் தங்களது வேளாண் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு உதவி புரிகின்றன. அவை உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகின்றன.

**விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றவர்களின் விளை பொருட்களை விற்பனை செய்ய கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வசதி செய்கின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் விளை பொருட்களை விவசாயிகள் அதிக இலாபம் பெறும் வகையில் அவர்கள் ஒத்துக் கொள்ளக் கூடிய விலைக்கு பகிரங்க ஏலம்மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்விதம் பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேர வேண்டிய கடன் தொகைகளைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்குச் செலுத்தப்படுகிறது.

**இதரப் பணிகள்**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளின் விளை பொருட்களை ஆதாயமுள்ள விலைக்குப் பெற்று, அவற்றை கூட்டுறவு பண்டகசாலைகள்மூலம் நியாயமான விலையில் நுகர்வோர்கள் வாங்க வழிவகுக்கின்றன.

விவசாய உறுப்பினர்கள் அவர்களுடைய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரை அவற்றை ஈடாக வைத்து சரக்கீட்டுக் கடன்பெற கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வழிவகை செய்கின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வேளாண் இடுபொருட்களான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள்



[redacted]06 ஆகஸ்ட் 2]

ஆகியவற்றை அவர்களுடைய உறுப்பினர்களுக்கு வழங்குகின்றன. விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிர்க் கடனில் இவ்வகை இடுபொருட்கள் ஒரு பகுதியாக வழங்கப்படுகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் பதனிடும் அலகுகள் விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் பதனிடும் வசதிகளை அளிக்கின்றன.

[2006 ஆகஸ்ட்

## அத்தியாயம்–4

### நுகர்வோர் கூட்டுறவு

**அமைப்பு**

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு கட்டமைப்பானது, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தை மாநில அளவிலும், மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை மாவட்ட அளவிலும், தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் தொடக்க நிலையிலும் கொண்ட ஒரு மூன்றடுக்கு அமைப்பாகும்.

**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பட்டாசு, காகிதம் போன்ற பொருட்களைக் கொள்முதல் செய்து மாவட்டக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் மற்றும் அச்சகங்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

**கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்**

மாநிலத்திலுள்ள 34 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்களாகச் செயல்பட்டு பொது விநியோகத் திட்டத்தில் இன்றியமையாத பங்காற்றுகின்றன. அவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிட்டங்கியிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று, தமது சொந்தக் கடைகள் மூலமாகவும் மற்றும் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலமாகவும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்கின்றன.

**தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்**

இம்மாநிலத்தில், மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், பணியாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றுமுள்ள இதர தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட 3,324 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளன. இந்தத் தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தரமுள்ள நுகர்வோர் பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பணியைச்



2006 ஆகஸ்ட் 2]

செய்கின்றன. மேலும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் அங்காடிகளாகவும் செயல்படுகின்றன.

[2006 ஆகஸ்ட் 2

# அத்தியாயம்–5

## பொது விநியோகத் திட்டம்

உணவுப் பாதுகாப்பை தனது நாட்டு மக்களுக்கு உறுதி செய்தல் என்பது ஒரு மக்கள் நல அரசின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். தரமான அரிசி அனைத்து மக்களுக்கும், குறிப்பாக ஏழை எளிய மற்றும் அடித்தள மக்களுக்கு அவர்கள் வாங்கக்கூடிய விலையில் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் விநியோகம் செய்வதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு, தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்றே பொது விநியோகத் திட்டம் மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின்கீழ் வழங்கும் அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 2/- எனக் குறைத்து ஆணையிட்டு, 3-6-2006 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், பொது விநியோகத் திட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் 1.68 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 21,660 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது தவிர, மிகவும் உள்ளடங்கிய மற்றும் அணுக முடியாத பகுதிகளுக்கும் சேவை செய்வதற்காக 4,769 பகுதி நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 36 நடமாடும் நியாய விலைக் கடைகளும் கூட்டுறவுச் சங்கங்களால் இயக்கப்பட்டு வருகின்றன. மகளிர் மற்றும் சுய உதவிக் குழுக்களால் 591 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மண்ணெண்ணெய் வழங்குவதற்காக 266 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்களால் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 35 கிலோ அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் 15.41 இலட்சம் மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளின் மூலமாக இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள்.



2006 ஆகஸ்ட் 2]

### மகளிர் நியாய விலைக் கடைகள்

மகளிர் மேம்பாட்டுக்கும் மற்றும் அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சில நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் இயங்கும் மகளிர் சுய உதவிக் குழுவிடம் ஒப்படைக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது. 30-6-2006 அன்று நிலவரப்படி, இம்மாநிலத்தில் 591 நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

### நியாய விலைக் கடைகளுக்கு நவீன மின்னணு தராசு அளித்தல்

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை சரியான எடையில் வழங்கும் பொருட்டும் எடைக் குறைவைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் நவீன மின்னணு தராசு படிப்படியாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில் 100 இலட்சம் ரூபாய் செலவில் 2,000 நியாய விலைக் கடைகளுக்கு நவீன மின்னணு தராசு வழங்கப்படும்.

### நியாய விலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் பேரல்கள் வாங்க நிதியுதவி

நியாய விலைக் கடைகள் மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகளிடமிருந்து பேரல்கள் மூலமாக மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகின்றன. இந்த பேரல்கள் அவ்வப்போது மாற்றவேண்டியது அவசியமாகிறது. மண்ணெண்ணெய் பேரல்கள் கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளுக்கு அளிப்பதற்காக 35.00 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை கணினிமயமாக்குதல்

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் படிப்படியாக கணினிமயமாக்கப்படும்.

### கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை

கிராமப்புற தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 10 வகையான காதி பொருட்கள் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு அவர்களால் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க

ஆவன செய்யும் பொருட்டு இன்கோசர்வ் நிறுவனம் தயாரிக்கும் தேயிலைத் தூள் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

அயோடின் சத்துக் குறைவால், குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் பொருட்டு, அயோடின் கலந்த உப்பு கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.





# அத்தியாயம்—6

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவிலும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மாவட்ட அளவிலும் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

### கூட்டுறவுப் பயிற்சி

கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் பணியாளர்கள் கூட்டுறவு மேலாண்மை மற்றும் நிர்வாகத்தில் உயர்நிலையினை அடைவதற்கு அவர்களின் செயல் திறமையினை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இந்தப் பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மை, குறுகியகால கணினி மற்றும் நகை மதிப்பீடு ஆகியவற்றிற்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. இத்துடன் வேலைவாய்ப்பு மற்றும் தேவை அடிப்படையிலான குறுகிய காலப் பயிற்சிகளும், கூட்டுறவுப் பணியாளர்களுக்கான பயிற்சிகளும் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலையங்கள் நடத்தி வருகின்றன. தேவையான கூட்டுறவுப் பயிற்சி பெறாத கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக் கல்வியையும் இவை நடத்தி வருகின்றன.

### கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி

கூட்டுறவு மேலாண்மை உயர் பட்டயப் பயிற்சி வழங்க இரண்டு பயிற்சி நிலையங்கள், ஒன்று சென்னையிலும் மற்றொன்று மதுரையிலும் உள்ளன.

### தொழிற் கல்வி

வேலையில்லா இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பை உருவாக்கும்பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் சராசரியாக 280 மாணவர்கள்

தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடியில் கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

### கூட்டுறவு ஆராய்ச்சி

கூட்டுறவுத் துறையில் புதுமையான யுக்திகளை ஊக்குவிக்கும்பொருட்டு சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சம் வைப்பீடு செய்து தனி நிதியம் ஒன்றைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஏற்படுத்தியுள்ளது. இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு கூட்டுறவில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதி ஆகிய இரு நிதிகளைப் பராமரித்து வருகிறது.

இலாபத்தில் செயல்படும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் நிகர இலாபத்தில் 3 சதவீதம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், 2 சதவீதம் கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் செலுத்த வேண்டும். இந்நிதி கூட்டுறவு இயக்கங்களின் ஆராய்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், கல்விக்கும், பயிற்சிக்கும், கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



# அத்தியாயம்–7

## தனிவகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

### கூட்டுறவு அச்சகங்கள்

தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ள 26 கூட்டுறவு அச்சகங்களும் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு, அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்கள் 12,688 உறுப்பினர்களுடன், 2.05 கோடி ரூபாய் பங்கு மூலதனத்துடன் இயங்கி வருகின்றன.

### உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உப்பு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்

வறுமை நிலையில் உள்ள உப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் உப்புத் தொழிலாளர்களின் கூட்டுறவு உப்பு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 11 கூட்டுறவு உப்பு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

### பிற தனி வகைச் சங்கங்கள்

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்தி மேன்மையடையச் செய்யும் வகையில் 6 முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களும், 3 சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதிலும் 34 கூட்டுறவு அருந்தகங்கள் (Canteen) இயங்கி வருகின்றன.

தகவல் தொடர்பு முறை பல்வேறு மாற்றங்களுடன் புதிய சகாப்தத்தை படைத்து வருகிறது. இம்மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில், சென்னையில் புதிய தனி வகைச் சங்கமாக "சென்னை துரித தபால் பட்டுவாடா கூட்டுறவுச் சங்கம்" தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே இடைத் தரகர்களை நீக்கி அதன்மூலம் நிர்வாகத்திடமிருந்து தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிய பயன்களை

[2006 ஆகஸ்ட் 2

முழுமையாகப் பெறும் வகையில் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது 34,325 உறுப்பினர்களுடன் 113 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

**மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு**

மலைவாழ் பழங்குடியினருக்கு நலம் பயக்கின்ற வகையில் தற்போது தமிழகத்தில் 19 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த 79,370 நபர்களும், மலைவாழ் பழங்குடியினரல்லாத 7,248 நபர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இச்சங்கங்கள் பழங்குடியினருக்கு விவசாயம் மற்றும் பிற உற்பத்திச் செலவினங்களுக்காக வட்டியில்லாக் கடன்களை வழங்குகின்றன. பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவியை அளித்து வருகின்றது. இப்பெரும் பலநோக்குச் சங்கங்களுக்கு பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து மானியம், ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகனப் பராமரிப்பு மானியம் போன்ற இனங்களுக்கு பழங்குடியினர் உதவித் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் தொடர்ந்து மானிய நிதியுதவியை அரசு அளித்து வருகின்றது.



2006 ஆகஸ்ட் 2]

## அத்தியாயம்–8

### ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பால்பண்ணை, கைத்தறி மற்றும் ஊரகத் தொழில் போன்றவைகளுக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின்மூலம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுக்கோப்பாக அனைத்து நிலைகளிலும் மேம்படுத்தவும் கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவை ஏற்படுத்தி அவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இத்திட்டம் வழிவகுக்கிறது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடன் நிதியுதவியைப் பெற்று ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டம் ஐந்தாண்டு கால அளவில் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தமிழ்நாட்டில் பின்வரும் 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | | தொகை |
|---|---|---|---|
| 1 | விருதுநகர் | | 862.51 |
| 2<br>3 | கடலூர்<br>விழுப்புரம் | ஒருங்கிணைந்த தென் ஆற்காடு மாவட்டம் | 1506.97 |
| 4 | கோயம்புத்தூர் | | 1080.99 |
| 5 | தர்மபுரி | | 1160.25 |
| 6 | திருவண்ணாமலை | | 816.58 |
| 7 | காஞ்சீபுரம் | | 1123.88 |
| 8 | இராமநாதபுரம் | | 687.03 |
| | மொத்தம் | | 7238.21 |

[2006 ஆகஸ்ட் 2

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தற்போது ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்ட மதிப்பீடு மற்றும் விடுவிக்கப்பட்ட தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | அரசால் விடுவிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | 1216.98 | 1072.62 |
| 2 | தஞ்சாவூர் | 1101.09 | 969.13 |
| 3 | பெரம்பலூர் | 937.81 | 836.20 |
| 4 | திருவாரூர் | 1222.44 | 1079.77 |
| 5 | தேனி | 987.73 | 246.24 |
| 6 | தூத்துக்குடி | 942.08 | 234.41 |
| | மொத்தம் | 6408.13 | 4438.37 |

சேலம், ஈரோடு, மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி திட்ட அறிக்கைகளுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதலளித்த பின்பு இத்திட்டம் அந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். எஞ்சியுள்ள மாவட்டங்களில் (சென்னை தவிர) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை படிப்படியாக அடுத்த மூன்றாண்டுகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 2]

## அத்தியாயம்–9

## கூட்டுறவுத் தேர்தல்கள்

கூட்டுறவுகள் அதன் உறுப்பினர்களால் அவர்களின் பொருளாதார மேம்பாம்பாட்டிற்காக நடத்தப்படும் மக்களின் அமைப்பாகும். இதன்படி கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தினை நடத்திடுவதற்கான பொறுப்பு நிர்வாகக் குழுவிற்கு உள்ளதால் நிர்வாகக் குழுவிற்கான தேர்தலை காலமுறையில் நடத்திட வேண்டியது இன்றியமையாததாகிறது. கூட்டுறவுகளுக்கான தேர்தல் 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் அப்போதைய அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களை ஒட்டுமொத்தமாகக் கலைத்து விட்டு, அச்சங்கங்களின் நிர்வாகத்தினை நடத்திட தனி அலுவலர்களை நியமித்தது. அவ்வாறு நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு தற்போது தொடக்கச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் 24-11-2006 வரையிலும், மத்திய மற்றும் தலைமைச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் 25-11-2006 வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அப்போதைய அரசு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் பிரிவு 89 (A) என்ற புதிய பிரிவினைச் சேர்த்து, 2001 ஜுன் திங்களில் ஓர் அவசர சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன்படி தனி அலுவலர்கள் மேற்படி சட்டப் பிரிவு 21-ன்கீழ் உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் பெற்றவராயினர். இப்புதிய சட்டப் பிரிவினை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு வழக்கு மன்றம் (Full Bench) 20-12-2005 தேதியிட்ட உத்தரவில் புதிதாகச் சேர்க்கப்பட்ட சட்டப் பிரிவு 89 (A) செல்லாது என மேற்படி நீதிப்பேராணை மனுக்களில் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தின் மேற்படி உத்திரவினை எதிர்த்து முந்தைய அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. தற்போதைய அரசு முறைப்படி தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சங்கங்களின் நிர்வாகத்தினை நடத்திட வேண்டும் என்பதில் உறுதியான எண்ணத்தைக் கொண்டுள்ளது. எனவே, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள மேல்முறையீட்டு வழக்கினை திரும்பப் பெற்று,

*உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி 25-5-2001-க்கு முன்னதாக உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில், கூட்டுறவுகளுக்குத் தேர்தல் நடத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*





## இணைப்பு II

*(278 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 13

### கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-
### உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு
### கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

## அத்தியாயம்-I

### முகவுரை

பொது விநியோகத் திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்தி தமிழக மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்குவதும், நுகர்வோர் நலனைப் பேணிக்காப்பதுவும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அடிப்படை நோக்கங்களாகும். ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள் ஆகியோரின் உள்ளம் மகிழத்தக்கவகையில், ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களான அரிசி, கோதுமை மற்றும் ஏனைய பொருட்களை நியாய விலைக் கடைகள்மூலம் மானிய விலையில் வழங்குவதே பொது விநியோகத் திட்டத்தின் தலையாய பணியாகும். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டு அனைவரும் எளிதாக அணுகக்கூடிய வகையில் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பெற்று குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், வாழும் பகுதி நகர்ப்புறமா அல்லது கிராமப்புறமா என்பதைப் பொறுத்தும், ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட வேண்டிய அத்தியாவசியப் பொருட்களின் அளவு அரசால் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் எடை குறைவில்லாமலும் அரசு நிர்ணயித்துள்ள விலையிலும் தரமான அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். தரம் வாய்ந்த பொருட்களை போதுமான அளவு கையிருப்பு வைத்து சிறப்பான சேவை செய்தால் மட்டுமே பொது விநியோகத்

சேவை செய்தால் மட்டுமே பொது விநியோகத் திட்டத்தின் சீரிய நோக்கத்தினை அடைய இயலும்.

கடந்த பல ஆண்டுகளாக நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலனை மேம்படுத்தும் பணிகளில் இத்துறை ஈடுபாட்டோடு பணியாற்றி வருகிறது. நுகர்வோர் விழிப்புணர்வினை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் நுகர்வோரின் குறைகளைக் களைவதற்கான அமைப்புகளை மேம்படுத்திக் குறைகளைக் களைவதும் இத்துறையின் சீரிய நோக்கங்களாகும்.





## அத்தியாயம்-II

## பொது விநியோகத் திட்டம்

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். நமது மாநிலத்தில் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மத்திய அரசு பின்பற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பயன்தரும் பொது விநியோகத் திட்டத்திற்குப் பதிலாக அனைத்துத் தரப்பினரும் பயன்பெறத்தக்க பொது விநியோகத் திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பயன் தரும் பொது விநியோகத் திட்டத்தின்படி, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகள், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் பொருட்களின் விலைகளைவிட குறைவாக நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் நமது மாநிலத்தில் அனைத்துத் தரப்பினரும் பயன்பெறத்தக்கவகையில் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவை என்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவை என்றும் பிரிக்காமல், பாகுபாடின்றி ஒரே விலையில் இன்றியமையாப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள்

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் இதர இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள், அவற்றின் விலை மற்றும் அளவு பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

[2006 ஆகஸ்ட் 2

| வ. எண் (1) | பொருள் (2) | கிலோ/ விலை (3) | வழங்கப்படும் பொருட்களின் அளவு (4) |
|---|---|---|---|
| 1 | அரிசி | 3-6-2006 முதல் ஒரு கிலோ அரிசி ரூ.2.00/- | ஒரு குடும்ப அட்டைக்கு, வயது வந்த ஒருவருக்கு நான்கு கிலோ மற்றும் ஒரு குழந்தைக்கு இரண்டு கிலோ. மாதத்துக்கு குறைந்தபட்சம் 12 கிலோ, அதிகபட்சம் 20 கிலோ. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குறைந்தபட்சம் 16 கிலோ, அதிகபட்சம் 24 கிலோ. |
| 2 | சர்க்கரை | ரூ.13.50 | ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக 2 கிலோ. |
| 3 | கோதுமை | ரூ. 7.50 | சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதத்துக்கு 10 கிலோ. மற்ற பகுதிகளில் 5 கிலோ. |
| 4 | மண்ணெண்ணெய் | ஒரு லிட்டரின் விலை ரூ. 8.40-லிருந்து ரூ.9.00 வரை | |

(லிட்டரில்)

| இடங்கள் | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
|---|---|---|
| சென்னை மாநகரம் மற்றும் மாவட்டத் தலைமையிடங்கள் | 10 | 3 |
| ஏனைய நகராட்சிகள் | 6 | 3 |
| சிறப்பு ஊராட்சிகள் | 5 | 3 |
| ஊரகப் பகுதிகள் | 3 | 3 |



2006 ஆகஸ்ட் 2]

| நீலகிரி மாவட்டம் | | |
|---|---|---|
| மாவட்டத் தலைமையிடம், ஏனைய நகராட்சிகள் | 15 | 3 |
| சிறப்பு ஊராட்சிகள் | 10 | 3 |
| கிராமப் பகுதிகள் | 5 | 3 |

**பொது விநியோகத் திட்டத்தை எல்லோரும் அணுகத்தக்கவகையில் மேம்படுத்துதல்**

அனைத்துத் தரப்பினருக்கும் பொது விநியோகத் திட்டத்தில் பொருட்கள் கிடைக்க உறுதி செய்வது, அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப் அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் நியாய விலைக் கடையின் தூரத்தையும் பொறுத்தே அமைகிறது. இம்மாநிலத்தில் குடும்ப அட்டைகள் வழங்கப்படுவது அட்டைதாரர்களின் விருப்பத்தைப் பொறுத்து இருப்பதால் பெரும்பாலான குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியையே வாங்க விரும்புகிறார்கள். அரிசி வாங்க விரும்புகிறவர்களுக்கு பச்சை வண்ண குடும்ப அட்டைகளும், சர்க்கரை மட்டும் அல்லது எந்தப் பொருளும் வாங்க விரும்பாதவர்களுக்கு வெள்ளை நிற குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டு உள்ளன. வெள்ளை நிற குடும்ப அட்டை வைத்துள்ளவர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் மாதம் ஒன்றுக்கு 3 கிலோ சர்க்கரை கூடுதலாக பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

**தமிழ்நாட்டில் 30-4-2006 அன்று புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் விவரம் வருமாறு:-**

| வ. எண் (1) | அட்டை வகைகள் (2) | பெற தகுதியுடைய பொருட்கள் (3) | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|
| 1 | பச்சை நிற அட்டைகள் | அனைத்து பொருட்கள் | 1,78,00,240 |
| 2 | வெள்ளை நிற அட்டைகள் (சர்க்கரை அட்டைகள்) | சர்க்கரை | 10,12,060 |

[2006 ஆகஸ்ட் 2

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 | காக்கி நிற அட்டைகள் (காவலர் அட்டைகள்) | மண்ணெண்ணெய் | 38,699 |
| 4 | கௌரவ அட்டைகள் (None Cards) | எந்தப் பொருளும் வாங்காதவர்கள் | 51,331 |
| | மொத்தம் | | 1,89,02,330 |

தகுதிவாய்ந்த குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்குவது என்பது தொடர் நடவடிக்கையாகும். எனவே, குடும்ப அட்டைகள் வேண்டி பெறப்படும் மனுக்கள்மீது துரித ஆய்வு மேற்கொண்டு காலதாமதம் ஏதும் இல்லாமல் அவை வழங்கப்பட வேண்டுமென அரசு தேவையான அறிவுரைகள் வழங்கியுள்ளது. அதே நேரத்தில் போலி அட்டைகளைக் களையவும் வெளிச் சந்தையில் இப்பொருட்களை தீய சக்திகள் விற்பனை செய்வதைத் தடுக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கிராம மற்றும் ஒரு நகர்ப்புற நியாய விலைக் கடை தேர்ந்தெடுக்கப்பட்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைகளும் ஆய்வுசெய்து சரிபார்க்கப்பட்டு போலி அட்டைகளை களைவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முன்னோடித் திட்டத்தின்மூலம் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், தேவையிருப்பின், புழக்கத்தில் உள்ள எல்லா குடும்ப அட்டைகளின் விவரங்களையும் ஆய்வு செய்து சரிபார்க்க விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் மற்ற உன்னதமான அம்சம், அனைத்து நியாய விலைக் கடைகளையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மட்டுமே நடத்துவதாகும். தனியார் இம்மாநிலத்தில் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. 30-6-2006 அன்று



2006 ஆகஸ்ட் 2]

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் நியாய விலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | முகவர் | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1091 | 63 | 1154 |
| 2. | கூட்டுறவுச் சங்கங்கள் | 21660 | 4769 | 26429 |
| 3. | மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் (மீன் வளம் மற்றும் மலைத் தோட்ட சங்கங்கள்) | 152 | 13 | 165 |
| 4. | மகளிர் நியாய விலைக் கடைகள் (மகளிர் சுயஉதவிக் குழுக்களையும் சேர்த்து) | 418 | 173 | 591 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நடமாடும் நியாய விலைக் கடைகள் | 36 | 0 | 36 |
| | மொத்தம் | 23357 | 5018 | 28375 |

குறைந்தபட்சம் ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு நியாய விலைக் கடையாவது இருக்க வேண்டும் என்பது இவ்வரசின் நோக்கமாகும். நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் 1000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 அட்டைகளுக்குக் குறையாமலும் ஒரு நியாய விலைக் கடையில் இணைக்க வேண்டுமென்றும், கிராமப்புறங்களில் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் 500 அட்டைகளுக்குக் குறையாமலும் ஒரு கடையில் இணைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அட்டைதாரர்கள் பொருட்களைப் பெறுவதற்கு 2 கி.மீ.-க்கு மேல் செல்வதற்கு அவசியம் இல்லாத வகையில் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் நன்மைக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி பகுதி நேர நியாய விலைக் கடைகளைத்

திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடியதாகவும், நம்பகத்தன்மை உள்ளதாகவும் ஒரு ஆய்வில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கான விதிமுறைகளைத் தளர்த்தி, 150 குடும்ப அட்டைகளே உள்ள கிராமங்களிலும், அவை தற்போதைய நியாய விலைக் கடையிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவில் இருந்தால், புதிதாக பகுதி நேரக் கடை திறக்கப்படும்.

**பொது விநியோகத் திட்டத்தில் எல்லா இன்றியமையாப் பொருட்களும் கிடைப்பதை உறுதிப்படுத்துவது**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது அரிசி மற்றும் கோதுமையை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து பெற்று அதனுடைய கிடங்குகளில் சேமித்து வைத்து, தேவைப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீட்டின்படி வழங்குகின்ற மொத்த விற்பனையாளராக செயல்படுகின்றது. பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான சர்க்கரையினை, சர்க்கரை ஆலைகளில் இருந்து மத்திய அரசின் ஒதுக்கீடாக பெற்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்கள், மண்ணெண்ணெயினை மொத்த முகவருடைய வைப்பு முனையிலிருந்து எடுத்துப் பீப்பாய்கள்மூலம் நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்கின்றன. சில இடங்களில் மண்ணெண்ணெய் மொத்த முகவர், இதனை டேங்கர்மூலம் எடுத்துச் சென்று, நியாய விலைக் கடைகளில் உள்ள பீப்பாய்களில் நிரப்பி வழங்குகின்றார்கள்.

பொது விநியோகத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள 4,540 இணைப்பு கூட்டுறவுச் சங்கங்கள், 86 முன்னணி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 434 சுய சார்பு கூட்டுறவுச் சங்கங்கள், ஆகிய 5,060 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்தும் 26,429 கடைகள்மூலம் இன்றியமையாப் பொருட்களை அட்டைதாரர்களுக்கு வழங்குகின்ற முக்கியமான பணியினைச் செய்கின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களுக்குத் தேவைப்படும் நிதி உதவியினை கூட்டுறவு வங்கிகள் கடனாக வழங்குகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொருளாதார ரீதியாக நலிவடைந்த நிலையிலிருக்கும் ஒரு சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு



சரியான நேரத்தில் கொண்டு செல்வதற்காக கடன் அடிப்படையில் பொருட்களை வழங்குகிறது.

நுகர்பொருள் வழங்கல் ஆணையர் தலைமையில் இயங்கும் இத்துறையின் அலுவலர்கள் செய்யும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வு செய்யப்படுகின்றன. மாவட்ட ஆட்சியர்கள், நுகர் பொருள் வழங்கல் அலுவலர்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் இப்பணிகளை மேற்பார்வையிட்டு ஒதுக்கீடுகளின்படி அனைத்து அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதையும் நியாய விலைக் கடைகளில் போதுமான இருப்பு உள்ளதா என்பதையும் கண்காணிக்கின்றனர்.

[2006 ஆகஸ்ட் 2

# அத்தியாயம்–III

## பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி விநியோகித்தல் மற்றும் கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம்

தமிழக மக்களின் முக்கிய உணவு அரிசி ஆகும். அதனால் தமிழக அரசு நியாய விலைக் கடைகளின்மூலம் தரமான அரிசியினை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்கின்ற சீரிய நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்ற மறு நிமிடமே முதல் கையெழுத்தாக கிலோ அரிசி ரூபாய் 2-க்கு வழங்கும் திட்டத்திற்கு அனுமதியளித்து, இத்திட்டம் 3–6–2006 முதல் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அமல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். இதன்படி சென்னை நகரில் ஆயிரம் விளக்கு தொகுதியின் 'திரு.வி.க.குடில்' பகுதியில் 3–6–2006 அன்று தனது திருக்கரத்தால் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மத்திய அரசின் நலத்திட்டமான அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் ஏழை மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையைவிட இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி விலை மிகக் குறைவு. இந்தியத் திருநாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் மிகக் குறைந்த விலையில் அரிசி நியாய விலைக் கடைகள்மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது தமிழ்நாட்டில் பஞ்சம், பட்டினி ஆகியவற்றை அறவே ஒழித்து ஏழை எளிய மக்களின் துன்பத்தினையும், துயரினையும் நீக்கும் தொலைநோக்குப் பார்வைகொண்ட தமிழக முதல்வரின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாகும்.

30–4–2006 அன்று மொத்தம் 1,78,00,240 குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவர். இதில் 18,64,600 குடும்பங்கள் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர். பொது விநியோகத் திட்டம் மற்றும் மத்திய அரசின் நலத்திட்டமான அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் ஆகியவற்றின்கீழ் வழங்குவதற்காக மாதம்தோறும் சுமார் 3 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 2]

### அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்

அந்தியோதயா அன்னயோஜனா திட்டம், மத்திய அரசின் திட்டங்களில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இத்திட்டம் 1–11–2001 முதல் நகர்ப்புறங்களிலும், 1–12–2001 முதல் கிராமப்புறங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகள் கண்டறியப்பட்டு அந்தப் பயனாளிகளின் குடும்ப அட்டைகளில் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயனடையும் பயனாளிகள் என முத்திரையிடப்படுகிறது.

இவர்களுக்கு மாதந்தோறும், 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. 3–6–2006 முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை குறைக்கப்பட்டு கிலோ ஒன்றுக்கு ரூ.2/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளைத் தேர்வு செய்ததில் பல குறைபாடுகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மிகவும் வறியவர்கள் மட்டுமே பயன்பெறலாம் என்று இருந்தாலும் வறுமைக் கோட்டிற்கும் மேலே உள்ள பயனாளிகள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளவாறு அவர்களை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.**

### அரிசி கொள்முதல்

இந்திய அரசு, வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் அரிசியை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 830 என்ற விலையிலும் வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் அரிசியை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.565 என்ற விலையிலும் வழங்கி வருகிறது. மேலும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 300 என்ற விலையில் மத்திய அரசு வழங்கி வருகிறது.

இந்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழும் 1.70 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை மாதந்தோறும் ஒதுக்கீடு செய்கிறது. மேலும் 3 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை பொது விநியோகத்தில் வறுமைக் கோட்டிற்கு மேலேயுள்ள குடும்பங்களுக்கு வழங்க ஒதுக்கீடு செய்கிறது.

[2006 ஆகஸ்ட் 2

2006-2007 ஆம் ஆண்டில், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் தேவை அதிகரித்துள்ளதால், இத்தேவையை பூர்த்தி செய்ய, கூடுதலான அரிசி, மத்திய ஒதுக்கீட்டிலிருந்து எடுக்கப்படும்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விருப்பம் தெரிவித்துள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி வழங்குவதற்கு முழு ஒதுக்கீடு செய்யப்பட, போதிய அரிசி கையிருப்பு அரசிடம் உள்ளது.

தமிழக அரசு, இந்திய அரசினையும், இந்திய உணவுக் கழகத்தினையும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் தரத்தினை உயர்த்தவும், சராசரி தர வரையறைகளை சீரமைக்கவும் கேட்டுக்கொண்டுள்ளது.

**நெல் கொள்முதல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையில், விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்கிறது. இக்கொள்முதல், இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக மேற்கொள்ளப்படுவதால் 'பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம்' என்று இது அழைக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழகத்தின் முகவராக செயல்பட, தமிழக அரசு, இந்திய அரசுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செய்துள்ளது. இந்த பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம் 2002 ஆம் ஆண்டு குறுவை சாகுபடி பருவத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அது அரிசியாக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டிற்கான சம்பா சாகுபடி பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 15-7-2006 ஆம் நாளைய நிலவரப்படி 12,54,104 மெட்ரிக் டன் நெல்லினை கொள்முதல் செய்துள்ளது.

**உணவு மானியம்**

தமிழகத்தில், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையை விட மிகக் குறைவாக உள்ளது. எனவே, இதற்கென தமிழ்நாடு நுகர் பொருள்



2006 ஆகஸ்ட் 2]

வாணிபக் கழகத்திற்கு, அரசு மானியம் வழங்கி வருகிறது. 2003-2004ஆம் ஆண்டு முதல் உணவு மானியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் கோடிகளில்)

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2003-2004 | 800 |
| 2004-2005 | 1,035 |
| 2005-2006 | 1,200 |
| 2006-2007 | 1,950 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) |

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையை வெகுவாக குறைத்ததாலும், வழங்கப்படும் அரிசியின் அளவு அதிகரித்துள்ளதாலும், உணவிற்கான மானியம் 2006-2007-ல் கூடும் என்பதாலும் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.1,950 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 2

## அத்தியாயம்—IV

### பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் வழங்குதல்

இம்மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி மட்டுமின்றி கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**கோதுமை**

பொது விநியோகத்தில் வழங்குவதற்கு மாதந்தோறும் சராசரியாக 6,000 மெ.டன் கோதுமை தேவைப்படுகிறது. ஆனால், தற்போது ஜூன் 2006-லிருந்து மத்திய அரசு, கோதுமை ஒதுக்கீட்டை 3,783 மெட்ரிக் டன்களாகக் குறைத்துள்ளது. இவ்வாறு குறைத்து வழங்கப்படும் கோதுமையின் அளவானது இம்மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லாததால் இந்நிலை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு கூடுதல் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. தற்போது கோதுமை, கிலோ ஒன்றுக்கு ரூபாய் 7.50 என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**சர்க்கரை**

மத்திய அரசு மாதந்தோறும் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகி வரும் சர்க்கரையின் அளவினைப் பொறுத்து மாதாந்திர திட்டத்தின் அடிப்படையில், சர்க்கரையினை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பமொன்றுக்கு, மாதம் 2 கிலோவுக்கு மிகாமல், நபர் ஒன்றுக்கு 500 கிராம் என்ற அளவில் கணக்கிடப்பட்டு கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 என்ற விலையில் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.

அரிசிக்குப் பதிலாக சர்க்கரையினைப் பெற விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்கப்படுகிறது. 30–4–2006 அன்று இத்தகைய சர்க்கரை அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 10,12,060 ஆக இருந்தது.

தற்பொழுது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் அடிப்படையில் தேவைப்படும் மாதாந்திர சர்க்கரையின் அளவு,



2006 ஆகஸ்ட் 2]

36,345 டன்னாகும். 2005-ல் சராசரியாக நுகர்வு செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 26,377 மெட்ரிக் டன்களாகும்.

ஜூலை 2005 வரை மத்திய அரசு 10,830 மெட்ரிக் டன் சர்க்கரையை மாதந்தோறும் ஒதுக்கீடு செய்து வந்தது. அதன்பின் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் சர்க்கரையின் அளவு படிப்படியாகக் குறைந்து டிசம்பர் 2005–ல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு மட்டும் 5753.5 மெ.டன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருந்தபோதிலும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையினை வழங்குவதற்கு இம்மாநில அரசு தீர்மானித்துள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவு இணையத்திலிருந்து வெளிச் சந்தை விலையில் சர்க்கரையினை கொள்முதல் செய்து இப்பற்றாக்குறையினை ஈடுசெய்கிறது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த லெவி சர்க்கரையின் அளவு குறைந்த காரணத்தினாலும், நுகர்வு செய்யப்படும் சர்க்கரையின் அளவு உயர்ந்துள்ளதாலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், சர்க்கரை விநியோகத்திற்காக, அரசு வழங்கும் மானியம் அதிகரித்துள்ளது.

**மண்ணெண்ணெய்**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தேவைப்படும் மொத்த மண்ணெண்ணெயின் அளவு பின்வருமாறு:—

| முகவர் | அளவு (கி. லிட்டரில்) |
|---|---|
| பொது விநியோகத் திட்டம் | 72,430 |
| கை வண்டி வணிகர்கள் | 3,060 |
| இதர நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு | 157 |
| மொத்தம் .. | 75,647 |

மத்திய அரசு, இம்மாநிலத்தில் வழங்கப்படும் உருளை எரிவாயு இணைப்பினை கணக்கில்கொண்டு, 2000 ஆம் ஆண்டில் 77,108 கிலோ லிட்டர் என இருந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை, படிப்படியாகக் குறைத்து, தற்பொழுது 59,856 கிலோ லிட்டராக நிர்ணயித்துள்ளது. இவ்வொதுக்கீடு ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கே போதுமானதாக இல்லையென்பதால்

[2006 ஆகஸ்ட் 2

புதிதாக 2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 39.39 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு, மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை. இம்மாநிலத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை மாதத்திற்கு 59,856 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயிலிருந்து 76,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயாக உயர்த்துமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெட்ரோலிய நிறுவனங்களின் வழங்குமுனைகளிலிருந்து மொத்த வழங்கு நிலையங்களுக்கும், நியாய விலைக் கடைகளுக்கும் இடைப்பட்ட தூரத்தினைப் பொறுத்து பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் விலை, ரூபாய் 8.40லிருந்து ரூ.9.00 வரை அமையும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஒரு லிட்டருக்கு 60 காசு என்ற அளவில் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3.44 கோடி மானியம் வழங்குகிறது.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்**

பெட்ரோல் வழங்கு நிலையங்கள் போல மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை நிறுவி, சரியான முறையில் மண்ணெண்ணெயை விநியோகிக்கும் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு மண்ணெண்ணெய் நிலையம் அதிகப்படியாக 2 கிலோ மீட்டர் சுற்றளவிலுள்ள 12,000 குடும்பங்களுக்கு பயனளிக்கும். ஒரு மண்ணெண்ணெய் நிலையம் அமைக்க ரூ.4.50 இலட்சம் செலவாகும். 30-4-2006 அன்றைய நிலவரப்படி மாநிலத்தில் 309 மண்ணெண்ணெய் நிலையங்கள் செயல்படுகின்றன. குறிப்பிட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் 2,000 அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளிலும், மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களிலும் பொதுமக்கள் வசதிக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக மண்ணெண்ணெய் நிலையங்களிலும், நியாய விலைக் கடைகளிலும் கூட்டம் அலைமோதுவதில்லை.

**பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதை சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 36 மண்ணெண்ணெய் நிலையங்களும் நடப்பாண்டில் கணினிமயமாக்கப்படும்.**



2006 ஆகஸ்ட் 2]

## அத்தியாயம்–V

### பொது விநியோகத் திட்டத்தினை ஒழுங்குபடுத்துதல்

நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் முறைகேடுகள் செய்வோர்மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்பால் இந்த அரசு காட்டும் பொறுப்புணர்வுக்கு மாறாக, அரிசி போன்ற உணவுப் பொருட்களைக் கடத்தி அப்பாவி ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் கொள்ளையர்கள்மீது, மணல் திருடர்கள்மீது பாயும் குண்டர் சட்டம் போன்ற கடுமையான சட்டங்களின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

1-4-2006 முதல் 30-6-2006 வரை பல்வேறு துறைகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள பொருட்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | பொருட்கள் | அளவு | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அரிசி | 25508 மெ.டன் | 284.07 |
| 2 | மண்ணெண்ணெய் | 117 கி.லி | 14.39 |
| 3 | பெட்ரோல் | 1406 லிட்டர் | 0.59 |
| 4 | டீசல் | 7060 லிட்டர் | 2.00 |
| 5 | உருளை எரிவாயு | 4482 | 100.19 |
| 6 | மற்ற பொருட்கள் | | 3.12 |
| 7 | மொத்த மதிப்பு | | 404.36 |

இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட 386 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், கடந்த இரு மாதங்களில் 14 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் காவல் துறையினருக்கு பறிமுதல்

செய்யப்படும் பொருட்களின் மதிப்பில் 10% அதிகபட்சமாக ரூபாய் 25,000/- பரிசாக வழங்குவது நடைமுறையில் உள்ளது.

**பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களை கடத்துவது பற்றிய தகவல்களை சரியான நேரத்தில் முழுமையாக தெரிவிப்பவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். கடத்தல் பற்றிய தகவல்களை, உணவுத் துறை அமைச்சர் அலுவலகம், உணவுத் துறைச் செயலாளர், உணவுப் பொருள் வழங்கல் ஆணையர், நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், கூட்டுறவுத் துறைப் பதிவாளர், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்குத் தெரிவிக்கலாம். மேற்கண்ட அலுவலர்களின் தொலைபேசி எண்கள் பத்திரிகைமூலம் விளம்பரப்படுத்தப்படும். இவ்வாறு தகவல் தெரிவிப்பவர்களின் விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும். இந்நோக்கத்திற்காக இரகசிய காப்பு நிதி ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.**

பொது விநியோகத் திட்டத்தில் நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் பற்றிய விவரங்கள் கணினிமூலமாக கண்காணிக்கப்படும்.

**பொது விநியோக நிர்வாகத்தினை முழுவதும் கணினிமயமாக்கும் பொருட்டு, உணவுப் பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பணிகளை ஒருங்கிணைத்து கணினிகள்மூலம் மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த ரூபாய் 222.23 கோடி செலவு ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையை தேசிய மின்னணு நிர்வாக செயல்முறைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

**உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு 24 ஈப்புகள் (jeep) உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பறக்கும் படைக்கு வழங்கப்படும். பொது விநியோகத் திட்டம் செயல்படுவதைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும் வருவாய் கோட்ட அளவிலும் மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூடி பொது விநியோகத் திட்டத்தினை கண்காணித்து அதில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்கான ஓர் அமைப்பாக இது செயல்படுகிறது.**



தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தின்கீழ், பொதுமக்களின் குறைகளை போக்குவதற்கான அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**பணியாளர்களும் மற்றும் கட்டமைப்பு வசதிகளும்**

குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கையும், நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் கடந்த சில ஆண்டுகளாக பணிச் சுமை அதிகரித்துள்ளது, எனவே, பொது விநியோகத் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பது அவசியமான ஒன்றாகும்.

**சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் ஆணையர் அலுவலகத்திலும் மற்ற உணவுப் பொருள் வழங்கல் அலுவலகங்களிலும் காலியாக உள்ள 129 பணியிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். 14 வாகனங்கள் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு வழங்கப்படும். மேலும் பொது விநியோகத் திட்டங்கள் சிறப்பாக நடைபெறுவதற்காக உணவுப் பொருள் வழங்கல் ஆணையாளர் / துணை உணவுப் பொருள் வழங்கல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு செல்லிடத் தொலைபேசிகள் வழங்கப்படும்.**

பொது விநியோகத்தினை சிறப்பாக கண்காணிப்பதற்கும், அரிசி கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும், பறக்கும் படை வட்டாட்சியர்கள் அனைவருக்கும் வாகன வசதி செய்து தரப்படும்.

[2006 ஆகஸ்ட் 2

# அத்தியாயம்–VI

## நுகர்வோர் பாதுகாப்பு

### நுகர்வோர் விழிப்புணர்வு

பொதுமக்களிடையே நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை வளர்க்கும்பொருட்டு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் நுகர்வோர் உரிமைகள்மீதான விழிப்புணர்வை பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளன. பொதுமக்களிடையே நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை வளர்க்கும் திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கும், பல்வேறு பல்கலைக்கழகங்களிலுள்ள தேசிய சேவை திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. ஒவ்வொரு வருடமும், உலக நுகர்வோர் தினத்தினைக் கொண்டாட, மாநில அளவிலான கருத்தரங்கினையும், தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மாவட்டத்தில் கண்காட்சியையும் அரசு நடத்தி வருகிறது. நுகர்வோர் விழிப்புணர்வை வலுவாக்க நடத்தப்படும் கருத்தரங்கிலும், கண்காட்சியிலும் அனைவரும் கலந்து கொள்ளலாம். மேலும், மாவட்டந்தோறும் ஒவ்வொரு வருடமும் தேசிய நுகர்வோர் தினம், டிசம்பர் 24 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.

நுகர்வோர் நலன் குறித்த "நுகர்வோர் கவசம்" என்ற காலாண்டு இதழ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் வெளியிடப்படுகிறது. இவ்விதழ், தன்னார்வு நுகர்வோர் அமைப்புகள், நுகர்வோர் மன்றங்கள், அரசு மற்றும் பொது நிறுவனங்கள் மற்றும் அனைத்து மாவட்ட நூலகங்கள் முதலானவைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. மேலும் நுகர்வோர் விழிப்புணர்வை வளர்க்கும் நோக்குடன், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் மற்றும் விளம்பரப் பலகைகள் வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

ஊரகப் பகுதியிலுள்ள நுகர்வோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடும்பொருட்டு, மைய அரசு "ஜக்ரிதி ஷிவிர் யோஜனா" எனும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இந்த நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்களில் பட்டிமன்றம், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், ஓவியப் போட்டிகள் மற்றும் வினாடி வினா போட்டிகள் ஆகியன இடம் பெறும். 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.6 இலட்சம் செலவில் இத்திட்டம் 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.



2006 ஆகஸ்ட் 2]

நுகர்வோர்களுக்கு குறிப்பிட்ட துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளை கண்டறியும் நோக்குடன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினால் தொடர்புடைய துறைகளின் ஒத்துழைப்புடன், கருத்தரங்குகள் நடத்தப்படும்.

### நுகர்வோர் மன்றங்கள்

கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் மன்றங்களை துவங்குவதன் மூலமாக, பள்ளிக் குழந்தைகளை பல்வேறு நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி நுகர்வோர் கல்வி புகட்டிடவும் அரசு முடிவு செய்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986–இல் வழங்கப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் குறித்து பள்ளிக் குழந்தைகளுக்கு அறிவூட்டுவதும், இளம் வயதினர் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை புரிந்துகொள்ள முயல்வதற்கு அவர்களை திரட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்திலுள்ள 500 பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 'நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு' என்னும் தலைப்பில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தை வழிகாட்டியாக பயன்படுத்தும்பொருட்டு அனைத்து நுகர்வோர் மன்றங்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

### நுகர்வோர் பாதுகாப்பு இணையதளம்

நுகர்வோர்களுக்கு தகவலளிக்கும்பொருட்டு ஓர் இணையதளம் உருவாக்கப்பட்டு வருகிறது. தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவினால் இந்த இணையதளம் நிர்வகிக்கப்படும். இந்த இணையதளத்தில் 'ஆன்லைன்' முறையில் விவாதத்திற்கும் குறைதீர்ப்பிற்கும் வழிவகை செய்யப்படும். இப்பணியினை CORE மற்றும் மைய அரசால் ஏற்படுத்தப்பட்ட நுகர்வோர் ஒருங்கிணைப்புக் குழுவும் செய்யும்.

### தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி

தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதியினை ஏற்படுத்தி மாநில அரசின் பங்காக ரூ.50 இலட்சத்தை தமிழக அரசு வழங்கியுள்ளது. இதற்கு இணையான தொகையை மைய அரசு வழங்கும். இந்த நல நிதியின்கீழ் பல்வேறு நுகர்வோர் பாதுகாப்புத் திட்டங்களை

[2006 ஆகஸ்ட் 2

செயல்படுத்த தேவையான வழிகாட்டிகள் அடங்கிய தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி விதிகளை அரசு அறிவித்துள்ளது.

**நுகர்வோர் அமைப்புகளுக்கான விருதுகள்**

நுகர்வோர் விழிப்புணர்வுக்கு ஆற்றிய பணியின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் 3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசால் விருதளித்து கௌரவிக்கப்படுகின்றன. இதேபோல், மூன்று சிறந்த மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுமங்களுக்கும் விருது வழங்கப்படுகின்றது.

**மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுமங்கள்**

நுகர்வோர்களின் நலனை போற்றி வளர்த்திட, உணவு அமைச்சர் தலைமையில் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுமத்தினை அரசு ஏற்படுத்தியுள்ளது. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுமங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னையை பொறுத்தமட்டில், நுகர்வோர் பாதுகாப்புக் குழுமத்தின் தலைவராக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையர் உள்ளார். மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் துணை ஆணையர்கள் (சென்னை மாநகரம்) ஆகியோருக்கு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் எனவும் கூடுதலாக பதவிப் பெயர் வழங்கப்பட்டுள்ளதால், நுகர்வோர் நலன் தொடர்பான இனங்களில் அவர்களுக்கு பயிற்சியளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**விலை கண்காணிப்புக் குழு**

பல்வேறு சந்தைகளிலிருந்து தகவல்களை சேகரித்து, அவற்றை ஆய்வு செய்து, அத்தியாவசியப் பொருட்களின் சில்லறை விற்பனை மற்றும் மொத்த விற்பனை விலைகளின் போக்கினை கண்டறிந்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை ஒரே சீராக வைக்கும் பொருட்டு அரசு மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்மீதான பரிந்துரைகளை விலை கண்காணிப்புக் குழு வழங்குகிறது. சென்னை மாநகரத்தின் முக்கிய சந்தைகளான கோயம்பேடு, கொத்தவால் சாவடி, புளியந்தோப்பு, தி.நகர் மற்றும் அடையாறு ஆகிய இடங்களில் இருந்து தினந்தோறும் அத்தியாவசியப் பொருட்களின் சில்லறை மற்றும் மொத்த விற்பனை விலைகளை, விலை கண்காணிப்புக் குழு சேகரிக்கிறது. கடந்த பல ஆண்டுகளில் உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய உபயோகமான ஒரு தகவல் தொகுப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 2]

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்**

1986 ஆம் வருட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தமிழகத்தில் மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் பின்வரும் நீதிமுறைச் சார்புடைய அரசு இயந்திரங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் நுகர்வோர் குறைகள் விரைவாகவும் மிகவும் எளிமையாகவும் தீர்க்கப்படுகின்றன.

**தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்**

இவ்வாணையம் ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் உள்ளது. ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூபாய் ஒரு கோடிக்குள் நிவாரணம் வேண்டும் நுகர்வோர் இவ்வாணையத்தில் முறையிடலாம். இவ்வாணையத்தின் தலைவர், உயர் நீதிமன்றத்தின் ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியாவார். இவ்வாணையம் ஓர் ஆண் உறுப்பினர் மற்றும் ஒரு பெண் உறுப்பினர் ஆக இரண்டு உறுப்பினர்களைக் கொண்டதாகும். மேலும், இவ்வாணையம், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளின்மீது செய்யப்படும் மேல்முறையீடுகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரமும், மேலும், மாவட்ட மன்றங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

2006–2007 ஆம் ஆண்டில் இவ்வாணையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:—

| | மேல்முறையீட்டு மனுக்கள் | | | | அசல் மனுக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் |
| ஏப்ரல் 2006 | 2822 | 69 | 199 | 2692 | 380 | 4 | 9 | 375 |
| மே 2006 | 2692 | 49 | 162 | 2579 | 375 | 8 | 6 | 377 |
| ஜூன் 2006 | 2579 | 51 | 209 | 2421 | 377 | 6 | 7 | 376 |

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்**

நீதிச் சார்புடைய இம்மாவட்ட மன்றங்கள் முப்பது மாவட்டங்களில் செயல்படுகின்றன. இவற்றில் தனது எல்லைக்குட்பட்ட நுகர்வோர் ரூபாய் இருபது இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். இம்மாவட்ட மன்றத்தின் தலைவரோடு இரு உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களில் ஒருவர் ஆண் உறுப்பினர், மற்றொருவர் பெண் உறுப்பினராகவும் உள்ளனர்.

2006–2007 ஆம் ஆண்டில் மாவட்ட மன்றங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுற்ற வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| மாதம் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | இம்மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் 2006 | 6907 | 273 | 7180 | 240 | 6940 |
| மே 2006 | 6940 | 186 | 7126 | 166 | 6960 |
| ஜூன் 2006 | 6960 | 198 | 7158 | 159 | 6999 |





# அத்தியாயம்–VII

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 24–4–1972 அன்று இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–ன்கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் தமிழக அரசின் முழு ஆளுமைக்கு உட்பட்ட பொது நிறுவனமாக இது மாற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்வது, கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைப்பது, கிடங்குகளில் இருந்து இன்றியமையாப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்வது ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய பணிகளாகும். தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்குத் தேவையான பருப்பு மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்து அரசுக்கு வழங்கும் பணியிலும் இக்கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனரின் தலைமையின்கீழ் அமையப் பெற்ற நிர்வாக இயக்குனர்களால் இயக்கப்படுகின்றது. அதிகார பகிர்விற்காகவும், சீரிய நிர்வாகத் திறனுக்காகவும் இந்நிறுவனம் 31 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு முதன்மை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் / துணை ஆட்சியர் தகுதியில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 8,563 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நேரடி கொள்முதல் நிலையங்களின்மூலம் உழவர் பெருமக்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்துள்ள ஆதார விலையில் நெல்லினை கொள்முதல் செய்து, அதனை திறம்பட சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து, இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 23 நவீன அரிசி ஆலைகளிலும் மற்றும் தனியார் அரைவை ஆலைகளிலும் நெல்லினை அரைத்து பெறப்படும் அரிசியினை மத்திய தொகுப்பில் ஈடுசெய்து அதனை இக்கழகம் பொது விநியோகத் திட்டத்திற்குப் பயன்படுத்துகிறது.

தமிழக அரசால் நடத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், சத்துணவுத் திட்டம், முதியோர்

ஒய்வூதியத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து வளர்ச்சித் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவிகள் விடுதிகள் போன்றவற்றுக்குத் தேவையான அரிசி மற்றும் இதர உணவுப் பொருட்களை மாதந்தோறும் இந்நிறுவனம் வழங்குகிறது. காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை மற்றும் வனத் துறை ஆகியோருக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களையும் இக்கழகம் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை நடத்துகிறது. மேலும், கடலூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எரிவாயு அலகுகளை நடத்துதல், பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்துதல் போன்ற பணிகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

அமுதம் பல்பொருள் அங்காடிகளின்மூலம் தரமான பொருட்களை கொள்முதல் செய்து நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மத்திய அரசின் நலத் திட்டங்களான சம்பூர்ண கிராமின் ரோச்கர் யோஜனா திட்டம், அன்னபூர்ணா திட்டம், அந்தியோதயா அன்ன யோஜனா திட்டம் போன்ற நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து விநியோகிக்கிறது.

**நெல் கொள்முதல்**

நடப்பு 2005–2006 கொள்முதல் பருவம் 1–10–2005 முதல் தொடங்கியது. இப்பருவத்தில் மத்திய அரசு நெல்லுக்குண்டான குறைந்தபட்ச ஆதார விலையைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்துள்ளது:–

| | | |
|---|---|---|
| நெல் சாதாரண இரகம் | .. ரூ. 570. | (குவிண்டால் ஒன்றுக்கு) |
| நெல் சன்ன இரகம் | .. ரூ. 600 | (குவிண்டால் ஒன்றுக்கு) |

2005–2006 சம்பா பருவத்தில் கடும் மழை பெய்து பல இடங்களில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டது. அறுவடைப் பருவத்தில் நெல்லில் ஈரப்பதம் அதிகம் இருந்தமையால் பொதுவான தர நிர்ணயப்படி அனுமதிக்கப்பட்ட 17 சதவீதம் முறையான ஈரப்பதத்தை 20 சதவீதம் வரை தளர்த்தியும், நிறம் மாறிய நெல்லின் தரத்தை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் ஆக உயர்த்தியும், வெளியிடப்பட்ட



மத்திய அரசு ஆணையின்படி நெல் கொள்முதல் செய்யப்பட்டது. மொத்தத்தில் 1,108 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 15–7–2006 வரை மொத்தம் 12,54,104 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 30–9–2006 வரை தொடர்ந்து கொள்முதல் செய்ய இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

**நவீன அரிசி ஆலைகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 23 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றின் மொத்த அரவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 35,000 மெடன் ஆகும். 2005–2006 ஆம் ஆண்டில் இந்த நவீன அரிசி ஆலைகள் அரவை செய்த நெல்லின் அளவு 2,51,716 மெ.டன் ஆகும். இந்த அரிசி ஆலைகளின் அரவை அளவை கூடுதலாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த அரிசி ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்தவும், மாசுக் கட்டுப்பாட்டிற்காகவும் அடவத்தூர், பட்டுக்கோட்டை, கடச்சநேந்தல், சுந்தரக்கோட்டை, அம்மன்பேட்டை, எருக்கூர்-1, எருக்கூர்-2, திருநாகேஸ்வரம், சித்தர்காடு மற்றும் மானாமதுரை ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலைகளில் உருளை வடிவ அடுப்புகள் நிர்மாணித்து இயக்கப்பட்டு வருகின்றன.

**கிடங்குகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 253 கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 168 கிடங்குகள் இக்கழகத்திற்குச் சொந்தமானவை. கூடுதல் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்த 2006–2007–இல் நான்கு கிடங்குகள் கட்டப்படும்.

**நிதி ஆதாரம்**

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 35 கோடி ஆகும். 2006–2007–இல் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 33.39 கோடி ஆகும். இக்கழகம் மாநில அரசிடமிருந்து ரூ. 750 கோடி மானியமாகவும் ரூ. 150 கோடி வழிவகை முன்பணமாகவும் (Ways and Means Advance), ரூ. 200 கோடி சிறப்பு வழிவகை முன்பணமாகவும் (Special Ways and Means Advance) இதுவரை பெற்றுள்ளது.

[2006 ஆகஸ்ட் 2

## அத்தியாயம்–VIII

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டில் வேளாண் உற்பத்தி நிறுவனச் சட்டம் 1956–ன்படி தோற்றுவிக்கப்பட்டது. இச்சட்டமானது சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம், 1962 என மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 2–5–1958 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட இந்நிறுவனம், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 7 மண்டல அலுவலகங்களை ஏற்படுத்தி செயல்பட்டு வருகிறது. விஞ்ஞான ரீதியான சேமிப்புக் கிடங்குகளை அமைத்து வேளாண் பொருட்கள் வீணாகாமல் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் சேவை செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்நிறுவனத்தின் பணிகள் பின்வருமாறு:–

1. தமிழ்நாடு முழுவதும் 63 சேமிப்புக் கிடங்குகளை இயக்குதல்.
2. சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து சேமிப்புக் கிடங்கிற்கு தேவைப்படும் இடங்களை உறுதி செய்து அதற்கேற்ப நிலங்களை வாங்கி கிடங்கு வசதியினை ஏற்படுத்தி சேமிப்பு இழப்பினை குறைத்திடுதல்.
3. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்கு பற்றுச் சீட்டுகள் வழங்கி வங்கிகளில் கடன் வசதியினைப் பெற ஏற்பாடு செய்தல்.
4. சரக்குகளை ஏற்றி இறக்கும் பணிக்கு ஒப்பந்தக்காரர்களை நியமித்து சரக்கு வைப்பாளர்களின் தேவையை பூர்த்தி செய்தல்.
5. பூச்சித் தடுப்புப் பணியினை மேற்கொள்ளுதல்.

**நிர்வாகக் கட்டமைப்பு**

இந்நிறுவனத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகள் யாவும் இயக்குநர் குழுமத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

இயக்குநர் குழுவானது மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தமிழக அரசால் அவ்வப்போது அளிக்கப்படும் வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளின்படியும் செயல்பட்டு வருகிறது.





**இருப்பு வைப்பு கொள்ளளவு மற்றும் அதன் பயன்பாடு**

தமிழ்நாடு முழுவதுமாக, 63 இடங்களில் உள்ள சேமிப்புக் கிடங்குகளின் இடவசதியை பல்வேறு அரசுத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும், வணிகர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் வாடகைக்கு வழங்கி சேவை செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவு 5,99,810 மெ.டன் ஆகவும், வாடகைக்கு எடுக்கப்பட்ட கிடங்குகளின் கொள்ளளவு 36,000 மெ.டன் ஆகவும் உள்ளது. சென்ற ஆண்டு பயன்படுத்தப்பட்ட மொத்தக் கொள்ளளவு இடவசதி 68 விழுக்காடு ஆகும்.

**புதிய/கூடுதல் கிடங்குகள் கட்டுதல்**

நடப்பு ஆண்டில் 6,250 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றினை தருமபுரியிலும், 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை பல்லடத்திலும், 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை அவிநாசியிலும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நிதி**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆதார மூலதனம் ரூ. 800 இலட்சமாகும். தற்போது செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 761 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சம பங்குதாரர்களாக உள்ளனர்.

௳௳

D
V2, 31 P06
P06. 6.2

227417
சென்னை-600 009